(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 7.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் புத்தகம்

**2017 ஆகஸ்ட் 22, செவ்வாய்க்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து**
**2017 ஆகஸ்ட் 11, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2017 ஆகஸ்ட் 22, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

101/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மருத்துவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவற்றில் முழுநேரம் மற்றும் பகுதிநேரம் என்றவாறு பதிவு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மருத்துவர்களுக்குச் சொந்தமான தனியார் மருத்தவமனைகளின் எண்ணிக்கை பற்றி இறுதியாக தொகை மதிப்பொன்று மேற்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மீண்டும் தொகை மதிப்பொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பதிவுச் சான்றிதழ் இல்லாமல் தனியார் மருத்துவ நிலையமொன்றை நடத்துவதற்கு எதிராக எடுக்கக்கூடிய சட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) பதிவு செய்யப்படாத மருத்துவ நிலையங்கள் தொடர்பாக கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) பதிவு செய்யப்படாத மருத்துவ நிலையங்களின் உரிமையாளர்களான மருத்துவர்களின் பெயர்கள் மற்றும் வழங்கப்பட்டுள்ள தண்டனை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1175/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப்புக்காக செலவிடப்பட்ட மொத்த செலவினம் எவ்வளவென்பதையும்;

(ii) இத்துறைமுகத்தின் உடமையில் குறித்ததொரு சதவீதத்தை தனியார் துறைக்கு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இவ்வாறு விற்பனை செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படும் சதவீதம் யாதென்தையும்;

(iv) இவ்வாறு விற்பனை செய்வதன் மூலம் எதிர்ப்பார்க்கப்படும் குறைந்தபட்ச பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1198/ ' 16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 ஆண்டளவில் முல்லைத்தீவு மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1413/ ' 16

கௌரவ பந்துல குணவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் 177 ஆம் இலக்க முன்மொழிவின் படி, இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் பயிற்சி நிறுவனத்தில் பாடநெறிகளைக் கற்கும் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை, அவற்றின் பெறுமதி மற்றும் புலமைப்பரிசில் பெறுநர்களின் பெயர்ப்பட்டியல் ஆகியவற்றை சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) 1977 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை, இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதியின் மூலம் ஈட்டப்பட்ட வெளிநாட்டு செலாவணியின் அளவு ஒவ்வொரு வருடத்திலும் வளர்ச்சியடைந்த முறையைக் காட்டும் தரவு அட்டவணையை சமர்ப்பிப்பாரா;

(ii) 2015 ஆம் ஆண்டின் பின்னர் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக அரசாங்கத்தினால் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட மூலோபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை;

(iii) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை சீனாவுக்கு இரத்தினக்கல் ஏற்றுமதி தொடர்பில் ஏற்பட்ட போக்குகளை ஒவ்வொரு வருடத்தின் படி சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1580/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, கோட்டையில் அமைந்துள்ள இலங்கை வங்கியின், 5 ஆவது நகரக் கிளை 1975.05.15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படதென்பதையும்;

(ii) தற்போது 60,000 க்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் அங்கு கணக்குகளை ஆரம்பித்துள்ளனரென்பதையும்;

(iii) தற்போதைய முகாமைத்துவத்தில் காணப்படும் பலவீனமான உயிர்த்துடிப்பற்ற நிருவாகம் காரணமாக இவ்வங்கிக் கிளை ஓரளவு வீழ்ச்சியடைந்துள்ளதென்பதையும்;

(iv) இதன் காரணமாக இக் கிளையை, கொழும்பு நகர கிளையுடன் இணைக்க தயாராகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திறமைமிக்க சுறுசுறுப்பான முகாமைத்துவத்தின் கீழ் இக் கிளையை இதே இடத்தில் பேணிவருவதன் மூலம் 60,000 கணக்கு உரிமையாளர்களுக்கு வசதிகள் கிடைக்கின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வங்கிக் கிளையை இதே இடத்தில் பேணிவர நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1585/ ' 17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) Commonwealth Game என்ற பெயரில் இலங்கை வங்கியில் ஒரு கணக்கு பேணப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது யாரால் என்பதையும்;

(iii) அது ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) அக்கணக்கிற்கு அரச நிதி மற்றும் கொடைகள் எவ்வளவு வரவு வைக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(v) தற்போது அக்கணக்கில் சேமிப்பிலுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1594/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை புவிச்சரிதவியல் ஆய்வு, சுரங்கப் பணியகத்தினால் களிமண் மற்றும் மணல் அகழ்வு தொடர்பில் வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவ்வாறு உரிமப்பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஆட்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவை;

(iii) மேற்படி உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் பணியகம் பெற்றுக்கொண்ட வருமானம் யாது;

(iv) அதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பை தவிர்ப்பதற்காக பணியகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1607/ ' 17

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றபோது திரவ நிலைமைக்கு மாற்றப்பட்ட இயற்கை வாயுவைப் (LNG) பயன்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட இயற்கை வாயுவை வர்த்தக ரீதியாக பயன்படுத்திக் கொள்வதற்கு இன்னமுமே ஆற்றல் இல்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான திரவ நிலைக்கு மாற்றப்பட்ட இயற்கை வாயுவை இலங்கைக்கு இறக்குமதி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்துதல் தொடர்பாக அரசாங்கத்திடமுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

(iv) இன்றேல், திரவ இயற்கை வாயுவை அறிமுகம் செய்வதாகத் தெரிவித்து அரசாங்கம் டீசல் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற மின்உற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கும் செயற்பாட்டை மேற்கொள்கின்றதா என்பதையும்;

(v) அவ்வாறான அபாயகரமான நிலைமை காணப்படுமாயின், அரசாங்கம் புதுப்பிக்கத்தக்க சக்தியை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளாதிருப்பது ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1613/ ' 17

கௌரவ ஹேஷான் வித்தானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளை பாரிய கருத்திட்டங்களுக்காக வழங்குகின்ற முறையியல் யாது;

(ஆ) (i) வளவ வலயத்தில் சந்திரிக்காவெவ பிரிவில் டோல் லங்கா கம்பெனிக்கும் விற்றா ஓகனீ கம்பெனிக்கும் வாழைச் செய்கைக்காக வழங்கியுள்ள காணிகளின் அளவு வெவ்வேறாக யாது;

(ii) இக்காணிகள் உரிய முறையியலுக்கிணங்க வழங்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1629/ '17

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) *"சூர்ய பல சங்கிராமய"* கருத்திட்டத்தின் கீழ் இற்றைவரை சூரிய மின்சக்தி இணைப்புகளை பெற்றுக்கொண்டுள்ள பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) *"சூர்ய பல சங்கிராமய"* வேலைத்திட்டத்தின் கீழ் பாவனையாளரொருவர் இலங்கை மின்சார சபைக்கு வழங்குகின்ற மின்சார அலகொன்றுக்காக செலுத்தப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) ஆரம்ப கருத்திட்டத்தின் கீழ், எதிர்வரும் 5 ஆண்டு காலத்திற்குள் தேசிய முறைமைக்கு பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மின்சாரத்தின் கொள்ளளவு எவ்வளவென்பதையும்;

(iv) சூரிய மின்சக்தியை தேசிய முறைமைக்கு சேர்துக்கொள்வது தொடர்பாக மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சினால் காட்டப்படுகின்ற மந்தகதியிலான கொள்கைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1634/ '17

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சுண்ணாகம் பிரதேசத்தில் 10 மெகாவொட் வீதம் இரண்டு காற்று மின்சக்தி நிலையங்களை நிருமாணிப்பதற்காக இலங்கை மின்சார சபையினால் கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொண்ட இரண்டு கம்பனிகளும் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கம்பனிகளால் முன்வைக்கப்பட்ட விலைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1640/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அமைச்சுக்குரிய திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) அந்நிறுவனங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள கட்டிடங்களில் பேணப்பட்டு வருமாயின், அக்கட்டிடங்களின் பெயர்கள், அக்கட்டிடங்களுக்கான உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கட்டிடம் சார்பாகவும் அமைச்சினால் செலுத்தப்படுகின்ற வருடாந்த வாடகை ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) அமைச்சானது கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொண்டபோது பின்பற்றிய முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1672/ '17

கௌரவ ரீ ரஞ்சித் த சொய்சா,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இத்தடவை பயிர்ச்செய்கை போகத்தின்போது இலங்கையில் நெல் பயிரிடப்பட்ட முழு நிலப்பரப்பின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) நிலவும் கடும் வறட்சி காரணமாக பயிர்ச் சேதமடைந்த காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) வறட்சியினால் நாட்டுக்கு இழக்க நேரிடுமென மதிப்பிடப்பட்ட நெல்லின் அளவு எத்தனை மெட்ரிக் தொன்கள் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பயிர்ச் சேதமடைந்த விவசாயிகளுக்கு அரசாங்கம் வழங்குவதற்கு எதிர்பார்க்கும் நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அதற்காக கமத்தொழில் அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அப்பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1676/ '17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் கல்விக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கைநெறிகளின் எண்ணிக்கையையும் அவற்றின் பெயர்களையும் போதனாமொழி ரீதியாக அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு கல்விக் கல்லூரியில் நடாத்தப்படும் கற்கைநெறிகளின் பெயர்களையும்;

(ii) ஒவ்வொரு கற்கைநெறியிலும் பயிற்சியை மேற்கொள்ளும் பயிலுநர்களின் எண்ணிக்கையையும்;

(iii) மட்டக்களப்பு கல்விக் கல்லூரியில் சாத்தியமான ஏனைய தமிழ் மொழி மூலமான கற்கைநெறிகள் நடாத்தப்படாமைக்கான காரணத்தையும்;

(iv) மட்டக்களப்பு கல்விக் கல்லூரியில் சாத்தியமான ஏனைய தமிழ் மொழி மூலமான கற்கைநெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) அத்தகைய கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான விரிவுரையாளர்கள் இல்லையா என்பதையும்;

(vi) அவ்வாறெனில், அத்தகைய விரிவுரையாளர்கள் வகுதியொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1682/ '17

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒக்கம்பிட்டிய, கந்துருவெலானவை சேர்ந்த திரு டீ. எம். ஜயதிஸ்ஸ 1983 ஆம் ஆண்டில் பொலிஸ் சேவையில் இணைந்து பொ.கா. 5439 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இலக்கத்தின் கீழ் சேவையாற்றியுள்ளார் என்பதையும்;

(ii) பொலிஸ் அதிரடிப் படையில் 09 ஆண்டுகள் அம்பாறை, மட்டக்களப்பு பிரதேசங்களில் சேவையாற்றியுள்ளார் என்பதையும்;

(iii) 1994 ஆம் ஆண்டில் பொய் குற்றச்சாட்டொன்றின் பேரில் பொலிஸ் சேவையிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக பாராளுமன்ற பொது மனுக் குழுவிற்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து, மீளச் சேவையில் அமர்த்துமாறு வழங்கப்பட்ட கட்டளை நடைமுறைப்படுத்தப்படாமை காரணமாக 03 சந்தர்ப்பங்களில் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களை பரீசிலித்து இவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பதை பொது மனுக் குழு தீர்மானித்து நிலுவைச் சம்பளங்களுடன் மீள சேவையில் அமர்த்துமாறு மேற்கொள்ளப்பட்ட கட்டளையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மீளச் சேவையில் அமர்த்துமாறு பொது மனுக் குழுவினால் 03 சந்தர்ப்பங்களில் செய்யப்பட்ட கோரிக்கையை உதாசீனப்படுத்தியமை இவருக்கு செய்யப்பட்ட பாரிய அநீதி என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) பொது மனுக் குழுவின் கட்டளையை நடைமுறைப்படுத்தி திரு. ஜயதிஸ்ஸவை மீளச் சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 117 - நிகழ்ச்சித்திட்டம் 02,— †2017 சனவரி 1 ஆம் திகதியுடன் ஆரம்பித்து 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிற ஏதேனும் ஒரு நிதியம் ஒன்றிலிருந்தோ அல்லது நிதியிலிருந்தோ அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையிலிருந்தோ அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையிலிருந்தோ, 53 பில்லியன் ரூபாவிற்கு (ரூபா 53,000,000,000) விஞ்சாத குறைநிரப்புத் தொகை. அத்தொகை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவிடப்படல் வேண்டுமாக.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு | - 117 **உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு** | | |
| நிகழ்ச்சித்திட்டம் | - 2 **அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்** | | |
| | | | **ரூபா. மில்லியன்** |
| கருத்திட்டம் | - 3 **அதிவேகப் பாதை அபிவிருத்தி** | | 31,200.00 |
| | வெளிநாட்டுக் கடன் (நிதியியல் குறியீடு 12) | 30,000.00 | |
| | உள்நாட்டுக் கடன் (நிதியியல் குறியீடு 17) | 1,200.00 | |
| | (அட்டவணை 01) | | |
| | - 4 **பெருந்தெருக்கள் அபிவிருத்தி** | | 15,800.00 |
| | (வெளிநாட்டுக் கடன் மற்றும் உள்ளூர் நிதியங்கள் மற்றும் வெளிநாட்டுக் கடன்கள்) | | |
| | வெளிநாட்டுக் கடன் (நிதியியல் குறியீடு 12) | 14,500.00 | |
| | உள்நாட்டுக் கடன் (நிதியில் குறியீடு 17) | 1,300.00 | |
| | (அட்டவணை 02) | | |
| | - 6 **பாலங்களும் மேம்பாலங்களும் நிர்மாணம்** | | 6,000.00 |
| | வெளிநாட்டுக் கடன் (நிதியியல் குறியீடு 12) | | |
| | (அட்டவணை 03) | | |
| | | மொத்தச் செலவு | 53,000.00 |

(ரூபா ஐம்பத்தி மூன்று பில்லியன் மாத்திரம்)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2017 ஆகஸ்ட் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டைப் பார்க்கவும்.

* 2.

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மே 31 ஆம் திகதிய 2021/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின் கீழ், தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகள் தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மே 05 ஆம் திகதிய 2017/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.07.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

உண்ணாட்டரசிறைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் முத்திரைத் தீர்வை தொடர்பாக ஆக்கப்பட்டு, 2017 பெப்புருவரி 21 ஆம் திகதிய 2007/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் ரஷ்ய சம்மேளனத்திற்கும் இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 07 ஆம் திகதிய 2022/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் உக்ரைனுக்கும் இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 02 ஆம் திகதிய 2021/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.07.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

குற்றச்செயல்களைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2017, மார்ச்சு 08) [1].

* 14.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2016.09.06 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.01.26 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 15.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2012),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2017.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2012.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.03.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2017.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.26 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2011),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2016.12.10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2011.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் ஒருங்கிணைந்த நிதிநிலைக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கை ஆகியன அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 18.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய சேமிப்பு வங்கியின் ஆண்டறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— நிதிச் சட்டத்தின் 35(3) ஆம் உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் உட்பிரிவின் கீழ், 2017.01.24 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய சேமிப்பு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 19.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— நிதிச்சட்டத்தின் 35(3) உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) உட்பிரிவின் கீழ் 2017.01.25 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்டதும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— நிதிச் சட்டத்தின் 35(3) உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) உட்பிரிவின் கீழ் 2017.03.08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 21.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) உட்பிரிவின் கீழ் 2017.03.21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட சுயாதீன பட்டயக் கணக்காளர்களின் கருத்துக்கள் உள்ளடக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 22.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— அரச மருந்துக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் (2013),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2016.07.08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான அரச மருந்துக் கூட்டுத்தாபன ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம், மனித சேமநலம் மற்றும் சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.07.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 23.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் (2013),— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவின் கீழ் 2016.07.21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம், மனித சேமநலம் மற்றும் சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.07.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 24.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் (2013),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2016.08.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்ட அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம், மனித சேமநலம் மற்றும் சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.07.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 25.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆவது பிரிவின் கீழ், மருத்துவ உபகரணங்களின் விலை குறித்தல் தொடர்பாக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்புருவரி 17 ஆம் திகதிய 2006/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 26.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 27.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

29.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# 2017 ஆகஸ்ட் 23, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

112/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புத்தேகம வைத்தியசாலையின் சிகிச்சைகூட கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டு வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அக்கட்டிடத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட ஒப்பந்தகாரரின் பெயர் யாதென்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரருக்கு மொத்தப் பணத்தொகையும் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், செலுத்தப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒப்பந்தகாரரின் ஏதேனும் பணத்தொகை தடுத்து வைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், தடுத்து வைக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கட்டிடத்தின் சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இதனால் நோயாளிகளினதும் வைத்தியசாலையின் பணியாளர்களினதும் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இற்றைவரை இக்கட்டிடம் திருத்தப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி கட்டிடத்தை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

(iii) மேற்படி திருத்தப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரரின் பெயர் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2.

1176/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலையின் பங்கு உரிமையாளர் ஒருவராக திரு. கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இக்காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலையின் தலைவராக இவர் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலை ஈட்டிய வருடாந்த இலாபம் ஒவ்வொரு ஆண்டு அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1199/ ' 16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 ஆண்டளவில் கிளிநொச்சி மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1414/ ' 16

கௌரவ பந்துல குணவர்தன,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 199 இன் பிரகாரம், வெளிநாட்டு முதலீடுகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 50 நாட்களுக்குள் வேலைகள் ஆரம்பிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப் பட்டமையால், 2016 ஆம் ஆண்டில் அவ்வாறு 50 நாட்களுக்குள் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி புதிய அணுகுமுறையின் காரணமாக 2016 ஆம் ஆண்டில் நாட்டில் தொழில் முயற்சிகளை ஆரம்பித்த வெளிநாட்டுக் கம்பனிகளினால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் அளவு யாதென்பதையும்;

(iii) வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவருக்கு 50 நாட்களில் இலங்கையில் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இடமளிக்கும் செயன்முறையை அறிமுகப்படுத்தும் போது ஒப்பீட்டளவில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் பற்றிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1595/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் தற்சமயம் இயங்கிவரும் உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்தின் ஊடாக சேவை வழங்கப்படும் மக்களின் எண்ணிக்கை, காணிப் பரப்பளவு மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மக்களுக்கு கூடுதலான வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்காக புத்தளம் மாவட்டத்தில் புதிதாக நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) இவ்வாறு முன்மொழியப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களை விரைவாக நிறுவுவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1614/ ' 17

கௌரவ ஹேஷான் வித்தானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளில் மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கும் முறையியல் யாது;

(ii) வளவ வலயத்தில் மணல் அகழ்வு உரிமப்பத்திரம் பெற்றவர்களின் பெயர்ப்பட்டியலைச் சமர்ப்பிப்பாரா;

(iii) இந்த வலயத்தில் அத்துமீறிய மணல் அகழ்வு பெருமளவில் இடம்பெறுகின்றதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(iv) இந்த நிலைமையைத் தடுப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1630/ '17

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்தல் தற்போது உலகத்திலுள்ள உற்பத்திச் செலவு மிகக் குறைந்த புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலமாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) 2016.09.06 ஆம் திகதி அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட "சூரிய பல சங்கிராமய" எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தற்போது தேசிய மின்சார முறைமைக்கு சேர்க்கப்பட்டுள்ள மின்சாரத்தின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1635/ '17

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனியார்) கம்பனி (Lanka Coal Company (Pvt.) Ltd.) தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி கம்பனியின் கணக்குகள் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எந்நிறுவனத்தினால் என்பதையும்;

(iv) கணக்குகள் கணக்காய்வு செய்யப்படவில்லையெனின் அதற்கான காரணம் யாதென்பதையும்;

(v) மேற்படி கம்பனியினால் கணக்கீடு தொடர்பாக உரிய தரநியமங்கள் பேணிவரப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்த முடியுமா என்பதையும்;

(vi) மேற்படி கம்பனி கணக்கீடு தொடர்பாக உரிய தரநியமங்களை பேணிவருவதற்கு தவறியிருப்பின், அதற்கு பொறுப்புக்கூறவேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1641/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த சில மாதங்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியின் காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) மேற்படி வறட்சியின் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள், பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கலநல சேவை வலயங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) அவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையினால் ஏதேனும் நட்டஈடு செலுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த விவசாயிகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்படுதலை விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் ஊடாகப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1695/ '17

கௌரவ முஹமட் நவவி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) நுரைச்சோலைக் கிராமத்தில் சிறுவர் பூங்காவொன்றினை அமைப்பதற்கான அங்கீகாரத்தை புத்தளம் மாவட்டத்திலுள்ள கல்பிட்டிய பிரதேச சபை 2013 ஆம் ஆண்டில் வழங்கியதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அத்தகைய சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டதா என்பதையும்;

அவர் அறிப்பாரா?

(ஆ) (i) இந்நோக்கத்திற்காக கிடைக்கப்பெற்ற நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) அந்நிதியைப் பெற்றுக்கொண்டவர் யார் என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

1712/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டு முதல் இன்று வரை கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட டெங்கு நோயாளிகள் எத்தனை பேர் என்பதையும்;

(ii) அவர்களில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் போது மரணமடைந்தவர்கள் எத்தனை பேர் என்பதையும்;

(iii) டெங்குத் தொற்று காரணமாக கிண்ணியா வைத்தியசாலையில் வைத்தியர்கள், பணியாட்டொகுதியினர், கட்டில்கள் மற்றும் இடவசதிகளுக்கான பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றதா என்பதையும்;

(iv) இந்த நிலைமையை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகளையும்;

(v) கிண்ணியா வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர்களுக்கான தட்டுப்பாடானது நோயாளிகளை திருகோணமலை வைத்தியசாலைக்கு மாற்றுவதை கட்டாயப்படுத்தியுள்ளது என்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1732/ '17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு கல்வி வலயத்தின் கீழும் காணப்படுகின்ற முஸ்லிம் பாடசாலைகளின் எண்ணிக்கையையும்;

(ii) இஸ்லாம், இஸ்லாமியக் கற்கைகள், அரபு ஆகிய கற்பித்தல்களை மேற்படி வலயங்களில் மேற்பார்வை செய்கின்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் (இஸ்லாம்) பெயர்களையும்;

(iii) உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் (இஸ்லாம்) இல்லாத கல்வி வலயங்களின் பெயர்களையும்;

(iv) இந்த கல்வி வலயங்களில் மேற்படி பாடங்கள் தொடர்பான கற்பித்தலை மேற்பார்வை செய்வதற்கு பணிக்கப்பட்ட மேற்பார்வையாளர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை கல்வி நிர்வாக சேவை (விசேட பதவியணி - இஸ்லாம்) தொடர்பான வர்த்தானி அறிவித்தலில் இதற்கென இரண்டு வெற்றிடங்கள் மாத்திரம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிந்ததையும்;

(ii) கலைத்திட்டத்தில் சமயப் பாடம் கட்டாயமானதென்பதையும்;

(iii) இஸ்லாம் பாடத்தை மேற்பார்வை செய்யாமல் விடுவதானது முஸ்லிம் மாணவர்களுடைய சமயக் கல்வியில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துமென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) இலங்கை கல்வி நிர்வாக சேவை (விசேட பதவியணி - இஸ்லாம்) பதவியணியில் அதிகரிப்பினை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) இல்லையெனில், பதிற் கடமை அடிப்படையில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களை (இஸ்லாம்) நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், எப்போது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

13.

1775/ '17

கௌரவ ஜயந்த சமரவீர,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.03.31ஆம் திகதியன்று உள்ளவாறு இலங்கையிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணம், மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) 2017.03.31ஆம் திகதியன்று உள்ளவாறு கடமையில் ஈடுபட்டுள்ள கிராம அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அந்த எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணம், மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2017.03.31ஆம் திகதியன்று உள்ளவாறு வெற்றிடமாக உள்ள கிராம அலுவலர் பதவிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்:

(ii) அந்த எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணம், மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு வாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) குறித்த வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக கிராம அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், பரீட்சை நடாத்தப்பட்ட ஆண்டு மற்றும் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனின், குறித்த நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vii) கிராம அலுவலர் பதவிக்காக தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(viii) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1200/16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 ஆண்டளவில் மன்னார் மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1415/ ’16

கௌரவ பந்துல குணவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட பிரேரணை இலக்கம் 199 இன் பிரகாரம், வெளிநாட்டு கம்பனிகள் பட்டியலிடப்பட்ட பங்குகளிலில் முதலீடு செய்வதிலிருந்து கிடைக்கப்பெறும் பங்கிலாபம் போன்றவை வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்டமையினால் 2016 ஆம் ஆண்டில் இலங்கை பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளின் வெளிநாட்டு முதலீடுகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கை பங்குச் சந்தையில் ஏற்பட்ட போக்குகள் பற்றிய (அங்கீகரிக்கப்பட்ட சுட்டெண்களின்படி) அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டவர்கள் இலங்கை பங்குச் சந்தையிலிருந்து அகற்றிக்கொண்டுள்ள முதலீடுகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) இலங்கை பங்குச் சந்தையின் புத்தெழுச்சிக்காக முன்மொழியப்பட்ட மாற்றங்களும் அரச நிதி மற்றும் வரி ஊக்குவிப்புகளும் யாவையென்பதையும்;

(v) 2016 வரவுசெலவுத்திட்டத்தில் பிரேரிக்கப்பட்டுள்ள மூலதன வரியை எதிர்காலத்தில் பங்குப் பரிவர்த்தனைக்கு அறிமுகப்படுத்தும் நோக்கமொன்று உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2017 ஆகஸ்ட் 24, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

115/ ' 15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்கொழும்பு கடல் நீரேரியின் முகத்துவாரத்தை அண்டியதாக அமைந்துள்ள வன பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கண்டல்தாவர நிலப் பரப்பில் எட்டு ஏக்கர் பிரதேசத்தை வீடமைப்புக் கருத்திட்டம் உள்ளடங்கலான அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கு சுற்றாடலியலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி திட்டத்தின் பிரகாரம் குறிப்பிட்ட நிலப்பரப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள நிர்மாணிப்புகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கண்டல்தாவர நிலப்பரப்பில் நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்கு வன பாதுகாப்புத் திணைக்களத்திலிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகளுக்கான அனுமதி சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) இன்றேல், இக்கருத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை மேற்கொள்ளும் சட்ட ரீதியான முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1173/ ' 16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாது;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவின் குடியிருப்பாளர்கள் அரசாங்க காணிகளை அளிப்பு/உரிமப்பத்திரங்கள் வாயிலாக பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளார்களா;

(iii) ஆமெனில், அக்கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி விண்ணப்பதாரிகளுக்கு இற்றைவரை அளிப்பு / உரிமப்பத்திரங்கள் வாயிலாக வழங்கப்படுள்ள காணிகளின் அளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1177/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு விமானப் பயணங்கள் பற்றி அரசாங்கத்தின் திட்டவட்டமான கொள்கையொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) இலங்கை விமானப் படையின் ஹெலிகொப்டர்களை இலவசமாக பயன்படுத்துவதற்கு உரித்துடைய அரசாங்க பதவி வகிப்பவர்கள் யாவர் என்பதையும்;

(iii) இலங்கை விமானப் படையின் ஹெலிகொப்டர்களை இலவசமாக பயன்படுத்துவதற்கு உரித்துடைய அரசாங்க நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) அரசாங்க பணத்தில் உள்நாட்டில் விமானப் பயணங்களை மேற்கொள்ளக்கூடிய பதவிகளை வகிப்பவர்கள் யாவர் என்பதையும்;

(v) 2015.01.09 ஆம் திகதி தொடக்கம் 2016.10.31 ஆம் திகதி வரையான காலத்தில் அரசாங்க பணத்தில், அரச கூட்டுத்தாபன அல்லது நியதிச் சபைகளின் பணத்தில், அரசாங்க கம்பனிகளின் பணத்தில் உள்நாட்டு விமானப் பயணங்களை மேற்கொண்ட அரசாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பெயர்கள், இவர்கள் உள்நாட்டு விமானப் பயணங்களில் ஈடுபட்ட சந்தர்ப்பங்கள், இவ்வாறு விமானப் பயணங்களை மேற்கொள்வதற்கான காரணங்கள் மற்றும் இப்பயணங்களுக்கான செலவுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1201/ ' 16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 ஆண்டளவில் திருகோணமலை மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1416/ ’16

கௌரவ பந்துல குணவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 199 ஆம் இலக்க முன்மொழிவுக்கமைவாக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு முன்மொழியப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஏற்புடையதாக அமைகின்ற வகையில் அறிமுகம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற செலாவணி முகாமைத்துவச் சட்டத்தில் உள்ளடங்குகின்ற பிராதானமான மாற்றங்கள் யாவையென்பதையும்;

(iii) செலாவணி முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் இலங்கையின் சென்மதி நிலுவையில் மூலதனக் கணக்கினைத் திறப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) சார்க் வலயம் உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் சென்மதி நிலுவையில் மூலதனக் கணக்கினைத் திறந்துள்ள நாடுகள் யாவையென்பதையும், அந்நாடுகளில் ஏற்பட்ட வெளிநாட்டு நிதிப் பாய்ச்சல் போக்குகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

6.

1539/ ’17

கௌரவ சமிந்த விஜேசிறி,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இற்றைவரை பதுளை மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவ் விளையாட்டு மைதானங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விளையாட்டு மைதானத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) ஏற்புடைய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தங்களை பெற்றுக்கொண்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் இவர்களுக்கு அமைச்சினால் செலுத்தப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1615/ ’17

கௌரவ ஹேஷான் வித்தானகே,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்னபுரி மாவட்டத்தில், எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் எரி எண்ணெய் சார்ந்ததாக மின்சாரம் உற்பத்தி செய்யும் மின்உற்பத்தி நிலையமொன்று உள்ளது என்பதையும்;

(ii) இந்த மின்உற்பத்தி நிலையத்தின் மூலம் பலத்த சுற்றாடல் சேதம் ஏற்படுகின்றது என்பதையும்;

(iii) இந்த மின்உற்பத்தி நிலையத்துக்கான சுற்றாடல் உரிமப்பத்திரம் உரிய முறையில் வழங்கப்படுவதில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இந்த மின்உற்பத்தி நிலையம் உரித்தாயுள்ள கம்பனி யாது;

(ii) இக்கம்பனியுடன் உடன்படிக்கை செய்துகொண்டுள்ள கால எல்லை யாது;

(iii) மேற்படி சுற்றாடல் சேதத்தைக் குறைத்து பிரதேச மக்கள் வாழ்கைக்கு நிவாரணமளிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்று உள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1632/ '17

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்சாரம் தொடர்பாக கேள்வி தரப்பிலான முகாமைத்துவம் (Demand Side Management) பற்றி விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மின்சாரம் தொடர்பாக கேள்வி தரப்பிலான முகாமைத்துவம் பற்றி மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டம் இற்றைவரை அடைந்துள்ள முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1636/ '17

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனியார்) கம்பனி (Lanka Coal Company (Pvt.) Ltd.) தாபிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்,

(ii) மேற்படி கம்பனியில் தற்போது பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி கம்பனியின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் யாவரென்பதையும்;

(iv) 2016 யூலை மாதத்திற்கு ஏற்புடையதாக மேற்படி கம்பனியின் தலைவர், பணிப்பாளர் சபை மற்றும் ஊழியர்கள் பெற்றுக்கொண்டுள்ள சம்பளம் மற்றும் அனைத்துக் கொடுப்பனவுகளும் யாதென்பதையும்;

(v) மேற்படி கம்பனி தாபிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறியுள்ளதா என்பதையும்;

(vi) நிலக்கரி கொள்வனவு செய்தல் போன்ற பாரிய தொழில்முயற்சி நடவடிக்கையொன்றை மேற்கொள்வதற்கு மேற்படி கம்பனிக்கு ஆற்றல் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1668/ ’17

கௌரவ அசோக்க பிரியந்த,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தில் காட்டு யானைகள் கிராமங்களில் நுழைந்ததன் காரணமாக உயிரிழந்த ஆட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவ்வாறு உயிரிழந்த ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) புத்தளம் மாவட்டத்தில் காட்டு யானைகளின் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iv) இப்பிரச்சினையை எதிர்நோக்கவேண்டியேற்பட்டதன் காரணமாக உயிரிழப்புகள், வீடுகள் மற்றும் பயிர்ச் சேதங்கள் ஏற்பட்ட ஆட்களுக்கு அமைச்சின் ஊடாக நிவாரணம் வழங்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனின், அந்த நிவாரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1683/ ’17

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1987 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தின் முனங்குடிச்சி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஏறாவூர் புன்னகுடா மீனவக் கிராமத்தில் குடியிருந்த திரு. டபிள்யு. ஹரிசன் பர்னாந்து உள்ளிட்ட கிராமவாசிகள் மீது புலிப் பயங்கரவாதிகளால் கடும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு பலர் கொல்லப்பட்டார்கள் என்பதையும்;

(ii) அச் சம்பவத்தினால் இவருக்குச் சொந்தமான வர்த்தக நிலையம், வாகனங்கள் மற்றும் இவருக்குச் சொந்தமான அனைத்தையும் இழந்துள்ளாரென்பதையும்;

(iii) ஆட்கள், சொத்துக்கள் மற்றும் கைத்தொழில் புனர்வாழ்வளிப்பு அதிகாரசபையினால் 1996.03.14 ஆம் திகதிய கடிதம் மூலம் மேற்படி விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் இதுவரை இவர் உள்ளிட்ட மேற்படி குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கேற்பட்ட சேதம் தொடர்பாக எந்தவொரு நிவாரணமும் அளிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மொணறாகல மாவட்டத்தின் வெல்லவாய, வருணகம எனப்படும் கிராமத்தில் தற்போது குடியிருக்கும் திரு. ஹரிசன் பர்னாந்துவிற்கு ஏற்பட்ட சேதத்துக்கு இழப்பீட்டுத் தொகையொன்றை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இழப்பீட்டுத் தொகை செலுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

1689/ ’17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— மலை நாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் மத்துகம, வோகன் தோட்டத்தின், கீழ்பகுதியில் ஏற்பட்ட மண்சரிவின் பின்னர் 14 குடும்பங்கள் கடும் இடர்காண் நிலைமையில் இன்னமுமே அங்கு குடியிருக்கின்றனர் என்பதையும்;

(ii) இவ்விடத்திலிருந்து இம்மக்களின் குடியிருப்புகளை அகற்ற வேண்டுமமென 2014 யூன் மாதத்தில் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் தோட்ட முகாமைத்துவத்துக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மாற்று இடங்களை ஒதுக்குதல் தொடர்பில் தோட்ட முகாமைத்துவத்துக்கும் இம்மக்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக மாற்றுக் காணிகளை வழங்குதல் தாமதமாகியுள்ளது என்பதையும்;

(iv) இதனையொத்த மண்சரிவு ஆபத்து காணப்படுகின்ற அகலவத்த, டெல்கித் தோட்டத்தில், இலுப்புவத்த பகுதியிலும் 21 குடும்பங்கள் கடந்த சுமார் 2 வருட காலமாக வசிக்கின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்டவாறு பாதிப்புக்குள்ளாகி, உயிர் ஆபத்துக்கு முகம்கொடுத்துள்ள மக்களுக்காக ஏதேனும் வீடமைப்புத் திட்டமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அதன் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

1693/ ’17

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையின் மொத்த எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தலைவரினதும் பணிப்பாளர் சபையினரினதும் மாதாந்த சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவரின் பெயர் யாதென்பதையும்;

(iv) மேற்படி பதவியை வகிப்பதற்கு இவர் பூர்த்தி செய்துள்ள கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1694/ '17

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கைத்தெழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புல்மோட்டை, இலங்கை கனிய மணல் கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினர் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கம்பனியின் தற்போதைய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கடந்த ஆண்டில் இக் கமபனி ஈட்டிக்கொண்டுள்ள இலாபம் எவ்வளவென்பதையும்;

(iv) இக்கம்பனியின் கீழ் இயங்குகின்ற பிரிவுகள் யாவையென்பதையும்;

(v) ஒவ்வொரு பிரிவிலும் கடமையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கம்பனிக்கு புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களை ஆட்சேர்ப்பதற்காக பின்பற்றியுள்ள ஆட்சேர்ப்பு முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1696/ ' 17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில், உலபனை பிரதேசத்தில் அமைந்துள்ள திரு. ரோஹண விஜேவீரவினால் பயன்படுத்தப்பட்ட காணி மற்றும் வீடு தற்சமயம் அரசாங்கத்தினால் ஏதேனுமொரு அலுவலுக்கு பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி காணி மற்றும் வீடு அரசாங்கத்தின் அலுவலுக்காக சுவீகரிக்கப்பட்டிருப்பது இவரது குடும்பத்திற்கு அல்லது வேறு நிறுவனமொன்றுக்கு இழப்பீட்டுத் தொகையொன்று செலுத்தப்பட்டதன் பின்னரா என்பதையும்;

(iii) ஆமெனின், செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை மற்றும் திகதி யாதென்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி காணி மற்றும் வீடு அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட அடிப்படை மற்றும் தற்சமயம் உரிமை கோரும் அடிப்படை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 ஆகஸ்ட் 25, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

116/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிவாரி மாணவர்களுக்காக ஆரம்பப் பட்டப் பாடநெறிகளை நடாத்துகின்ற இலங்கையின் அரச பல்கலைக்கழகங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகங்களால் நடத்தப்படுகின்ற பாடநெறிகள் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின்படி தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின்படி தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்காக இறுதியாக மாணவர்கள் பதிவு செய்யப்பட்ட திகதி ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின்படி தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மாணவர்களைப் பதிவு செய்தல் முறைசார்ந்த கால இடைவெளியின்படி மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) ஆரம்ப வெளிவாரிப் பட்டத்திற்கான மாணவர் பதிவை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1202/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 ஆண்டளவில் வவுனியா மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1418/ ' 16

கௌரவ பந்துல குணவர்தன,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவு இலக்கம் 198 இல் காட்டப்பட்டுள்ளவாறு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பின்வரும் ஒவ்வொரு துறை சார்பாகவும் இலங்கைக்குக் கிடைக்கப்பெற்ற நேரடி வெளிநாட்டு முதலீடுகள் யாவை

(i) எண்ணெய் சுத்திகரிப்பு;

(ii) புதுப்பிக்கதக்க வலுசக்தி;

(iii) ஒருங்கிணைந்த மோட்டார் வாகன உற்பத்தி;

(iv) வலயத்தின் பொருட்டு உருக்குப் பாலங்களை உற்பத்தி செய்தல்;

(v) உரம், ட்ரிபல் சுப்பர் பொசுபேற்று உற்பத்தி;

(vi) செய்மதித் தொழில்நுட்பம்;

(vii) விமானங்களுக்கான திருத்தங்கள் மற்றும் அதற்கு உதவியான செயற்பாடுகள்;

(viii) ஒருங்கிணைந்த சீனி உற்பத்தி;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015.01.01 ஆம் திகதி உள்ளவாறு இலங்கை அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகளின் அளவு யாதென்பதையும்;

(ii) 2017.01.01 ஆம் திகதி உள்ளவாறு அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகளின் அளவு யாதென்பதையும்;

(iii) பிச் ரேட்டிங் மற்றும் மோச்சி நிறுவனங்களால் 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள சர்வதேச கடன் தரப்படுத்தல்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1511/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட வாகன விபத்துக்களின் எண்ணிக்கை மற்றும் வாகன விபத்துக்களின் காரணமாக நிகழ்ந்த மரணங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கு ஒப்பீட்டளவில், 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வாகன விபத்துக்களின் எண்ணிக்கை மற்றும் வாகன விபத்துக்களின் காரணமாக நிகழ்ந்த மரணங்களின் எண்ணிக்கை எவ்வளவு தொகையால் அதிகரித்துள்ளதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1540/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக நீர் மூலங்கள் வற்றியமையால் உடபேருவ, அராவத்த, மக்குல் எல்ல, எகொடகம உள்ளிட்ட பதுளை மாவட்ட மக்கள் பாரிய பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா;

(ii) மேற்படி மக்களுக்கு குடிநீர் மற்றும் ஏனைய நீர் வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பார;

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1620/ ' 17

கௌரவ ஹேஷான் விதானகே,— புத்த சாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எம்பிலிப்பிட்டிய நகரத்தில் வர்த்தக நிலையங்களைக் கொண்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களுக்காக பௌத்த அலுவல்கள் திணைக்களத்துக்கு வரி செலுத்த நேரிட்டுள்ளதென்பதை அறிவாரா;

(ii) இதற்கான வரி அறவிடப்படுவது உரிய காணிப்பகுதிக்காகவா ; இன்றேல், வர்த்தகர்கள் தமது செலவில் நிர்மாணித்துள்ள கட்டிடங்களுக்காகவா என்பதை குறிப்பிடுவாரா;

(iii) மேற்படி வரி அறவீட்டுடன் தொடர்புடையதாக, பௌத்த அலுவல்கள் ஆணையாளரினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பிப்பாரா;

(iv) இத்தகைய வர்த்தக நிலையமொன்றை வேறொரு ஆளுக்கு விற்பனை செய்யும்போது கிடைக்கும் பணத்தில் 25% ஏற்புடைய விகாரைக்கு செலுத்த வேண்டுமென பௌத்த அலுவல்கள் ஆணையாளரின் கட்டளையொன்று உள்ளதா;

(v) ஆமெனில், தமது தனிப்பட்ட பணத்தினால் நிர்மாணிக்கப்பட்ட பாரிய கட்டிடங்களுடன் தமது வர்த்தக நிலையங்களை விற்பனை செய்யும்போது இவர்களுக்கு பெரும் அநீதி ஏற்படுகின்றது என்பதை ஏற்றுக் கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1637/ ' 17

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் மாவட்டத்தின், பூநகரி பிரதேசத்தில் புதுப்பிக்கத்தக்க வலுசக்திப் பேட்டையொன்றை நிருமாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பேட்டையில் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் சூரிய மின்சக்தியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வலுசக்திப் பேட்டையில் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் காற்று மின்சக்தியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1669/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சபையின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் இயங்கி வரும் உள்ளூராட்சி நிறுவனங்களால் கழிவுப் பொருட்களும் குப்பை கூளங்களும் அகற்றப்படுகின்ற இடங்கள் யாவை என்பதையும்;

(ii) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்துக்கான கருத்திட்டமொன்று மேற்படி உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மேற்படி கருத்திட்டத்திற்கென, உள்ளூராட்சி நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கியுள்ள வசதிகள் மற்றும் பணத்தொகை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1684/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில், பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்குகின்ற மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

(iv) அதன் கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) அக் கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்கள் மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்படுகையில் உத்தியோகபூர்வமாக எல்லை நிர்ணய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பிரதேச செயலகத்துக்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது வழிநடத்தல் நடவடிக்கைகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப் படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

10.

1690/ ’17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000.05.05 ஆம் திகதிய 1130/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிபந்தனைகளுடனான உலக மரபுரிமை அந்தஸ்து நக்கல்ஸ் மலைத்தொடருக்கு கிடைத்ததென்பதையும்;

(ii) குறிப்பிட்ட நிபந்தனைகளிலுள்ள பிரதான நிபந்தனையின்படி, நக்கல்ஸ் மலைத்தொடருக்கு மிக அண்மையில் அமைந்துள்ள மினிப்பே, பன்வில, பாத்ததும்பர, லக்கல, வில்கமுவ, ரத்தொட்ட, உக்குவெல மற்றும் மாத்தளை ஆகிய 8 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குரிய 2000 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலப்பகுதி குறிப்பிட்ட மலைத்தொடருடன் ஒன்றிணைக்கப்படவில்லை என்பதையும்;

(iii) எனவே, நக்கல்ஸ் மலைத்தொடர் உலக மரபுரிமை அந்தஸ்திலிருந்து நீக்கப்படும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நக்கல்ஸ் மலைத்தொடர் உலக மரபுரிமை அந்தஸ்திலிருந்து நீக்கப்படுவதை தவிர்ப்பதற்காக மேலே குறிப்பட்ட 2000 ஏக்கர் நிலப்பரப்பை நக்கல்ஸ் மலைத்தொடருடன் ஒன்றிணைக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அதன் தற்போதைய நிலைமை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

1697/ ’17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த “கூகல் லூன்” கருத்திட்டம் தொடர்பில் கூகல் நிறுவனத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை அல்லது இணக்கப்பாட்டு ஆவணமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) இதற்காக கூகல் நிறுவனத்தை தெரிவு செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்ததன் அடிப்படை யாதென்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்திற்கென இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொடுப்பதற்கு இணங்கிய மற்றும் பெற்றுக்கொடுத்த வசதிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்காக இலங்கை அரசாங்கத்திற்கு செலவான பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) கூகல் நிறுவனம் ஆகாயத்துக்கு ஏவிய பலூன் கீழே வீழ்ந்தமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(vi) இது பற்றி விசாரணை நடத்தப்பட்டு அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) கூகல் நிறுவனம் இக்கருத்திட்டத்தை கைவிட்டதாக அறிவித்துள்ளதா என்பதையும்;

(viii) ஆமெனின், குறித்த உடன்படிக்கை மற்றும் இணக்கப்பாடு முறிந்தமையால் ஏற்பட்ட நிதி ரீதியான மற்றும் ஏனைய சேதங்கள் யாவை என்பதையும்;

(ix) மேற்படி சேதங்களுக்காக பொறுப்பை ஏற்க வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

118/ '15

கௌரவ புத்திக பத்திறன,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெஹிவளை மிருகக் காட்சிச்சாலையில் மிருகங்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான வசதிகள் குறைந்த மட்டத்தில் காணப்படுவதையும்;

(ii) மிருக வைத்தியர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதையும்;

(iii) இந்த நிலையில் மிருகங்கள் சில உயிரிழந்திருப்பதையும்;

(iv) மேலும் சில மிருகங்கள் நோய்வாய்ப்பட்டிருப்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 2013.01.01 ஆம் திகதி தொடக்கம் 2015.06.30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் உயிரிழந்த மிருகங்களின் வகைகள், வயது மற்றும் உயிரிழப்பதற்கான காரணங்கள் வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) தெஹிவளை மிருகக் காட்சிச்சாலைக்கு இணைக்கப்பட்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச மிருக வைத்தியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) தற்போது தெஹிவளை மிருகக் காட்சிச்சாலையில் பணியாற்றும் மிருக வைத்தியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) தெஹிவளை மிருகக் காட்சிச்சாலையில் மிருகங்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

13.

1203/'16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 ஆண்டளவில் மட்டக்களப்பு மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1420/ ’16

கௌரவ பந்துல குணவர்தன,— தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் 187 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட டிஜிட்டெல் அடையாள அட்டையின் பருமட்டான வடிவமைப்பை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி அடையாள அட்டையை விநியோகிக்கும் அதிகாரி யாரென்பதையும்;

(iii) பிரசைகளுக்கு அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள செலவினம் யாதென்பதையும்;

(iv) அச்செலவினம் யாரால் ஏற்கப்படுமென்பதையும்;

(v) 2017 ஆம் ஆண்டில் டிஜிட்டெல் அடையாள அட்டை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்க வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1512/ ’17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு அரச மற்றும் அரசசார் துறைகளின் மொத்த தொழில்நிலை யாதென்பதையும்;

(ii) 2016.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு அரச மற்றும் அரசசார் துறைகளின் தொழில்நிலை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 2016.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு அரச மற்றும் அரசசார் துறைகளின் தொழில்நிலை ஆண்/பெண் பால்நிலைக்கேற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2014.12.31 மற்றும் 2015.12.31 ஆம் திகதிக்கு ஒப்பீட்டளவில் 2016.12.31 ஆம் திகதி உள்ளவாறு அரச மற்றும் அரசசார் துறைகளின் தொழில்நிலை அதிகரித்துள்ள அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 செப்தெம்பர் 06, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

119/ '15

கௌரவ புத்திக பத்திறன,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013.06.30 ஆம் திகதி தொடக்கம் 2015.06.30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஒழுக்காற்று நடவடிக்கையாக, மாணவத் தகுதி நிலை இரத்துச் செய்யப்பட்ட வகுப்புகள் தடைசெய்யப்பட்ட மற்றும் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை பல்கலைக்கழக ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) அவ்வாறான ஒவ்வொரு மாணவரினதும் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் பல்கலைக்கழக ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கக் காரணம், ஒவ்வொரு மாணவர் ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மாணவர் போராட்டங்களுக்கான தீர்வு ஒழுக்காற்று நடவடிக்கை அல்ல என்பதையும்;

(ii) மாணவர்களது கோரிக்கைகள் பற்றிக் கவனமாக செவிசாய்க்க வேண்டும் என்பதையும்;

(iii) பல்கலைக்கழகங்களில் வசதிகளை அதிகரிக்க வேண்டும் என்பதையும்;

(iv) மாணவர்களின் எதிர்கால தொழில் எதிர்பார்ப்பினை பாதுகாகக்க வேண்டும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) பல்கலைக்கழகங்களில் உருவாகும் மாணவர் போராட்டங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான நடவடிக்கைகள் ஊடாக மாணவர் போராட்டங்கள் குறைந்துள்ளனவா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1043/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபையின் வருடாந்த அமர்வுக்கான சனாதிபதி அவர்களின் விஜயத்தின்போது கலந்து கொண்ட தூதுக் குழுவினர் எத்தனை பேர்;

(ii) மேற்படி விஜயத்தில் கலந்து கொண்ட ஆட்களின் பெயர்கள் மற்றும் இவர்கள் தூதுக் குழுவில் உள்ளடங்கிய அடிப்படை வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி விஜயத்துக்காக அரசு, அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தச் செலவுகள் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1622/ ’17

கௌரவ ஹேஷான் விதானகே,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் சீனித் தேவையைப் பூர்த்தி செய்கையில் செவனகல சீனித் தொழிற்சாலை மிக முக்கியமானது என்பதையும்;

(ii) அதன் மூலம் பெருந்தொகையான நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன என்பதையும்;

(iii) தற்போது இத்தொழிற்சாலையை சார்ந்ததாக வழங்கப்பட்டுள்ள காணிகளில் விவசாயிகள் கரும்புச் செய்கையை மேற்கொள்ளாது வேறு பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) செவனகல சீனித் தொழிற்சாலை சார்ந்ததாக கரும்புச் செய்கைக்கென விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணியின் ஹெக்டயார் பரப்பளவு எவ்வளவு;

(ii) தற்போது கரும்புச் செய்கை மேற்கொள்ளப்படுகின்ற காணியின் ஹெக்டயார் பரப்பளவு எவ்வளவு;

(iii) நாளுக்கு நாள் கரும்பு விவசாயி வேறு பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டுவருவதால் இத்தொழிற்சாலையிலிருந்து எதிர்பார்க்கப்படும் உற்பத்தியைப் பெற்றுக்காள்ள முடியாது போகலாம் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) ஆமெனில், இத்தொழிற்சாலையிலிருந்து அதிக உற்பத்தியைப் பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1639/17

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நோபல் ரிசோசஸ் லிமிட்டட் எனும் கம்பனியினால் இலங்கை மின்சார சபைக்கு இடைக்கிடை வழங்கப்பட்டுள்ள மொத்த நிலக் கரியின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலக்கரி சார்பாக குறிப்பிட்ட கம்பனிக்குச் செலுத்தப்பட்டுள்ள மொத்த பணத் தொகை யாதென்பதையும்;

(iii) குறித்த கம்பனியானது உரிய நேரத்திற்கு நிலக்கரி வழங்குவதற்கு தவறியதன் காரணமாக நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் தொழிற்பாட்டினை இடைநிறுத்த வேண்டியேற்பட்ட காலப்பகுதி யாதென்பதையும்;

(iv) அவ்வாறு மின் பிறப்பாக்கி இயந்திரங்களின் தொழிற்பாடு இடைநிறுத்தப்பட்டதன் விளைவாக இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நோபல் ரிசோசஸ் லிமிட்டட் நிறுவனத்தினால் பெறப்பட்டுள்ள இலக்கம் LCC/09/T/02, LCC/01 மற்றும் LCC/13/T/01 கேள்விப்பத்திரங்களுக்கு ஏற்புடையதான இலங்கையின் உள்ளூர் பிரதிநிதிகள் வெவ்வேறாக யார் என்பதையும்;

(ii) பெறுகை செயல் நடைமுறையைக் கருத்திற்கொள்ளாது மேற்படி நிலக்கரி வழங்கல் குறிப்பிட்ட கம்பனிக்குப் பெற்றுக்கொடுக்கப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1642/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாணத்தில் காணப்படுகின்ற மொத்த பான்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் வசிக்கும் மொத்த பிக்குமார்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஏகாதிபத்தியவாதிகளின் செயற்பாடுகள் காரணமாக ஊவா மாகாணத்தின் பான்சாலை முறைமையானது பாரிய வீழ்ச்சிக்கு உள்ளாகியது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) வரலாற்று ரீதியாக ஊவா மாகாணத்திற்கு ஏற்பட்ட பாரிய அநீதியின் காரணமாக வீழ்ச்சிக்கு உள்ளாகியுள்ள பான்சாலை முறைமையை மீளக் கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1670/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சபையின் கீழ் இயங்கி வரும் மாறவில மருத்துவமனையில் இன்றளவில் கடமையாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை பதவிகளுக்கமைய தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) மேற்படி மருத்துவமனையை மேலும் அபிவிருத்தி செய்ய அமைச்சு எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1685/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில், லாஹுகல பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்குகின்ற மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்

(iv) அதன் கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) அக் கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்கள் மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்படுகையில் உத்தியோகபூர்வமாக எல்லை நிர்ணய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பிரதேச செயலகத்துக்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் கிராம அலுவலர் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது வழிநடத்தல் நடவடிக்கைகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக் கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

1691/ ’17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு கடந்த காலத்தில் மானிய விலையில் உரம் வழங்கும்போது, விவசாயிகள் ஒரு அந்தர் உரத்திற்கு வயல் காப்புறுதிக்காக ரூபா 150/- வீதம் செலுத்தியுள்ளனர் என்பதையும்;

(ii) மேற்படி காப்புறுதிப் பணத்தை செலுத்தியுள்ள விவசாயிகள், வயல்கள் சேதமடைந்த போது அதற்கான இழப்பீட்டுத் தொகையை இலகுவாகவே பெற்றுக்கொண்டனர் என்பதையும்;

(iii) தற்போது மேற்படி காப்புறுதிப் பணத்தொகையை அறவிடும் முறையியல் செயற்படுத்தப்படுவதில்லை என்பதையும்;

(iv) அண்மைக்காலமாக தொடர்ந்து ஏற்படுகின்ற காலநிலை மாற்றம் காரணமாக நெற் செய்கைக்கு ஏற்படுகின்ற பாரிய சேதங்கள் தொடர்பில் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகைகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகைகளை செலுத்துவதற்கு ஏதேனும் முறையியல் உள்ளதா என்பதையும்;

(ii) முன்னர் காணப்பட்ட விதத்தில் வயல் காணிகள் காப்புறுதி போன்ற கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2017 செப்தெம்பர் 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

387/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (6)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவத்துக்கு தேகப்பயிற்சிகளுக்குத் தேவையான கன்வஸ் பாதணிகளை கொள்வனவு செய்வதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்காக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்திருந்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் சமர்ப்பித்திருந்த கேள்விப்பத்திரங்களின் பெறுமதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்திற்கு கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டில் மேற்படி பாதணி கொள்வனவுடன் தொடர்புடைய, பாதுகாப்பு அமைச்சின் கேள்விப்பத்திர சபையில் இருந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்கள் கேள்விப்பத்திர சபையில் எவ்வளவு காலமாக பணியாற்றுகின்றார்கள் என்பதையும்;

(iii) 2015 ஆண்டில் மேற்படி பாதணி கொள்வனவுடன் தொடர்புடைய, இராணுவத்தின் கேள்விப்பத்திர சபையில் இருந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்கள் கேள்விப்பத்திர சபையில் எவ்வளவு காலமாக பணியாற்றுகின்றார்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பாதுகாப்பு அமைச்சின் மற்றும் இராணுவத்தின் கேள்விப்பத்திர சபைகளில் தொடர்ச்சியாக பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத்திகதியில் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

952/ ’16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரச ஊழியர்களுக்கு சலுகை விலையில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தபால்காரர்களும் மோட்டார் சைக்கிள்களைக் கோரியுள்ளார்கள் என்பதையும்;

(ii) இவர்களுக்கு இதுவரை மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவர்களுக்கு சலுகை விலையில் மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) அவ்வாறாயின், அது எத்திகதியிலிருந்து;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1101/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015.01.08 ஆம் திகதிக்குப் பின்னர் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் இற்றைவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வீடுகளின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்கூறிய வீடுகளை நிர்மாணிக்கும் போது வீடமைப்புக் கடன்களாக வழங்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்த வீடமைப்புக் கடன்கள் மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015.01.08 ஆம் திகதியின் பின்னர் அதிகாரசபையினால் இது வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள உதவிகள் பெறுனர்களின் வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) அதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்தப் பணத்தொகை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2015.01.08 ஆம் திகதியின் பின்னர் அதிகாரசபையினால் இது வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கிராமங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) அதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்தப் பணத்தொகை மாவட்ட அடிப்படையில் வெவ்வோறக எவ்வளவு என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

1125/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாடுகளின் கீழ், 2010ஆம் ஆண்டு முதல் இற்றைவரை பதுளை மாவட்டத்தினுள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பஸ் தரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பஸ் தரிப்பு நிலையங்களின் பெயர்கள் யாவை;

(iii) ஒவ்வொரு பஸ் தரிப்பு நிலையத்துக்கும் செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை வெவ்வேறாக யாது;

(iv) கருத்திட்டத்தினுள் உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பதுளை மாவட்டத்தின் ஏனைய பஸ் தரிப்பு நிலையங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1146/ ' 16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று ஓட்டமாவடி மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அப் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அப் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோக பூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

1153/ ’16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹோமாகம மற்றும் பண்டாரகம ஆகிய இரண்டு பிரதேச சபை ஆளுகைப் பிரதேசங்களுக்கும் சொந்தமான 98 ஏக்கர் பரப்பளவு கொண்ட பதுவில வத்த காணியில் சுற்றுலாத்துறை வீடமைப்புக் கருத்திட்டமொன்றை செயற்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இக்கருத்திட்டத்தை செயற்படுத்தும் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி யாது;

(iii) இவ்வீடமைப்புக் கருத்திட்டம் காரணமாக இப்பிரதேசத்தில் பலத்த சுற்றாடல் பாதிப்பு ஏற்படுகின்றதென்பதை அறிவாரா;

(iv) இவ்வீடமைப்புக் கருத்திட்டத்துக்கு இலங்கை முதலீட்டு சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா;

(v) இக்கருத்திட்டத்துக்கு சுற்றாடல் ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1278/ ’16

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2015.10.01 ஆம் திகதியாகின்றபோது கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கத்திற்கு சொந்தமாகவிருந்த மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) 2016.06.11 ஆம் திகதியாகின்றபோது மேற்படி சங்கத்திற்கு சொந்தமாகவிருந்த நிலையான வைப்புக்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது மேற்படி சங்கத்திலிருந்து கடன் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளில், கடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் இற்றைவரை கடன் தொகை விடுவிக்கப்படாதுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளுக்கு செலுத்த வேண்டியுள்ள மொத்த கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளுக்கு கடன் விடுவிக்கப்பட தாமதம் ஏற்பட்டுள்ளமைக்கான காரணம் யாதென்பதையும்;

(vii) மேற்படி சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு உரியவாறு கடன் தொகையை விடுவிப்பதற்கு இயலாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(viii) ஆமெனில், மேற்படி சங்கத்தின் நிதி நிருவாகத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1350/ ’16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மாணவர்களுக்கு வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளைக் கற்பதற்கு இருந்த வாய்ப்புகளைக் குறைப்பதற்கான கொள்கைத் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) 2016 ஆம் ஆண்டில் வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளுக்கு அனுமதிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பட்டப் பாடநெறி மற்றும் ஆண், பெண் எனும் அடிப்டையில் வெவ்வேறாக யாது;

(iii) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் உயர் தரம் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இலங்கையினுள் செயற்படுகின்ற வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப் பாடநெறிகளைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது;

(v) மேலே (iv) இல் குறிப்பிடப்பட்ட மாணவர்கள் கற்கும் பட்டப் பாடநெறிகள் யாவை;

(vi) இந்த ஒவ்வொரு பாடநெறியையும் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(vii) மேலே (v) மற்றும் (vi) க்கு விடை அளிக்கப்படாவிடின், அது ஏன்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1360/ ’16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உயிர் முறைமை தொழில்நுட்பவியல் பாடப் பிரிவில் கல்வி பயின்று, 2015 ஆம் ஆண்டு முதற் தடவையாக க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றி, அதில் உயர் மட்ட பெறுபேறுகளைப் பெற்றுள்ள இரத்தினபுரி மாவட்ட மாணவர்கள் இதுவரை எந்தவொரு பல்கலைக் கழகத்திற்கும் அனுமதிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பல்கலைக்கழக கைநூலில் மேற்படி பாடம் தொடர்பான பட்டப் பாடநெறிக்கு சப்பிரகமுவ பல்கலைக்கழகம் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், மேற்படி பல்கலைக்கழகத்திற்கு இதுவரை எந்தவொரு மாணவரும் அனுமதிக்கப்படவில்லை என்பதையும்;

(iii) மேற்படி மாணவர்களுக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி கொழும்பு போன்ற வசதிகள் மிக்க மாவட்டங்களிலிருந்து குறைந்த Z புள்ளியின் கீழ் மாணவர்கள் 80 – 90 பேருக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைத்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதி தொடர்பாக சனாதிபதி, பிரதம அமைச்சர், அமைச்சர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை எவ்வித நீதியும் நிறைவேற்றப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ii) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1388/ ’16

கௌரவ பந்துல குணவர்தன,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 142 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், உள்நாட்டு பால் உற்பத்தியின் பொருட்டு ஆகக் குறைந்த முதலீடாகிய ரூபா 25 மில்லியனுக்கு உட்பட்ட வகையில் தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கு குறைபயன்பாட்டு அரச காணிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு கருதப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவின் பிரகாரம் அரச காணிகளுக்காக விண்ணப்பித்த கம்பனிகளின் அல்லது ஆட்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு அரச காணிகள் தொடர்பான பட்டியலொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) வெளி விவசாயிகளைக் கொண்டு உயர் ஆக்கவிளைவுடனான புல் பயிரிடலுக்காக மேற்படி காணிகளிலிருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள ஏக்கர்களின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1506/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016.12.31 ஆம் திகதியிலான ஊழியர் சேமலாப நிதியத்தின் இயங்கும் கணக்குகளின் எண்ணிக்கைக்கமைய தனியார் துறையில் தொழில் புரிவோர் எவ்வளவு;

(ii) 2014.12.31 மற்றும் 2015.12.31 ஆம் திதகதிகளுக்கு ஒப்பீட்டளவில் 2016.12.31 ஆந் திகதியிலான தொழில் புரிவோரின் அதிகரிப்பு எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1548/ ’17

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சிறியளவிலான நீர்ப்பாசன அபிவிருத்திக்காக திருகோணமலை மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள், ஒவ்வொரு கமநல சேவைப் பிரிவு மற்றும் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(ii) அந்நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்பட்ட குளங்கள் மற்றும் அதற்காக செலவு செய்யப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அபிவிருத்தியின் காரணமாக நெல் விளைச்சலில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதன் அளவு எவ்வளவு;

(iii) செலவு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கமைய, இவ்வுற்பத்தி அதிகரிப்பு போதியதாகக் காணப்படுகின்றதா;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குறிப்பிட்ட வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் சரியான முறையில் நடைபெறவில்லை என விவசாயிகள் குற்றஞ்சாட்டுவதால், இவ்வபிவிருத்தி வேலைகள் தொடர்பாக பின்னாய்வு செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை;

(iii) இன்றேல், இவ்வபிவிருத்தி வேலைகள் தொடர்பாக பின்னாய்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

13.

1586/ ’17

கௌரவ சந்தித் சமரசிங்க,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை சப்ரகமுவ முதலமைச்சர் பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு வாகனத்தின் வகையும் இலக்கங்களும் யாவை என்பதையும்;

(iii) அந்த ஒவ்வொரு வாகனத்தின் பராமரிப்புக்காக செலவிடப்பட்ட பணத் தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) முதலமைச்சர் வாகனங்களை தவறாக பயன்படுத்திய அமைச்சு இது தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

14.

1600/ ’17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நுரைச்சோலை நிலக்கரி மின்நிலையத்திலுள்ள மின் சக்தி நிலையங்கள் மூன்றினதும் ஆயுட் காலம் முடிவடையும் ஆண்டு யாது என்பதையும்;

(ii) மேற்படி மின்சக்தி நிலையங்களின் ஆயுட்காலம் முடிந்த பின்னர் அந்த மூன்று மின்சக்தி நிலையங்களிலிருந்தும் பெறப்பட்ட மின்வலுவை பெற்றுக்கொள்ளும் மாற்று வழிமுறை யாது என்பதையும்;

(iii ) மேற்படி மின்சக்தி நிலையங்களில் அடிக்கடி ஏற்படுகின்ற தொழில்நுட்ப நெருக்கடிகளை ஆராயும் போது உரிய காலத்திற்கு முன்னர் அந்த மின்சக்தி நிலையங்களை மூடிவிடுவதால் ஏற்படக்கூடிய நிலைமை தொடர்பில் நீண்டகால மின் பிறப்பாக்கத் திட்டங்களை தயாரிக்கும் திட்ட வகுப்பாளர்களின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

15.

1675/ ’17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2008 டிசம்பரில் மட்டக்களப்பு, கோப்பாய், கொட்டகலை ஆகிய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலிருந்து தமது பயிற்சியினை நிறைவு செய்ததன் பின்னர் வன்னி மாவட்ட பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை பயிற்சி நிறைவுபெற்றவுடன் உடனடியாக பரீட்சையை நடத்துகின்ற செயன்முறைக்கு முரணாக, 2009 ஏப்ரலில் இறுதிப் பரீட்சைக்கு தோற்றும் படி கோரப்பட்ட பயிலுநர்களின் பெயர்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) அந்த மாவட்டத்தில் நிலவிய யுத்த சூழ்நிலையின் காரணமாக அந்த பயிலுநர்களினால் அந்த மாவட்டத்திலிருந்து வெளியே வரமுடியாத நிலைமை காணப்பட்டது என்பதையும்;

(ii) இவர்கள் தமது கனிஷ்ட பிரிவினருடன் பரீட்சைக்கு தோற்றியதுடன் கனிஷ்டப் பிரிவினர் விடையளித்த அதே வினாக்களுக்கு இவர்களும் விடையளித்தனர் என்பதுடன், கனிஷ்ட பிரிவினருக்கு சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி 2009.08.01 எனவும் அதேவேளை இவர்களுக்கான சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி 2011.01.01 என மாறுபட்ட செல்லுபடியாகும் திகதிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) கனிஷ்டப் பிரிவினருக்கான சான்றிதழ் செல்லுபடியாகும் திகதியிலிருந்து இவர்களுக்கான சான்றிதழும் செல்லுபடியாகும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

# 2017 செப்தெம்பர் 08, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

892/ '16

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவில், துலா வெல்லிய கிராமத்தை சார்ந்து வாழும் "வன்னி சிங்கள" என்ற இனம் பற்றி ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கிராமத்தைத் தவிர இவ்வின மக்கள் வாழும் வேறு கிராம அலுவலர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) யுத்த காலத்தில் பல்வேறு பாதிப்புக்களை சந்தித்த இம்மக்கள் வாழும் கிராமங்களில் அடிப்படை தேவைகள் குறைந்த மட்டத்தில் நிலவுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) இவ்வசதிகளை துரிதகதியில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மக்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், எவ்வாறு என்பதையும்;

(iii) இம்மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1215/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அழிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அழிவடைந்துள்ள மேற்படி சொத்துகள் பற்றி அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சொத்துகளின் மொத்த பெறுமதி யாதென்பதையும்;

(v) அழிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி (i) - (vi) வரை விசாரிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1391/ ' 16

கௌரவ பந்துல குணவர்த்தன,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் நீரின வளர்ப்பு வலயமொன்றைத் தாபிக்கின்ற பாரிய கருத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகளுக்காக 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் 151 ஆம் இலக்க முன்மொழிவுக்கு அமைய ஒதுக்கப்பட்ட ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ஆண்டு இறுதியாகின்றபோது பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிகளின் ஏக்கர் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கான கருத்திட்ட அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) 2017 ஆம் ஆண்டில் இவ்வாறான நீரின வளர்ப்பு வலயங்கள் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1468/ ' 16

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இந்தக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் வழங்கப்பட்ட நிதியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படிக் கருத்திட்டங்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1501/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில், முந்தலம் பிரதேச செயலாளர் பிரிவில், ''சமீரகம மாதிரிக் கிராமம்'' அமைக்கப்பட்ட ஆண்டு யாது;

(ii) அதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சுவீகரிக்கப்பட்ட காணியின் மொத்த பரப்பளவு எவ்வளவு;

(iii) அதில் காணி பெறுநர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை, இக்காணி பெறுநர்களில் தற்போது நிரந்தரக் குடியிருப்பாளர்களாக இனங்காணப்பட்டிருக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் உப குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) குடியிருப்பாளர்களில் இனங்காணப்பட்ட உப குடும்பங்களின் நிரந்தரக் குடியிருப்புக்காக காணித் துண்டுகளை வழங்கும் வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவாரா;

(v) காணி பெறுநர்களுக்கு நிரந்தர உறுதிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1513/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் மரணித்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி வெளிநாட்டவர்களின் மரணத்திற்கு ஏதுவாயமைந்த காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1545/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் வாழ்வின் எழுச்சி நிவாரண உதவியை பெறுகின்ற பயனாளிகளின் வீடுகளைத் திருத்திக்கொள்வதற்காக ரூபா 2,500/- தொகை அளிப்பாக வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி தொகையானது திவிநெகும சமுதாய அடிப்படையிலான வங்கிகளின் மூலம் வழங்கப்பட்டிருப்பது திறைசேரியின் மூலம் மீளளிப்புச் செய்வதன் அடிப்படையிலா என்பதையும்;

(iii) ஆமெனில், இன்றளவில் மேற்படி பணத் தொகை மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) வீடுகளைத் திருத்துவதற்காக பணம் பெற்றுக்கொண்டவர்களிடமிருந்து மேற்படி பணத் தொகை மீளஅறவிடப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1549/ ’17

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிண்ணியா, எழிலரங்கு விளையாட்டு மைதானம் கடந்த சில வருடங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதென்பதையும்;

(ii) அதன் அபிவிருத்தி பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவென்பதையும்;

(iii) அதனூடாக செயற்படுத்தப்படுகின்ற பணிகள் யாவையென்பதையும்;

(iv) அப்பணிகள் பற்றி அங்கே இருக்கின்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் அறிந்திருக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) எழிலரங்கு விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக 2011 முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ஆண்டு வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அதன் மூலமாக செயற்படுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகள் யாவையென்பதையும்;

(iii) திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் கிழக்கு மாகாண சபை அறியாத வகையில் அமைச்சு நேரடியாகவே மேற்படி அபிவிருத்தி பணிகளை செயற்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கின்ற ஒப்பந்தகாரர் யாரென்பதையும்;

(v) மேற்படி ஒப்பந்தகாரருக்கு வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(vi) நீண்ட காலமாகியுள்ள போதிலும், அபிவிருத்திப் பணிகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் வெளிப்படைத்தன்மை காணப்படுவதை உறுதிப்படுத்துவாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

1575/ ’17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(ii) இவருக்குரித்தான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(iv) இவருக்குரித்தான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி இரு பதவிகளையும் ஒரே ஆள் வகிப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) இரு பதவிகளையும் ஒரே ஆள் வகிப்பது பொருத்தமற்றதென நிதி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) ஆமெனின், மேற்படி அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1581/ ’17

கௌரவ விதுர விக்கிரமநாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை இராணுவ ஆஸ்பத்திரியில் சிவில் பணிகளை மேற்கொள்கின்ற சிவில் ஊழியர்களாக நியமனம் பெற்றுள்ளவர்கள் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு கீழ்படிகின்றனர் என அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) எனினும், சேவைத் தேவையின் கீழ் இவ்வூழியர்கள் நாளொன்றுக்கு நேர வறையறையின்றி கடமையாற்றுகின்றனரென்பதையும்;

(iii) அவ்வாறு மேலதிக நேரம் கடமையாற்றிய போதிலும் இவர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவோ அல்லது வேறு கொடுப்பனவோ வழங்கப்படுவதில்லை என்பதையும்;

(iv) எனினும், இராணுவ முகாம்களில் கடமையாற்றுகின்ற சிவில் ஊழியர்களுக்கு ஒரு மாத காலத்திற்கு நூறு மணித்தியாலங்களை தாண்டாத மேலதிக நேர கொடுப்பனவு வழங்கப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இவ்வாறு ஒரு பிரிவினர் இழந்துள்ள மேலதிக நேர கொடுப்பனவை இவர்களுக்கும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

1587/ ’17

கௌரவ சந்தித் சமரசிங்க,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை சப்ரகமுவ மாகாணத்தின் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் வழங்கப்பட்டுள்ள பயணிகள் போக்குவரத்து உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த உரிமப் பத்திரங்களைப் பெற்ற நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) பயணிகள் போக்குவரத்து உரிமப் பத்திரங்கள் இன்றி சப்ரகமுவ மாகாணத்தில் பஸ்வண்டிகள் சேவையில் ஈடுபடுகின்றன என்பதையும்;

(ii) அதன் மூலம் சப்ரகமுவ பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு பெரும் நட்டம் ஏற்படுகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இது தொடர்பாக அமைச்சு எடுக்கும் நடவடிக்கை என்ன என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

12.

1589/17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் தொடக்கம் ஹபரன வரை புதிய புகையிரத வீதியொன்றை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், திட்டம் தயாரிக்கப்பட்ட வருடம் மற்றும் அது தொடர்பாக முன்னிலை வகித்த தொழில்நுட்பவியலாளர்கள் யாவர்;

(iii) அத்திட்டத்தின்படி பாதிப்புக்குள்ளாகும் மத நிலையங்கள், அரச கட்டிடங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) இதன் ஆரம்பத் திட்டம் இப்பாகமுவ, தம்புள்ள பிரதேசங்களில் மாற்றப்பட்டதா;

(v) ஆமெனில், அம்மாற்றம் செய்யப்பட்ட வருடம் யாது;

(vi) இது பற்றி ஏற்புடைய மக்களுக்கு அறிவிக்கப்பட்டதா;

(vii) ஆமெனில், அது எக்காலத்தில்;

(viii) அம்மக்களுடன் இணக்கப்பாட்டுக்கு வரப்பட்டதா;

(ix) இம்மாற்றத்தை செய்வதற்கான காரணம் யாது ;

(x) இம்மாற்றத்துக்கு உட்பட்ட நீளம் எவ்வளவு;

(xi) ஆரம்பத் திட்டத்துடன் ஒப்பிடுகையில் இரண்டாம் திட்டத்தினால் இப்பாகமுவ, தம்புள்ள பிரதேசங்களில் ஏற்படும் சொத்துக்களின் பாதிப்பு வெவ்வேறாக எவ்வளவு;

(xii) இரண்டாம் திட்டத்தை தயாரித்த தொழில்நுட்பவியலாளர் குழு உறுப்பினர்கள் யாவர்;

(xiii) இவ்விரு திட்டங்களையும் தயாரிப்பதற்கு இதுவரை செய்யப்பட்டுள்ள செலவினங்கள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1596/17

கௌரவ அசோக்க பிரியந்த,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாணத்திற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள உணவுப் பரிசோதகர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தற்போது சேவையாற்றுகின்ற உணவுப் பரிசோதகர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது மேற்படி பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படின், அதற்காக ஆட்சேர்ப்புச் செய்ய அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1616/ ’17

கௌரவ ஹேஷான் விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ள இராணுவ முகாம்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி முகாம்களை இடம்பெறச் செய்வதற்கு நிரந்தரமாகக் காணிகள் வழங்கப்பட்டுள்ளதா;

(iii) எம்பிலிப்பிட்டிய சந்திரிக்கா குளத்துக்கு அருகாமையிலுள்ள இராணுவ முகாமுக்கு காணி வழங்கப்பட்டுள்ள அடிப்படை யாது;

(iv) இக்காணியின் உரிமையாளர்கள் யாவர்;

(v) இக்காணியில் இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்படுவதால் அதன் சுற்றுப்புற மக்களுக்கும் சந்திரிக்கா குளத்தை அன்றாடம் உபயோகிக்கும் மக்களுக்கும் கடும் சிரமம் ஏற்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(vi) குளத்துக்கான ஒதுக்குப் பிரதேசத்தில் நிரந்தர கட்டிடங்களை அமைப்பதற்கு உரிய அனுமதி பெறப்பட்டுள்ளதா;

(vii) ஆமெனில், அதற்காக அனுமதி வழங்கியுள்ள நிறுவனங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1677/ ’17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்முனை மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளின் பெயர்களை வகுதி ரீதியாக ஒவ்வொரு பாடசாலையிலுமுள்ள ஆசிரியர்கள் பதவியணி மற்றும் தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை என்பவற்றுடனும்;

(ii) இந்த கிராமப்புற ஏழை மாணவர்களின் இலவசக் கல்விக்கான சம உரிமையை உறுதிப்படுத்துவதற்காக தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அண்மையிலுள்ள கல்வி வலயங்களிலுள்ள மேலதிக ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கு கிழக்கு மாகாணத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், எப்போது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 10/'15

கௌரவ புத்திக பத்திறண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா. 11/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா. 12/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேர்தல்கள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

4.

பா. 13/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா. 14/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

6.

பா. 15/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா. 16/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுக்களை தாபித்தல்,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா. 17/ '15

கௌரவ புத்திக பத்திறண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிகக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா. 18/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

10.

பா. 19/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா. 21 / ’15

கௌரவ புத்திக பத்திறண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா. 22 / ’15

கௌரவ புத்திக பத்திறண,— புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா.23/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— யாசகர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

14.

பா.24/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா.25/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா.26/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலைமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா.27/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

18.

பா.28/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் பிரேரிக்கின்றது.

19.

பா.29/'15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

20.

பா.30/'15

கௌரவ புத்திக பத்திறண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

21.

பா.31/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

22.

பா.32/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

23.

பா.33/ '15

கௌரவ புத்திக பத்திறண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

24.

பா.34/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

25.

பா.35/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

26.

பா.36/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

27.

பா.37/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய மற்றும் சர்வதேச எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுத்தல்,— தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினரின் எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் தொடர்பாக எதிர்வுகூறலை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட உற்பத்திகள் சார்ந்த சகல துறைகளுடனான இடைத் தொடர்புகளின் ஊடாகவும் நவீன தொழிநுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தியும் உற்பத்திச் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

28.

பா.38/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு டிஜிடல் நூலகமொன்றை தாபித்தல்,— இலங்கை மக்களின் மரபார்ந்த அறிவை பாதுகாத்து, போஷித்து அதனை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்வதற்கும், மரபணு வளங்கள் மற்றும் உயிர் மரபுரிமைகளின் தவறான பயன்பாட்டை தடுப்பதற்காகவும் விரிவான தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாலும் சுற்றாடல், சுதேச மருத்துவத் துறை, கமத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் உள்ளடங்கலாக சகல துறைகளுக்கும் டிஜிடல் தொழிநுட்பத்துடனான நவீன நூலகமொன்றை தாபிப்பதற்கும், அதன் பொருட்டு உலக புலமைச்சொத்து அமைப்பு (WIPO ), இலங்கை புலமைச்சொத்து பணியகம், சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமை அலகு உள்ளடங்கலாக சகல துறைகளும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

29.

பா.39/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவைப் பேணிப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவு கையாளப்படும் மருத்துவ முறைகள், கமத்தொழில், உணவுப் பாதுகாப்பு, கைப்பணிக் கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் காணப்படும் மரபார்ந்த அறிவை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு, உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் உள்ளிட்ட ஏற்புடைய துறைகள் ஒருங்கிணைந்து தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

30.

பா.40/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைக்கே தனித்துவமானதும் மருத்துவ ரீதியில் பெறுமதிமிக்கதுமான தாவரங்களின் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தைப் பெற்றுக்கொள்ளல்,— வெளிநாடுகள் இலங்கைக்கே தனித்துவமான, பெறுமதிமிக்க மூலிகைத் தாவரங்களின் விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்தினைக் கண்டறிந்து, அவற்றிற்கு மோசடியான முறையில் ஆக்க உரிமம் பெறுவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்கும் ஔடத உற்பத்தி மற்றும் அதன் மேம்பாட்டிற்கு அக் கூறுகளைப் பயன்படுத்துவதற்கும் உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து நிறுவனங்களும் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

31.

பா.41/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களை கைவிடல்,— ஜனாதிபதி, பிரதம அமைச்சர் உள்ளிட்ட பாராளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சகல மக்கள் பிரதிநிதிகளும் மாதாந்தம் தாம் ஆற்றும் சேவைக்குரிய சம்பளம் மற்றும்/அல்லது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதுடன், மேற்படி எந்தவொரு பதவியும் தன்னலமின்றி மேற்கொள்ளப்படுகின்ற கௌரவ சேவைகளாக இல்லாமையினாலும், மேற்படி பதவிகளை வகிப்பவர்களின் பெயர்களுக்கு எதிரே அல்லது பதவிக்கு எதிரே அதிமேதகு, பிரபு அல்லது கௌரவ ஆகிய பெயர்கள் மற்றும் பெயருக்குப் பின்னால் அவர்கள் போன்ற பதங்களை பயன்படுத்துவதானது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளதனாலும், மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

32.

பா.42/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரித்தல்,— பல்வேறு தரப்பினரால் முதிய பிரசைகள் புறக்கணிக்கப்படுவதால் நேரிடுகின்ற அநீதிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

33.

பா.43/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

34.

பா.44/ '15

கௌரவ புத்திக பத்திறண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

35.

பா. 45/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத் திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

36.

பா. 46/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

37.

பா. 47/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

38.

பா. 48/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

39.

பா. 49/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை/சுதேச சமையற்கலை தொடர்பில் நாட்டினுள் மக்கள் மனப்பான்மைகளை வளர்த்தல்,— இலங்கை/சுதேச சமையற்கலை பற்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே அதிக ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நாட்டினுள் மக்களின் மனப்பான்மைகளை இதன்மீது செலுத்துவதற்காக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் பாடநெறியில் சமையற்கலையை ஒரு பாடமாக சேர்ப்பதற்கும், அரச மற்றும் தனியார் துறை தலையீட்டின் அடிப்படையில் ஆராய்ச்சித் துறைகளை ஊக்குவிப்பதன் ஊடாக புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவும், இதனோடு தொடர்புடைய நிறுவன முறைமைகளை இணைத்து சான்றிதழ், டிப்ளோமா, பட்டம், பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை உருவாக்குவதன் மூலம் இத் துறை பற்றி மக்கள் மத்தியில் விரிவான விதத்தில் மனப்பான்மை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

40.

பா. 50/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது சுவையூட்டல் மற்றும் கலவையாக்கல் கலை, சமையற்கலை, நிறமூட்டல், உணவு வெட்டுதல் உள்ளிட்ட பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதனோடு இணைந்துள்ள இலங்கையின் உணவுக் கலாசாரம் பற்றி கற்றல், கற்பித்தல் வழிமுறைகள் ஊடாக எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்கும் அதேபோன்று உள்நாட்டு, வெளிநாட்டு மக்களிடையே எமது உணவுக் கலாசாரத்தை பரப்புவதன் ஊடாக இலங்கையின் தனித்துவத்தை சர்வதேச ரீதியாக மேலோங்கச் செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

41.

பா. 51/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களின் ஆராய்ச்சிகளுக்கான ஆய்வுக் கட்டுரைகளை அமைச்சுக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டு தயாரித்தல்,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்கள் தமது பாடநெறிகள் தொடர்பில் சமர்ப்பிக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துதல் முக்கியமானதாகையால், மேற்படி ஆய்வுக் கட்டுரைகளை மேற்பார்வை செய்யும் பேராசிரியர்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகள் ஏற்புடையதாகும் அமைச்சுக்களுக்கும் இடையில் சிறந்த தொடர்பினை ஏற்படுத்தும் முகமாக, குறித்த அமைச்சின் உத்தியோகத்தரொருவரை நியமிப்பதன் மூலம் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் மூலம் அமைச்சின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறை இலக்குகளை பூர்த்தி செய்யக் கூடிய விதத்திலான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமன இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

42.

பா. 52/ '15

கௌரவ புத்திக பத்திறண,— 18 வயது நிரம்பியவுடன் தேருநர் இடாப்புகளில் பெயரைச் சேர்த்தல்,— தேர்தல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் தேருநர் இடாப்புகளைத் திருத்தும் திகதிக்கு பின்னர் அல்லது முன்னரான திகதியில் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களுக்கு உரிய வயது நிரம்பிய திகதியிலேயே தேருநர் இடாப்புகளில் தமது பெயரை சேர்க்கக் கூடிய விதத்தில் நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

43.

பா. 53/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையினுள் சேலைன் உற்பத்திக்கான முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— இலங்கையினுள் வருடாந்தம் பாரியளவில் சேலைன் பயன்படுத்தப்படுவதுடன், சேலைன் இறக்குமதிக்காக பாரியளவு நிதி வருடாந்தம் வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுவதால், மேற்படி வெளிநாட்டுச் செலாவணியை நாட்டினுள் சேமிக்கும் நோக்கத்துடன், இலங்கையினுள் காணப்படுகின்ற உள்நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேலைன் உற்பத்தி செய்வதற்கு அரச, தனியார்துறை அல்லது கூட்டுறவுத்துறையை இணைத்துக் கொண்டு முறையானதொரு வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

44.

பா. 54/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்டு புதிய உற்பத்திகளை உருவாக்குதல்,— இலங்கையில் வருடாந்தம் பெருமளவில் தேங்காய் நீர் விரயமாவதால், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தின் கீழ் தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்ட புதிய உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு உருவாக்குவதற்கான முறையியலொன்று அமுல்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

45.

பா. 55/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கடலில் புதிய வளங்களை ஆய்வு செய்தல்,— மிகப் பெரிய கடற் பிராந்தியத்தைக் கொண்டுள்ளதொரு நாடான இலங்கை, மீன்பிடிக் கைத்தொழிலுக்கு மாத்திரம் முன்னுரிமையளித்துள்ளதோடு, கடல் சார்ந்ததாக பெருமளவு இயற்கை வளங்கள் காணப்படுவதால், நாட்டுக்கு பெரும் எண்ணிக்கையிலான தொழில்வாய்ப்புகளையும், செல்வத்தையும் ஈட்டும் நோக்கத்துடன் கடல் வளங்கள் தொடர்பாக முறைசார்ந்த மேலதிக ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

46.

பா. 56/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் மீன் வளத்தை வெளிநாட்டவர்கள் பிடிப்பதைத் தடுத்தல்,— இலங்கையின் மீனவர்களுக்கு பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்துகின்ற வகையில் இலங்கை கடற் பிராந்தியத்திலுள்ள மீன் வளம் வெளிநாட்டவர்களினால் பிடிக்கப்படுவதால், இலங்கை கடற் பிராந்தியத்தில் மீன் பிடிப்பதையும், வெளிநாட்டுப் படகுகள் மீன் பிடிப்பதற்கான இறங்குதுறையாக பயன்படுத்துவதையும் தடுப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

47.

பா. 57/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பலா உற்பத்தியை அதிகரிக்கச் செய்து அது சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்,— மிகவும் சுவையானதும், மருத்துவக் குணம் கொண்டதும், இரசாயனப் பதார்த்தங்கள் இன்றி பயிரிடக் கூடியதுமான பலாச் செய்கையை விஸ்தரிப்பதன் ஊடாக அது சார்ந்த உற்பத்திகளை அதிகரிக்கச் செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணியை எமது நாட்டினால் ஈட்டிக்கொள்ள முடியுமாயுள்ளதால், அது தொடர்பில் அரசாங்கத்தின் தலையீட்டுடன் முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

48.

பா. 58/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்றை வருடாந்தம் ஒழுங்குசெய்தல்,— ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனில், முக்கியமாக கமத்தொழிலில் செழிப்புற்றிருத்தல் வேண்டுமென்பதால், நாட்டை வளப்படுத்தும் கமக்காரர்களுக்கு தமது தொழில் தொடர்பாக அபிமானம் ஏற்படும் வகையில் முறைசார்ந்ததொரு ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

49.

பா. 59/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சலுகை விலையில் LED மின்குமிழிகளை நுகர்வோருக்கு வழங்குதல்,— இல்லங்களை ஒளியூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தரம் மிக்க LED மின்குமிழிகளின் விலை அதிகம் என்பதால், மின்சார சபை தலையிட்டு சலுகை விலையிலும் தவணைக் கொடுப்பனவு முறையிலும் இந்த மின் குமிழிகளை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுத்து தேசிய ரீதியில் பெருமளவில் மின்சாரத்தை சேமிப்பதற்கும், LED மின்குமிழிகளை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதன் மூலம் மின்சார சபைக்கு மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கும் இயலுமானவாறு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

50.

பா. 60/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சிறிய அளவிலான விளையாட்டுப் பொருட்கள் தொழிற்சாலைகளை விஸ்தரித்தல்,— இலங்கையினுள் விளையாட்டுப் பொருட்களுக்கு பாரியதொரு சந்தை காணப்பட்ட போதிலும், நாட்டினுள் அவை சிறிய அளவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்ற அதேவேளை, அதற்காக சீனா முதற்கொண்ட ஏனைய நாடுகளுக்கு பெருந்தொகை வெளிநாட்டுச் செலாவணி பாய்ச்சப்படுவதால், சிறியதொரு செலவினத்தை ஏற்க வேண்டியதான இக் கைத்தொழிலை கிராமியப் பிரதேசங்களில் விஸ்தரிக்கும் பொருட்டு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

51.

பா. 61/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையில் மருந்தாக்கல் தொழிற்சாலைகளை ஆரம்பித்தல்,— இலங்கையில் மருந்தாக்கலானது தற்போது ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாலும், மருந்துகளின் இறக்குமதிக்கென வருடமொன்றில் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணி செலவிடப்படுவதாலும், முன்னேற்றமடைந்த மனித வளத்தைக் கொண்டதொரு நாடு என்ற வகையில் இலங்கைக்கு அத்தியாவசியமான மருந்து வகைகளை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்வதற்கான வசதிகளை அரசாங்கத்தின் தலையீட்டுடன் பெற்றுக்கொடுத்து மருந்தாக்கல் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

52.

பா. 62/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலை பாடத்திட்டத்தில் உளவியல் பாடத்தைச் சேர்த்தல்,— பாடசாலை மாணவர் சமுதாயத்தை ஆரோக்கியமான மனநிலை கொண்ட, சாதுரியமான முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாக தயார்படுத்தும் பொருட்டு ஆறாம் தரத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பௌத்த உளவியல் மற்றும் மேலைத்தேய உளவியல் ஆகிய இரண்டு பாடங்களையும் ஒருங்கிணைத்து முறையாக தயாரிக்கப்பட்ட "உளவியலும் தியானமும்" என்ற பெயரில் ஒரு பாடத்தை பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

53.

பா. 63/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஓய்வுபெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைத்தல்,— ஓய்வு பெற்றவர்களுக்கான உளவள ஆலோசனைச் சேவைகள், மருத்துவ வசதிகள் மற்றும் பகல்நேர காப்பக சேவைகள் ஆகிய வயோதிகர்களுக்குத் தேவையான பல்வேறு நலன்புரிச் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைப்பதற்கும், மேற்படி நிலையங்களை மையப்படுத்தி ஏதேனும் உற்பத்தி நடவடிக்கையில் ஓய்வு பெற்றவர்களை ஈடுபடுத்துவதன் ஊடாக அவர்களின் வாழ்க்கைக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கின்ற அதேவேளை, மேலதிக வருவாயை ஈட்டிக்கொள்ளக் கூடிய வகையிலும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் நாடு முழுவதிலும் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

54.

பா. 64/ '15

கௌரவ புத்திக பத்திறண, — ஓய்வுபெற்றவர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்தல்,— ஓய்வு பெற்றுள்ள அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கும், அவர்களுடைய நலன்புரி நடவடிக்கைகளுக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

55.

பா. 65/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவித்தல்,— சுற்றுலாப் பயணிகளுக்கு பயன்மிக்கதும், கண்ணியம் மிக்கதுமான சேவையை வழங்குபவர்களாக ஆக்குவதற்கும் மேலும் இவர்களது வாழ்க்கைத் தொழில் மட்டத்தை உயர்த்துவதற்குமாக சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவிப்பதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

56.

பா. 66/ '15

கௌரவ புத்திக பத்திறண,— காணி தொடர்பில் வலுவிலுள்ள சட்டங்களைத் திருத்துதல்,— இலங்கையில் தற்போது போலியான உறுதிகளைத் தயாரித்து காணிகளை விற்பனை செய்யும் மோசடிச் செயலொன்று நடைபெற்று வருவதோடு, இவ்விடயம் தொடர்பில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால், காணி உரிமை பற்றிய பாதுகாப்பு மேம்படுத்தப்படும் வகையிலும், தவறாளிகளுக்கு கடுமையான தண்டனைகளை வழங்கக்கூடிய வகையிலும் வலுவிலுள்ள சட்ட முறைமை திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

57.

பா. 67/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் பவளப்பாறைகளை பாதுகாத்தல்,— இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் அமைந்துள்ள பவளப்பாறைகள் மனிதர்களின் செயற்பாடுகளால் அழிவுறும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதால், மேற்படி பவளப்பாறைகளை பாதுகாப்பதற்காக மனித செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கேற்றவாறு தனிநபர் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தையும் சட்ட வரையறையில் மாற்றத்தையும் ஏற்படுத்துவதற்காக கல்விமான்கள் குழுவொன்றின் ஊடாக பொருத்தமான வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

58.

பா. 68/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான்களில் பெண்களை சேவைக்கு அமர்த்துதல்,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும் மேற்படி வான்களில் பயணிக்கின்ற பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருதியும் சகல பாடசாலை வான்களிலும் பணியாற்றுவதற்கு பெண்கள் அமர்த்தப்படுவதை கட்டாயமாக்குவதற்கான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

59.

பா. 69/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மருந்துப் பொருட்களின் விலையை குறைத்தல்,— இலங்கையினுள் தேசிய ஔடதக் கொள்கையினை பிரகடனப்படுத்தி, ஔடதங்களின் பெயரில் மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை துரிதமாக ஆரம்பிப்பதன் மூலம் மருந்துப் பொருட்களின் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தலையிடுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

60.

பா. 70/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இணையத் தளத்தின் ஊடாக நடைபெறுகின்ற மருந்துப் பொருட்கள் விற்பனை உள்ளிட்ட மோசடிச் செயல்களைத் தடுத்தல்,— தற்போது இணையத் தளத்தின் ஊடாக தரமற்ற மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மேனிவணப்புப் பொருட்களின் உற்பத்திகள் பாரியளவில் விற்பனை செய்யப்படுவதுடன், இத்தகைய மோசடிச் செயல்கள் எமது நாட்டு மக்களின் ஆரோக்கியத்துக்கும் நல்லிருப்புக்கும் பாரியதொரு அச்சுறுத்தலாகும் என்பதால், இவற்றைத் தடுப்பதற்கான உரிய வேலைத் திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துதல் உகந்ததாகுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

61.

பா. 71/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனையின்றி பயிர்ச் செய்கை செய்தல்,— அதிக நச்சுத்தன்மையுடைய விவசாய இரசாயனப் பொருட்களை இலங்கையில் தடை செய்து, பழைமைவாய்ந்த முறையில் சூழலுக்குகந்த பயிர்ச்செய்கை முறையொன்றை நாட்டில் அறிமுகம் செய்வதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு விவசாய விஞ்ஞானிகள் மற்றும் சூழலியலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து அவர்களிடமிருந்து பெறப்படும் பரிந்துரைகளின் ஊடாக மக்களுக்கு நச்சுத்தன்மையற்ற ஆரோக்கியமான உணவை பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் பொருத்தமாகுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

62.

பா. 72/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாவதிலிருந்து பாடசாலை மாணவர்களை மீட்டெடுத்தல்,— தற்போது இலங்கையில் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்ற போக்கு அதிகரித்துள்ளதால், பாடசாலை மாணவர்களை போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுப்பதற்காக அரசாங்கம் தலையிட்டு முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

63.

பா. 73/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை நியமித்தல்,— அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டங்களின் போது தமது நிறுவனங்களை மிகஉயர்ந்த உற்பத்தித்திறன் மட்டத்தை நோக்கி வழிநடாத்தியுள்ள நிறுவனத் தலைவர்களை இனங்கண்டு அவர்களின் அறிவையும், அனுபவங்களையும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில், அந்நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முறையியல்களை ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்றவகையில் பதிலீடு செய்யக்கூடியவாறு மேற்படி நிறுவனத் தலைவர்களை உள்ளடக்கியதாக தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை தாபித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

64.

பா. 74/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— சமுதாய மருத்துவமுறை பற்றிய நிபுணத்துவச் சேவையை மேம்படுத்தல்,— சுகாதார சேவையின் அத்தியாவசிய பிரிவொன்றான சமுதாய மருத்துவமுறை தொடர்பான நிபுணத்துவத்துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அத்துறையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து துரிதமாக தீர்த்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

65.

பா.76/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் சந்தைக்கு வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல்,— நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற, சந்தைப் படுத்துகின்ற மற்றும் அதற்குப் பக்கபலமாக உள்ள ஆட்கள் மற்றும் நிறுவனங்களை சுற்றிவளைப்பதற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் விசேட சுற்றிவளைப்புப் பிரிவுக்குக் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து, தேவையான வசதிகளை குறைவின்றி பெற்றுக்கொடுப்பதற்கும், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கக் கூடிய வகையில் வலுவிலுள்ள சட்ட முறைமையை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

66.

பா.77/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நச்சுத்தன்மையற்ற உணவுற்பத்தியை ஊக்குவித்தல்,— உணவுடன் தொடர்புடைய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களை இலக்காகக் கொண்டு, தரத்தில் உயர்ந்ததும், ஆரோக்கியமானதுமான உணவுகளை நுகர்வோருக்கு வழங்குவதன் மூலம் நாட்டுக்கு ஆற்றக்கூடிய சேவை தொடர்பாக விழிப்புணர்வூட்டி, மனோபாவ ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், அவ்வாறு நச்சுத்தன்மையற்ற உணவுகளை உற்பத்தி செய்கின்ற தொழில்முயற்சியாளர்களுக்கு கௌரவப் பட்டத்துடன்கூடிய விருது வழங்கி அவர்களை ஊக்குவிப்பதற்குமான வேலைத் திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

67.

பா.78/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முறைகேடான விதத்தில் கைப்பற்றப்பட்டுள்ள சரணாலயங்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்தல்,— இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சரணாலயங்களுக்குச் சொந்தமான காணிகள் பல்வேறான ஆட்கள் மற்றும் அமைப்புகளால் சட்ட விரோதமான முறையில் கைப்பற்றப்பட்டுள்ளதால், மேற்படி காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் துரிதமாக தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

68.

பா. 79/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆதிவாசி மக்களின் மேம்பாட்டுக்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையினுள் தற்போது வசிக்கும் ஆதிவாசி மக்கள் பற்றிய தனியானதொரு தொகை மதிப்பீட்டை மேற்கொண்டு, அவர்கள் உயிர் வாழ்வதில் தற்போது எதிர்நோக்கும் சிரமங்களை முறைசார்ந்த விதத்தில் இனங்கண்டு, அவர்கள் கௌரவமாக வாழக் கூடிய ஒரு சூழலை அமைத்துக் கொடுப்பதற்குத் தேவையான சாதகமானதொரு திட்டத்தை, ஆதிவாசிகளின் தலைவர்களும் உள்ளடங்கிய விதத்தில் நியமிக்கப்பட்ட கல்விமான்கள் குழுவொன்றின் ஊடாக நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

69.

பா. 80/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் யுத்தத்தினால் சேதமடைந்த தொல்பொருட்களை பாதுகாத்தல்,— முப்பது ஆண்டு கால யுத்தம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட தொல்பொருட்கள் பெருமளவில் அழிவடைந்ததோடு, இருப்பிலுள்ள தொல்பொருட்கள் பற்றிய மதிப்பீடொன்றை மேற்கொண்டு தகவல்களை திரட்டுவதையும், குறித்த தொல்பொருட்களை உறுதி செய்தல், பாதுகாத்தல் மற்றும் புனரமைப்பதையும் நோக்கமாகக் கொண்டு தொல்பொருளியலாளர்களை உள்ளடக்கிய கல்விமான்கள் குழுவொன்றை நியமித்தல் உசிதமாகுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

70.

பா.81/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பயிர்ச் செய்கைக்கான உள்நாட்டு விதைகளை பிரபல்யப்படுத்துதல்,— விவசாய இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படாது உள்நாட்டு சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி பயிரிடக்கூடிய உள்நாட்டு விதை வகைகளை இனங்கண்டு அத்தகைய விதைகளை துரிதமாக நாடுபூராவும் பரவலாக்கி இரசாயன நச்சுத்தன்மையற்ற உணவுப் பொருட்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள், தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்குத் தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

71.

பா. 82/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டு மொழிகள் கற்கைக்கான வசதிகளை வழங்கல்,— தனி நபர் அறிவாற்றலை தீர்மானிப்பதற்கு அவரிடமுள்ள மொழியறிவு முதன்மையான காரணியாக அமைவதால் ஆங்கில மொழி தவிர்ந்த ஏனைய முதன்மையான அந்நிய மொழிகளை கற்பதற்குத் தேவையான வசதிகளை விஸ்தரிப்பதற்குத் தேவையான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

72.

பா. 83/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அனைத்து தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் செலவிடப்படுகின்ற நிதியை மட்டுப்படுத்தல்,— இலங்கையினுள் நடைபெறுகின்ற அனைத்து தேர்தல்களின் போதும் சில வேட்பாளர்கள் பாரியளவில் நிதியை செலவிடுவதுடன், நிதி செலவிட முடியாத போதிலும், நாட்டுக்கு சேவையாற்றக்கூடிய கல்விமான்கள் சிலருக்கு இதனால் பாதகமான நிலைமை ஏற்படுவதன் காரணமாக தேர்தல்களுக்கு செலவிடப்படுகின்ற நிதியின் அளவை மட்டுப்படுத்தக்கூடியவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

73.

பா.84/ '15

கௌரவ புத்திக பத்திறண,— காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட தொல்பொருட்களை மீண்டும் பெற்றுக் கொள்ளல்,— இலங்கை காலனித்துவ நாடாக காணப்பட்ட காலத்தில் எமது நாட்டிலிருந்து போர்த்துக்கள், ஒல்லாந்து மற்றும் பெரிய பிரித்தானியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட தொல்லியல் பெறுமதிமிக்க பொருட்கள் பற்றிய ஆய்வொன்றை நடாத்தி அப்பொருட்களை மீண்டும் எமது நாட்டுக்குப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

74.

பா. 85/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிக்குமார் நீதிமன்றமொன்றை தாபித்தல்,— பிக்குமார்களின் பாதுகாப்பு மற்றும் கௌரவத்தை பேணிப்பாதுகாப்பதற்காக அவர்கள் தொடர்பான நீதிமன்ற விடயங்களுக்காக தனியான பிக்குமார் நீதிமன்றமொன்றை தாபித்தல் வேண்டுமெனவும் அந்த நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு சட்ட ரீதியிலான அதிகாரத்தைப் பெறக்கூடிய வகையில் மேற்படி பிக்குமார் நீதிமன்றம் தாபிக்கப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

75.

பா. 86/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நியதிச்சட்ட பிக்குமார் சபையொன்றை நியமித்தல்,— பாராளுமன்றம் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்கும் கட்டளைச் சட்டங்களுக்கு திருத்தங்களை முன்வைக்கக் கூடியதுமான சட்ட அதிகாரமுள்ள பிக்குமார்களின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்பட்ட பொதுநிர்வாகம், சட்டம், வெளிநாட்டலுவல்கள் மற்றும் சமூக செயற்பாடுகள் தொடர்பாக சிறந்த அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள கல்விமான்களான பிக்குமார்களை உள்ளடக்கிய நியதிச்சட்ட பிக்குமார் சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

76.

பா. 87/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— நீர்ப்பாசனக் கலாசார கற்கை நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கையில் காணப்பட்ட நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்திற்கும், வாவிகள் தொழில்நுட்பத்திற்கும் புத்துயிரூட்டி பேணிப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், கற்கை நெறிகள் மூலம் மேற்படி விடயம் தொடர்பில் அறிவு நிறைந்தவர்களை உருவாக்க இயலுமான வகையில் “நீர்ப்பாசனக் கலாசார கற்கை நிலையம்” என்ற பெயரில் நிறுவனமொன்றை அரசாங்கத்தின் தலையீட்டுடன் ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

77.

பா. 88/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— மகாவம்ச கற்கைக்கான நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கை வரலாற்றின் சுவடாக விளங்கும் மகாவம்சத்தைக் கற்பதற்காக பிக்குமாரின் தலையீட்டுடன் “மகாவம்சக் கற்கை ஆய்வு தேசிய நிறுவனம்” என்ற பெயரில் நிறுவனமொன்றை அரசாங்கத்தின் அனுசரணையுடன் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

78.

பா. 89/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— பௌத்த விரோத செயற்பாடுகளை தடுத்தல்,— அற நூல்கள் மற்றும் வெளியீடுகளை ஆய்வு செய்யும் மேன்மையான அறிவைக் கொண்ட சட்ட அதிகாரத்துடன் கூடிய கற்றோர்களைக் கொண்ட சங்க சபையொன்றை தாபிப்பதன் மூலம், ஏதேனுமொரு ஆக்கத்தை வெளியிடுவதற்கு முன்னர் அதனை மேற்படி சபைக்கு சமர்ப்பித்ததன் பின்னர், சமூகமயமாக்குவதற்கு தகுதியில்லை எனில், திருத்தங்களை சமர்ப்பிப்பதற்கேற்றவாறான பொறிமுறையொன்றை உருவாக்குவதன் மூலம் பௌத்த விரோத செயற்பாடுகள், வெளியீடுகள் இயற்றப்படுதல் மற்றும் பௌத்த தர்மத்தை தொடர்புபடுத்தி பொய்யான வரைவிலக்கணங்கள் தோற்றம் பெறுவதை தடுப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

79.

பா. 90/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— தேசப்பற்றுடைய கலைப் படைப்புகளை பாராட்டுதல்,— தேசத்தின் மீது அன்பு மற்றும் சுயமரியாதை ஏற்படும் வகையில் சுதேச மற்றும் கலாசார விழுமியங்களுடன் கூடிய கலைப் படைப்புகளை வருடாந்தம் கௌரவிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

80.

பா. 91/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் பாடசாலை மாணவ மாணவியர்களின் ஒழுக்கத்தை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— இலங்கையின் பாடசாலை மாணவ மாணவியர்களை ஆரோக்கியமான, உடல் நலம்மிக்க மற்றும் உடலுறுதி கொண்ட பிரஜைகளாக சமூகமயப்படுத்தும் நோக்கத்துடன் அவர்கள் தாம் விரும்பும் ஒரு விளையாட்டில் ஈடுபடுவதற்கும், நடைமுறை ரீதியிலான ஒழுக்கப் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் வகுக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

81.

பா. 92/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— பௌத்த கலாசார தகவல் நிலையமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையினுள் அமைந்துள்ள பௌத்த மதத் தலங்கள், அதனுடன் இணைந்த இடைநேர்விளைவான பிரிவுகள் மற்றும் பௌத்த தேரர்கள் பற்றிய தகவல்களை சேகரித்து, முறைசார்ந்த ரீதியில் கணனிமயப்படுத்தி, நவீன தொழில்நுட்ப கருவிகள், போதியளவு மனித மற்றும் பௌதீக வளங்கள் நிறைந்த “பௌத்த கலாசார தகவல் நிலையம்” எனும் பெயரிலான நிறுவனமொன்று அரசின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

82.

பா. 93/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— அறநெறிப் பாடசாலை பாடநூல்களை காலத்திற்கேற்ப திருத்துதல்,— பரீட்சையை இலக்காகக் கொண்ட,— அறிவை மட்டும் மையப்படுத்திய பாடநூல்களுக்குப் பதிலாக செய்முறைப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட, அறிவை வளர்க்கக்கூடியதான, நாகரிகமானதொரு சமூகம் உருவாக்கப்படுவதை இலக்காகக் கொண்ட பாடநூல்களை புத்திஜீவிகளை உள்ளடக்கிய சபையொன்றின் ஊடாக தொகுத்து அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

83.

பா. 94/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— சர்வதேச பாடசாலைகளின் ஒழுங்குமுறையாக்கலுக்கான சபையொன்றை நியமித்தல்,— இலங்கையின் கலாசாரத்திற்கும், பண்பாட்டுக்கும், சமூக நல்லிருப்புக்கும் பொருந்தக்கூடிய வகையில் சர்வதேச பாடசாலைகளின் விடயப்பரப்புகளை தேவைக்கேற்ப ஒழுங்குமுறையாக்கக்கூடிய முழுமையான அதிகாரத்துடன் கூடிய சபையொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

84.

பா. 95/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய கல்வி ஆணைக்குழுவை மென்மேலும் முனைப்புடன் செயற்படச் செய்தல்,— சுதேச வரலாற்று அறிவு, பண்பாடுமிக்கதன்மை, உற்பத்திச் சாத்தியத்தன்மை, அறிவுடைமை, பாரம்பரிய அறிவு, தேசப்பற்று, ஆரோக்கியம், திறமைமிக்கதன்மை மற்றும் சிறந்த மனப்பாங்குகளைக் கொண்டிருத்தல் ஆகிய பண்புகளின் மூலம் பூரணத்துவம்மிக்க வெற்றிகரமான பிரசைகளை உருவாக்கக்கூடியவாறு அமைக்கப்பட்ட தேசிய கொள்கையின் ஊடாக ஒட்டுமொத்த கல்வித் திட்டத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவை மென்மேலும் முனைப்புடன் செயற்படச் செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

85.

பா.96/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணர் சேவையை மேம்படுத்தல்,— சுகாதார சேவையின் அத்தியாவசிய அம்சமொன்றான குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணத்துவத் துறையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து அவற்றை துரிதமாக தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மேற்படி குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணர் சேவையை மேம்படுத்துவதற்குமான திட்டங்களை வகுப்பதற்கும் பொருட்டு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

86.

பா. 97/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— ஆயுர்வேத மருத்துவர்களின் சேவையை வெளிநாடுகளுக்கு வழங்குதல்,— ஆயுர்வேத மருத்துவப் பட்டப்படிப்பை நிறைவுசெய்யும் பட்டதாரிகளுக்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக முறைசார்ந்த வேலைத் திட்டமொன்றை அமைத்து நடைமுறைப்படுத்தல் உசிதமாகுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

87.

பா. 98/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— ஆயுர்வேத மருத்துவச் சட்டத்தை திருத்துதல்,— தற்போது வலுவிலுள்ள காலம் கடந்த ஆயுர்வேத மருத்துவச் சட்டம் மீதான திருத்தமொன்றைக் கொண்டு வந்து ஆயுர்வேத மருத்துவர்களின் தொழில் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்து, அந்த தொழிலுக்குரிய கௌரவத்தையும், மகத்துவத்தையும் பாதுகாக்க புதிய ஆயுர்வேத மருத்துவச் சட்டமொன்றை துரிதகதியில் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

88.

பா. 99/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— புகையிரத பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்குதல்,— இலங்கையில் புகையிரத பாதுகாப்பு முறைமையை உருவாக்கிய புத்தாக்குநர்களையும், அத் துறையுடன் தொடர்புடைய கல்விமான்களையும், புகையிரதத் திணைக்களத்தின் சகல துறைகளினதும் விற்பன்னர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் புகையிரத பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

89.

பா. 100/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— பயணிகள் போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்தல்,— பேருந்து பயணிகள் போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம், வருடாந்தம் அச் சேவையை நிராகரிக்கின்ற சுமார் 1% - 2% பயணிகளை தக்க வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம், அச் சேவையின் இருப்புக்கு நீண்ட கால அடிப்படையில் ஏற்படக்கூடிய ஆபத்தை குறைப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் பொருத்தமாகுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

90.

பா. 101/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— சிங்கள மொழிக்கு நியதியொன்றை வகுத்தல்,— சிங்கள மொழியில் எழுத்து வழக்கு மற்றும் பேச்சு வழக்கு இரு வகைகளை கொண்டுள்ளதோடு, න, ණ, ල, ළ வேறுபாடு, மெல்லின, வல்லின எழுத்துக்களை பயன்படுத்தல் மற்றும் சொல் வகைப்பாடு ஆகியன விவாதத்துக்குரியவையாக உள்ளதால் சிங்கள மொழிக்கென நியதியொன்றை வகுப்பதற்கு கல்விமான்கள் சபையொன்றை நியமித்து காலத்துக்கேற்ப ஏற்படும் மாற்றங்களையும் கவனத்திற்கொண்டு மொழியின் நிலைத்திருத்தலை உறுதிப்படுத்தக்கூடிய செயற்பாடொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

91.

பா.102/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— உக்கிப்போகாத சேதனக் கழிவுப்பொருட்களின் மூலம் சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துதல்,— பீடை கொல்லிகள் மற்றும் கைத்தொழில் செயற்பாடுகளிலிருந்து வெளியேறும் உக்கிப்போகாத சேதனக் கழிவுப்பொருட்கள் (Persistent Organic Pollutants – POPs ) பன்னிரண்டு வகை மாசாக்கல் காரணிகளை உள்ளடக்கியுள்ளதுடன், இவை மனிதனின் உடல் நலத்துக்கு மிகவும் பாதகமாயுள்ளதால், குறித்த இரசாயனப் பதார்த்தங்கள் சுற்றாடலுக்கு வெளியேற்றப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு முறைசார்ந்த ஒரு வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

92.

பா.103/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— அரசாட்சியில் பௌத்த தத்துவங்களை சேர்த்தக்கொள்ளல்,— சப்த அபரிஹானீய தர்ம, தச ராஜ தர்ம, ராஜோவாத ஜாதகய, குரு தர்ம ஜாதகய, கண்ட நிந்துக ஜாதகய, தெசதுர ஜாதகய, தேவதர்ம ஜாதகய, சதர சங்ரஹ வஸ்து, சக்கவத்தீ சிஹநாத சூத்ரய மற்றும் தர்ம பிரதீபிகாவ ஆகிய பௌத்த கற்பித்தல்கள் தொடாபில் பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் பிரதேச மட்டத்திலான சகல ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டுவதன் ஊடாக நாட்டின் நல்லாட்சிக்கு அவர்களது வகிபாக பங்களிப்பினை பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்திலான ஒரு வேலைத்திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

93.

பா. 104/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலத்திரனியல் கழிவுகளை அகற்றுதல்,— புளோரசன்ட் மின்குமிழ், தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, மின் உபகரணங்கள், பட்டரி, கனணி மற்றும் அவற்றின் பாகங்கள் கழிவுப் பொருட்களாக சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுகையில் ஆசனிக், கட்மியம், பாதரசம் மற்றும் ஈயம் ஆகிய கன உலோகங்கள் சுற்றாடலில் சேர்க்கப்படுவதால், குறித்த இலத்திரனியல் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை தயாரித்து சுற்றாடலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

94.

பா. 105/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டில் நல்லாட்சியை தாபித்தல்,— சீரற்ற ஆட்சியின் பண்புகளான தான்தோன்றித்தனமான கொள்கையாக்கம், அதிகாரவாதம், அமுலாக்கப்படாத மற்றும் அநீதியான சட்டங்கள், நிறைவேற்று அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல், அரசியலில் பிரஜைகளின் பங்களிப்பு குறைவடைதல் மற்றும் ஊழல் பரவுதல் ஆகிய விடயங்களை எமது நாட்டில் குறைவின்றிக் காணக்கூடியதாக உள்ளதோடு, இதன் காரணமாக நாட்டில் சீரற்ற ஆட்சி நிலவுகின்றமை தென்படுகின்றமையால், நாட்டில் நல்லாட்சியை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

95.

பா. 106/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாடுகளிலுள்ள இலங்கைக்கு சொந்தமான சுவடிகளை மீளப்பெற்றுக்கொள்ளல்,— இலங்கைக்கு சொந்தமான பெறுமதியான பல சுவடிகள் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் காணப்படுவதுடன், இவற்றில் உள்ளடங்கியுள்ள அறிவை தற்போதைய இலங்கை சமூகம் இழந்துள்ளமையால், மேற்படி சுவடிகளை எமது நாட்டுக்கு மீளப் பெற்று இவற்றில் அடங்கியுள்ள புராதன அறிவை சமூகமயமப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது

96.

பா. 107/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயிர் பல்வகைத்தன்மையை பாதுகாப்பதற்காக கமத்தொழிலின் பங்களிப்பைப் பெறுதல்,— தனிப் பயிர்ச்செய்கை முறைக்கு பதிலாக பல்வகைப் பயிர்ச்செய்கை முறை மற்றும் கலப்புப் பயிர்ச்செய்கை முறையை பிரபல்யபடுத்தல், உயிர் பல்வகைத்தன்மைக்கு கேடு விளைவிக்கும் இரசாயன பதார்த்தங்களை கமத்தொழிலிருந்து நீக்குதல் மற்றும் ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவ முறைமைகளை பயன்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக நாட்டில் உயிர் பல்வகைத்தன்மையை பாதுகாப்பதில் விவாசாயிகளை ஈடுபடுத்துகின்றதான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

97.

பா. 108/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மக்களின் உணவு கிடைக்கும் உரிமையை பாதுகாத்தல்,— ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் கட்டமைப்புக்களுக்கு அமைய உணவு கிடைப்பதற்கான அடிப்படை உரிமையை இலங்கை மக்கள் இழக்கும் நிலைமை, அரசாங்க கொள்கை வகுத்தல் மற்றும் அமுல்படுத்துவதில் காணப்படுவதாலும், மேற்படி சமவாயங்களுக்கு அமைய நாட்டு மக்களின் உணவுப் பிரச்சினையை தீர்த்து வைக்கும் பொறுப்பு முற்றாக அரசாங்கத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாலும் அரசாங்கம் தலையீடு செய்து உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துகின்ற மற்றும் சுகாதார ரீதியில் பாதுகாப்பான உணவு நாட்டு மக்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்கின்ற முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை வகுத்து மக்களின் உணவு கிடைக்கும் அடிப்படை உரிமையை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

98.

பா. 109/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அசேதனப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல்,— அசேதனப் பொருட்களை மீள்சுழற்சிக்கு உள்ளாக்குதலும், அசேதனப் பொருட்களின் உபயோகத்தைக் குறைப்பதும், உபயோகத்திலிந்து நீக்கப்படுகின்ற அசேதனப் பொருட்களை சேகரிப்பதற்குமான பொறிமுறையொன்றை அமைத்தல் மற்றும் அசேதனப் பொருட்களை பயன்படுத்துவதற்கான சுற்றாடல் சட்ட, விதிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் சுற்றாடல் முறைமையின் பாதுகாப்பு மற்றும் நன்நிலைத்திருத்தலுக்காக அசேதனப் பொருட்களை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

99.

பா. 110/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுதேச மருந்துகள் மற்றும் கைமருந்துகள் பற்றி பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டல்,— ஆரோக்கியமான தேசமொன்றைக் கட்டியெழுப்பல் மற்றும் சுதேச ஆயுர்வேதத்தின் நன்நிலைத்திருத்தலை அடிப்படை நோக்கமாகக் கொண்டு சுதேச மருந்து வகைகள் மற்றும் கைமருந்துகள் பற்றி முறைசார்ந்த விடய விளக்கங்களைக் கொண்ட பாடமொன்றை பாடசாலை பாடத்திட்டத்தில் உள்ளடக்குவதன் மூலம் சுதேச மருந்துகள் மற்றும் கைமருந்துகள் பற்றி பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

100.

பா. 111/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தாய், சேய் போஷாக்கின்மையை ஒழித்தல்,— இலங்கையில் எடைகுறைந்த மகப்பேற்று வீதம் 25% எனும் உயர் பெறுமானத்தை கொண்டுள்ளதோடு, அதற்கான பிரதான காரணியாக அமைவது ஊட்டச்சத்துமிக்க உணவுப் பற்றுக்குறையே என்பதால், தாய், சேய் போஷாக்கின்மையை ஒழிப்பதற்குத் தேவையான ஊட்டச்சத்துமிக்க உணவுகளை வறியோர்களுக்கு வழங்குவதை முதன்மையாகக்கொண்ட வேலைத்திட்டமொன்று அமுலாக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

101.

பா. 112/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடலைப் பாதுகாப்பதன் மூலம் ஆரோக்கியமான நாடொன்றைக் கட்டியெழுப்புதல்,— இன்று இலங்கையில் சுற்றாடல் மாசடைதல் அதிகரித்துள்ளமையால் நீர் மற்றும் உணவுகளில் கதிரியக்கத் தன்மை அதிகரித்துள்ளதோடு, எதிர்காலத்தில் மனிதனுக்குப் பீடிக்கின்ற ஒருசில நோய்களின் நோய்க் காரணிகளைக்கூட கண்டுபிடிப்பது சிரமமானதாக அமையலாம் என்பதால், இது தொடர்பாக மேலும் ஆய்வு செய்வதற்காக கல்விமான்கள் குழுவொன்றை நியமித்து அறிக்கையொன்றைப் பெற்று, அதன் விதப்புரைகளை அமுலாக்குவதன் ஊடாக நாட்டிலுள்ள மக்களின் ஆரோக்கியம் உறுதிசெய்யப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

102.

பா.113/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டின் பாதுகாப்புக்கு கமத்தொழிலைப் பேணுதல்,— முதலாளித்துவத்தின் மூன்றாவது கட்டமாகிய இரண்டாவது உலக மகா யுத்தத்துக்கு பிற்பட்ட காலத்தில் கமத்தொழில் வாழ்க்கை முறையானது பசுமைப் புரட்சியுடன் முழுமையாகவே மாற்றமடைந்த காரணத்தினால் தற்போதைய உலகளாவிய சமூகம் எதிர்கொண்டுள்ள சுற்றாடல் மாசடைதல், ஆரோக்கியத்தை இழத்தல் மற்றும் தூய்மையான உணவு காணப்படாமை, ஆகிய இடர்காண் நிலைமைகளிலிருந்து இலங்கையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்களை நிலைபேறான கமத்தொழில் பிரயோகங்களுக்கு ஊக்குவிப்பதன் மூலமும் விவசாயிகளைப் பாதுகாக்கும் அரச கொள்கைகளை நாட்டினுள் தாபிப்பதன் மூலமும் நாட்டின் எதிர்காலம் பேணப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

103.

பா. 114/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சிக்கலான உலகளாவிய சந்தையின் காரணமாக மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் குறைத்தல்,— உலகமயமாக்கலின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட உலக வர்த்தக முறைகள் மனிதனின் மனதை ஆக்கிரமித்துள்ளதன் காரணமாக அவன் பரம்பரை பரம்பரையாகக் கொண்டு வந்த ஒழுக்க விழுமியங்களும் வளர்ச்சியடைந்த தத்துவக் கருத்துக்களும் மனித மனங்களிலிருந்து பறித்தெடுக்கப்படுதல் தற்காலத்தில் இலங்கையர்களுக்கும் பொதுவானதென்பதால், சந்தைப் பொருளாதாரத்தினுள் கட்டியெழுப்பப்படுகின்ற சிக்கலான வாழ்க்கை முறையையும் அதனைத் தொடர்ந்து எழுகின்ற சிக்கலான சமூகப் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொண்டு அமைதியான வாழ்க்கை முறையொன்றை நோக்கிச் செல்வது எவ்வாறு என்பது பற்றி மக்களை அறிவூட்டுவதற்குரிய வேலைத்திட்டமொன்றும் அறிவார்ந்த கருத்தாடலொன்றும் நாட்டினுள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

104.

பா. 115/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைக்குத் தேவையான சீனியை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்தல்,— சீனியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்களை இலங்கை தன்னகத்தே கொண்டிருப்பதால், சிறந்த முகாமைத்துவத்துடன், வினைத்திறனாகவும் திட்டமிட்ட வகையிலும் செயலாற்றி நாட்டுக்குத் தேவையான சீனியை உற்பத்தி செய்வதற்கும் சீனியை சுத்திகரிப்பதற்கும் தேவையான தொழிற்சாலைகளை அரசாங்கம் தாபித்து சீனிக் கைத்தொழிற்துறையை பாதுகாத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

105.

பா. 116/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நக்கிள்ஸ் வன ஒதுக்கத்தைப் பாதுகாத்தல்,— இலங்கையின் ஒட்டுமொத்த சுற்றாடல் முறைமையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கூருணர்வுமிக்க சுற்றாடல் முறைமையொன்றாகிய நக்கிள்ஸ் வன ஒதுக்கமானது தற்போது மனித செயற்பாடுகளின் காரணமாக கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதோடு, இன்றைய சந்ததியினருக்கும் அதேபோன்று எதிர்கால சந்ததியினருக்கும் மேற்படி சுற்றாடல் அழிவின் காரணமாக ஆபத்தான நிலைமைக்கு முகங்கொடுக்க நேரிடுவதால், மனிதர்களால் ஏற்படுத்தப்படுகின்ற அச்சுறுத்தல்களை அகற்றி நக்கிள்ஸ் வன ஒதுக்கத்தின் சுயாதீனமான இருப்பை துரிதமாக உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

106.

பா. 117/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்குகளை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

107.

பா. 118/ '15

கௌரவ புத்திக பத்திறண,— புலமை சார்ந்த வறுமையை ஒழித்தல்,— பௌதீக வர்த்தகப் பொருட்கள் புழங்கும் வேகத்திற்கு நிகராக அறிவு, புலமை மற்றும் மானிட ஒழுக்க விழுமியங்கள் மக்களை சென்றடையாமை காரணமாக அறியாமை தலைதூக்கியுள்ளதன் மூலம், புலமைசார்ந்த வறுமை எமது நாட்டில் காணப்படும் பிரதான பிரச்சினையாக இருந்த போதிலும் அது தொடர்பாக நாட்டினுள் குறைந்தளவு கவனமே செலுத்தப்படுவதனால் நாட்டு மக்களின் புலமைசார்ந்த வறுமையை இல்லாமல் செய்வதற்காக, சகல வயதுப் பிரிவினரும், உள்ளடங்குகின்ற வகையில் முறைசார்ந்த விதத்தில் திட்டமிடப்பட்ட தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

108.

பா. 119/ '15

கௌரவ புத்திக பத்திறண,— காலாவதியான ஔடதங்கள் பயன்படுத்தப்படுவதைத் தவிர்த்தல்,— தற்போது இலங்கையில் காலாவதியான ஔடதங்கள் சந்தையிலும் அரச வைத்தியசாலைகளிலும் பாவனைக்கு வரும் ஆபத்து காணப்படுவதனால் அரசின் சகல பிரிவினரும் தலையிட்டு செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரித்து காலாவதியான ஔடதங்களை சந்தையிலிருந்து அகற்றுவதற்கும் இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

109.

பா. 120/ '15

கௌரவ புத்திக பத்திறண,— எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுத்தல்,— இலங்கையில் தற்போது இனம்காணப்படாத அண்ணளவாக 3000 எயிட்ஸ் நோயாளர்கள் இருப்பதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளதால், அவர்களை இனம்கண்டு சிகிச்சையளிப்பதற்கும், எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் பயனுறுதியானதும், பொருத்தமானதுமான கருத்திட்டமொன்று துரிதமாக ஆரம்பிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

110.

பா. 121/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாடுகளில் பாலியல் துஷ்பிரயோகளுக்கு இலக்காகும் பெண்களுக்கு நிவாரணமளித்தல்,— இலங்கைப் பெண்கள் வீட்டுப் பணிப்பெண் சேவைக்கென வெளிநாடு சென்ற பின்னர் நிகழும் பாலியல் துஷ்பிரயோகங்கள் காரணமாக ஏற்படும் கருத்தரிப்புகளால் இலங்கைச் சமூகத்தில் உருவாகியுள்ள பிரச்சினை நிலைமைகளைத் தீர்ப்பதற்கான ஒழுங்கான முறையியலொன்றை தயாரித்து நடைமுறைப் படுத்துவதற்கு கல்விமான்கள் மற்றும் குறித்த சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

111.

பா. 122/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வன ஒதுக்கங்கள் மற்றும் சரணாலயங்களின் பாதுகாப்பைத் உறுதிப்படுத்துவதற்கான சட்டங்களை இயற்றுதல்,— அண்மைக் காலமாக இலங்கையிலுள்ள வன ஒதுக்கங்கள் மற்றும் சரணாலயங்களின் அழிவு அதிகரித்து வருவதோடு, இலங்கையின் சுற்றாடல் சமநிலைக்கு அதன் மூலம் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதால், இந்த அழிவை நிறுத்துவதற்காக மக்களின் மனப்பாங்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் அதேபோன்று அமுலிலுள்ள சட்ட ஏற்பாடுகளை முறைசார்ந்ததாக மற்றும் கடுமையானதாக இருக்கக்கூடியவாறு திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

112.

பா. 123/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பல்வேறு சமய குழுக்களாலும் ஏற்படுத்தப்படுகின்ற சமூகத் தாக்கங்கள் பற்றி ஆய்வு செய்தல்,— பிரதானமான போக்கிலுள்ள சமயக் கருத்தியல்களை விமர்சித்துக் கொண்டு, அச் சமயங்களின் உப பிரிவுகளாக தமது வியாக்கியானங்கள் மற்றும் விளக்கங்களை சமூகமயப்படுத்துகின்றதும், புதிய கருத்தியல்களை முன்வைத்து, அக் கருத்தியல்களை ஏற்றுக்கொள்கின்ற ஆட்களை அணிதிரட்டுகின்றதுமான, சமய மற்றும் வேறு தோற்றங்களில் சமூகமயமாகி இருக்கின்ற குழுக்கள் தொடர்பாக ஆராய்ந்து அவர்களுடைய கருத்தியல்கள், செயற்பாடுகள் மற்றும் சமூகத்திற்கு அவர்களால் ஏற்படுகின்ற தாக்கங்கள் எவ்வாறானவை என்பதைப் பற்றிய மதிப்பீடொன்றை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சமயத் தலைவர்கள் மற்றும் கல்விமான்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்து, அறிக்கையொன்றைப் பெற்று அதன் விதப்புரைகளை செயற்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

113.

பா.124/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயர் தரத்திலான மட்பாண்டங்களை உற்பத்தி செய்தல்,— சமையலின் போது எரிவாயு மற்றும் மின்சாரம் விரயமாகாத வகையில் துரிதமாக வெப்பத்தை உள்ளீர்த்துக்கொள்ளக்கூடிய மட்பாண்டங்களை உற்பத்தி செய்து சந்தைக்கு வழங்குவதற்குத் தேவையான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் மட்பாண்டங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான முறையில் உணவு சமைக்கக்கூடிய இயலுமை தொடர்பாகவும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுகின்ற தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேணடுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

114.

பா. 125/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆன்மீக உளவியல் துறைக்கு பௌத்த தர்மத்திலிருந்து செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளல்,— உள்ளம் பற்றிய புத்தபிரானின் ஒருசில விளக்கங்கள் நவீன விஞ்ஞானத்தாலும் கண்டறிய இயலாத அளவுக்கு ஆழமானதாக உள்ளதால், அது பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் நிகழ்காலத்தில் ஆன்மீக உளவியல் துறையில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு பௌத்த தர்மத்தைத் தழுவியதான வரைவிலக்கணங்களையும் தீர்வுகளையும் முன்வைக்கக்கூடிய வகையில், சம்பந்தப்பட்ட துறை பற்றிய பரந்த அறிவுபடைத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கல்விமான்களைக் கொண்ட குழுவொன்றைத் தாபித்து, அதனூடாக பௌத்த தர்மத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிரபல்யப்படுத்தவும், இலங்கையின் நற்பெயரை மேம்படுத்தவும், ஆன்மீக உளவியல் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும் அரசாங்கம் இடையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

115.

பா. 126/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கற்றறிவாளர் மத்தியில் தொல்பொருளியல் விடயத்தைப் பிரபல்யப்படுத்துதல்,— கற்றறிவாளர் மத்தியில் தொல்பொருளியல் விடயத்தைப் பிரபல்யப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக பாடசாலைப் பாடத்திட்டத்தில் மேற்படி பாடத்தைச் சேர்த்துக் கொள்வதையும் பல்கலைக்கழகங்களில் தொல்பொருளியல் விடயப்பரப்பை தொடர்ந்தும் விஸ்தரிப்பதற்கான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதையும், அதன் மூலம் தொல்பொருளியல் விடயத்துறையை நாடெங்கினும் பரப்புவதன் மூலம் உருவாகின்ற கல்விமான்களிடமிருந்து சாதகமான சேவையை பெற்றுக்கொள்வதையும் நோக்கமாகக் கொண்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை நீண்டகால ரீதியில் திட்டமிட்டு உருவாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்மென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

116.

பா. 127/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உணவு வகைகளில் உள்ளடங்கியுள்ள நச்சுத்தன்மையைப் பற்றி ஆராய்வதற்காக விஷேட தரநிர்ணய நிறுவனமொன்றை தாபித்தல்,— கமத்தொழிலின் போது பயன்படுத்தப்படும் இரசாயன பதார்த்தங்களின் காரணமாக உணவுப் பொருட்களிலும் நச்சுத்தன்மை கலந்துள்ளதுடன், இது பற்றி கண்டறிவதற்கு ஏற்புடைய தரநிர்ணய நிறுவனமொன்று ஏற்கனவே இலங்கையினுள் நிறுவப்படாமையினால் இவ்விடயத்திற்கென விஷேட தர நிர்ணய நிறுவனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

117.

பா. 128/ '15

கௌரவ புத்திக பத்திறண,— யாசகர்கள் யாசிப்பதற்குப் பயன்படுத்துகின்ற சிறுவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல்,— இலங்கையில் யாசகர்கள் சிறுவர்களுடன் யாசிப்பதைத் தடை செய்து, யாசிப்பதற்காகப் பயன்படுத்துகின்ற சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்து, அவர்களை சிறந்த பிரசைகளாக சமூகமயப்படுத்தத் தேவையான தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

118.

பா.129/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையில் பிக்குணீகள் சாசனத்தை இடையறாமல் பேணிவருவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— மஹா பிரஜாபதி கோதமி பிக்குணீயுடன் தொடங்கிய பாரத பிக்குணீகள் சாசனம் சங்கமித்தா பிக்குணீயின் இலங்கை வருகை மூலமாக இலங்கையில் நன்கு தாபிக்கப்பட்டபோதிலும், பிற்காலத்தில் மறைவடைந்தமையால், அண்மைக்காலத்தில் சியாமோபாலீ மஹா நிக்காயவின் ரங்கிரி தம்புலு தரப்பினரால் மீளவும் தாபிக்கப்பட்டதோடு, அவ்விதமாக தாபிக்கப்பட்ட பிக்குணீகள் சாசனத்திற்கு முறைசார்ந்த அங்கீகாரத்தை வழங்குவதற்காக அரசாங்கம் மூன்று பீடங்களையும் சேர்ந்த மகாநாயக்க தேரர்களை உள்ளிட்ட ஏற்புடைய அனைத்து துறைகளினதும் தலைமையில் சரியான உரையாடலை ஆரம்பிக்க வேண்டுமெனவும், அவ்வுரையாடலின் இறுதியில் முறைசார்ந்த வழிமுறையொன்றின் ஊடாக இலங்கையில் பிக்குணீகள் சாசனத்தை இடையறாமல் பேணிவருவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

119.

பா.130/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை பிக்குமார் கூட்டமைப்பினை கட்டமைப்பு ரீதியாக ஒழுங்கமைத்தல்,— இலங்கை பிக்குமார் கூட்டமைப்பில் பிக்குமார்கள் தரப்பிரனர்களாக பிரிந்துள்மையால் கட்டமைப்பு ரீதியாக ஒழுங்கமையாதுள்ளதோடு, அதன் காரணமாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சடங்குமுறைகளில் பிக்குமார்கள் ஏகோபித்த நிலையில் இல்லாமை நாட்டுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதால் ஒட்டுமொத்த பிக்குமார் சமூகத்திலும் ஏகோபித்தநிலையினை ஏற்படுத்தக்கூடிய வேலைத்திட்டமொன்றினை தயாரிக்க அரசாங்கம் தலையீடு செய்யவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

120.

பா.131/'15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுதல்,— இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மக்கள் நேயமிக்கதான முறையில் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான திட்டங்களை தயாரிப்பதற்காக கல்விமான்கள் சபையொன்றை நியமிப்பதற்கும் அவர்களுடைய பரிந்துரைகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தில் நிலவும் ஊழல், மோசடி மற்றும் நிருவாகப் பிரச்சினைகளை தீர்த்து பயனுறுதியான ஒரு தேசிய நிறுவனமாக இயங்குவதற்குத் தேவையான சூழலை அரசாங்கம் தலையீடுசெய்து உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

121.

பா.132/'15

கௌரவ புத்திக பத்திறண,— மருந்தாக்கலுக்கு தேவையான அளவு கஞ்சாவை பயிரிடுவதற்கு சுதேச மருத்துவர்களுக்கு அனுமதி அளித்தல்,— இந்தியாவிலிருந்து இரகசியமான வழிகளின் ஊடாக நாட்டினுள் கொண்டுவரப்படுகின்ற இராசயனப் பொருட்கள் கலந்த கஞ்சாவை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற சுதேச மருந்துகளின் தரம் குறைவடைவதால், ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்கின்றபோது, தமது மருந்துகளின் தரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக, கஞ்சாவை அத்தியாவசிய ஔடதமாக பயன்படுத்தும் அரச அங்கீகாரம் பெற்ற ஆயுர்வேத மருத்துவர்களுக்கு கட்டுப்பாடுகளுடன் கஞ்சா தாவரத்தை பயிரிடுவதற்கு அனுமதி அளிப்பதற்குத் தேவையான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

122.

பா.133/'15

கௌரவ புத்திக பத்திறண,— மரக்கறிச் செய்கையாளர்களுக்கு நியாய விலையை பெற்றுக்கொடுத்தல்,— மரக்கறி மொத்த வியாபாரத்தில் நிகழும் கப்பம் பெறுதல் மற்றும் விலையை தீர்மானித்தல் முதலிய செயற்பாடுகளின் ஊடாக கட்டியெழுப்பப்பட்டுள்ள ஒழுங்கமையப் பெற்ற வர்த்தக தனியுரிமையினால் மரக்கறிச் செய்கையாளர்களுக்கு நியாய விலையை பெற்றுக்கொடுப்பதற்காக இற்றைவரை அமுலாக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் தோல்வியடைந்திருப்பதால், விவாசாயிகளுக்கு நியாய விலையை பெற்றுக்கொடுப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்ட, அழுத்தங்களற்ற சந்தையொன்றினை அரசாங்கத்துறை வர்த்தக நிறுவனங்கள் தலையீடு செய்து உருவாக்கிச் செயற்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

123.

பா.134/'15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் முக்கியத்துவத்தை சமூகமயமாக்கல்,— பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பாடசாலை வான் சாரதிகளுக்கு பிள்ளைகளின் முக்கியத்துவம் பற்றி சமூகவியல் மற்றும் உளவியல் முறையியல்களைக் கொண்டு எளிதாக விளக்கி, நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக பிள்ளைகளை சமூக சவால்களிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது என்பதைப் பற்றிய கலந்துரையாடலொன்றை நடத்துவதற்காக தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

124.

பா.135/'15

கௌரவ புத்திக பத்திறண,— பெண்களுக்கான ஒடுக்குமுறைகளைக் குறைத்தல்,— இன்றைய உலகளாவிய சமூகத்தில் பெண்களுக்கு நேரிடுகின்ற தொல்லைகளான தொழில் மற்றும் பாலியல் சுரண்டலுக்கு ஆளாதல், தனியார் சொத்துரிமை முறை ஆண்களை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளமை, சமமாகக் கருதப்படாமை மற்றும் குடும்ப அமைப்பினுள் சிறைப்பட்டுள்ளமையின் காரணமாக தொழில்பெயர்ச்சிக்கு தடைஏற்படுதல் ஆகிய விடயங்கள் இலங்கைப் பெண்களுக்குப் பொதுவானவையாக உள்ளதால், அவர்களின் நல்லிருப்புக்காக இந்த அசௌகரியமான சூழலை சீராக்கி நிவாரணம் வழங்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

125.

பா.136/'15

கௌரவ புத்திக பத்திறண,— தொல்பொருளியல் திணைக்களத்தை மேம்படுத்தல்,— இலங்கையினுள் அமையப்பெற்றுள்ள தொல்பொருள்களை பேணிக்காப்பதற்கான ஆற்றல் தொல்பொருளியல் திணைக்களத்திடம் இல்லாமைக்கான காரணம் தற்போது நிலவுகின்ற மனித மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறையாகும் என்பதால், கல்விமான்கள் குழுவொன்றின் மூலம் தொல்பொருளியல் திணைக்களத்திலுள்ள குறைபாடுகள் பற்றி ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடுசெய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

126.

பா.137/'15

கௌரவ புத்திக பத்திறண,— தூரப் பயணச் சேவை பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் ஆரோக்கியமான உணவு, குடிபானங்களை பெற்றுக்கொள்வதற்கு வசதி செய்தல்,— தூரப் பயணச் சேவை பேருந்துகள் உணவு, குடிபானங்களை பெற்றுக்கொள்வதற்கு நிறுத்தப்படும் சிற்றுண்டிச் சாலைகளின் தரம் மிகக் கீழ் மட்டத்தில் உள்ளதால் பயணிகளின் ஆரோக்கியத்திற்கு பாதகமானதாயுள்ளதோடு, மேற்படி சிற்றுண்டிச் சாலைகளின் தரத்தை உயர்த்துவதற்காக எப்போதும் பின்னாய்வு செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

127.

பா.138/'15

கௌரவ புத்திக்க பத்திறண,— அரசாங்கத்திற்கு சொந்தமான பெருந்தோட்ட கம்பனிகளை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுதல்,— அரசாங்கத்திற்கு சொந்தமான பெருந்தோட்ட கம்பனிகள் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களாக மாறியுள்ளதால், கல்விமான்கள் குழுவொன்றை நியமித்து மேற்படி நிறுவனங்களின் இலாபகரத்தன்மையை உயர்த்துவதற்குத் தேவையான விதப்புரைகளை தயாரித்து, அவ்விதப்புரைகளை நடைமுறைப் படுத்துவதன் ஊடாக மேற்படி கம்பனிகளின் இலாபகரத்தன்மையை உயர்த்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

128.

பா.139/'15

கௌரவ புத்திக பத்திறண,— பாதுகாக்கப்பட்ட வனங்களினுள் இடம்பெறுகின்ற சட்டவிரோதச் செயல்களை நிறுத்தல்,— இலங்கையின் பாதுகாக்கப்பட்ட வனங்களினுள் இடம்பெறுகின்ற சட்டவிரோத பயிர்ச்செய்கை, பல்வேறு நிர்மாணிப்புக்கள், காடுகளை வெட்டித்துப்புரவாக்கல் மற்றும் பாதுகாப்பு வன எல்லைகளை மாற்றியமைத்தல் ஆகியன அழிவுக்கு காரணமாக அமைகின்ற மனித செயற்பாடுகளின் சுற்றிவளைப்புக்கு விசேடமாக வலுவூட்டப்பட்ட பொலிஸ் வனப்பாதுகாப்புப் பிரிவொன்றை தாபிக்க அரசாங்கம் தலையீடுசெய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

129.

பா.140/'15

கௌரவ புத்திக பத்திறண,— பவளப் பாறைகளை பேணிப்பாதுகாத்தல்,— கடல்நீரின் வெப்பநிலை அதிகரித்தல் மற்றும் மனிதசெயற்பாடுகள் காரணமாக பவளப்பாறைகள் அழிவடையும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதால் இலங்கைக் கடல் வலயத்தைச் சூழவுள்ள பவளப்பாறைகளைப் பாதுகாப்பதற்கும், புதிய பவளப்பாறைகள் உருவாவதற்குப் பொருத்தமான சூழல் கட்டமைப்பை உருவாக்குவதற்கும் தேவையான புதிய ஒழுங்குமுறைப்படுத்தல்களை தயார்செய்து அமுல்படுத்துவற்கு அரசாங்கம் தலையீடுசெய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

130.

பா.156/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— கண்டி நகரில் காணப்படும் வாகன நெரிசலை குறைத்தல்,— இலங்கையின் இரண்டாவது தலைநகரான கண்டி நகர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்களின் சுற்றுலா நிலையமாக காணப்படுவதாலும், கண்டி நகருக்கு அன்றாடம் பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகை தருவதுடன் இம்மக்கள் கண்டி நகரிலும் அண்மித்த வீதிகளிலும் உள்ள அதிக வாகன நெரிசல் காரணமாக பெரும் சிரமத்திற்கு உள்ளாவதாலும், கண்டி நகரில் வாகன நெரிசலை குறைப்பதற்காக துரித தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

131.

பா.157/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— கண்டி நகரத்தில் முஸ்லிம் ஆண்கள் பாடசாலையொன்றை ஆரம்பித்தல்,— கண்டி மாவட்டத்தில் பெருமளவிலான முஸ்லிம் மக்கள் வாழ்வதுடன், கண்டி நகரை அண்மித்தாக முஸ்லிம் ஆண்கள் பாடசாலையொன்றை அமைக்க வேண்டுமென்பது இப்பிரதேச மக்களினது நீண்ட கால கோரிக்கையாகவும் அமைந்துள்ளமையால், மிக விரைவில் கண்டி நகரத்தில் முஸ்லிம் ஆண்கள் கல்லூரியொன்றை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

132.

பா.158/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பிரபல்யமிக்க பாடசாலைகளின் முதலாம் தரத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக புதிய கட்டிடங்களை நிர்மாணித்தல்,— கண்டி நகருக்கு அண்மையிலுள்ள பிரபல்யமிக்க பாடசாலைகளின் முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு பெரும் தொகையானோர் விண்ணப்பித்த போதிலும், இப்பாடசாலைகளில் இடவசதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பிள்ளைகளை அனுமதித்தல் மிகவும் சிரமமானதாக அமைந்துள்ளமையால், கண்டி நகரை அண்மித்துள்ள முதன்மையான பாடசாலைகளுக்கு, முதலாவது தரத்துக்கான வகுப்புக்களை நடாத்துவதற்காக புதிய கட்டிடங்களை மிக விரைவில் நிர்மாணித்துக்கொடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

133.

பா 159/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— கண்டி பல்லேகலே சுதந்திர வர்த்தக வலயத்தை முறைசார்ந்த விதத்தில் விரிவுபடுத்தல்,— கண்டி மாவட்டத்தில் தொழில் வாய்ப்பின்றி பெருமளவிலான இளைஞர் யுவதிகள் இருக்கின்ற காரணத்தினால், இவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை துரிதமாக வழங்குவதற்காக கண்டி பல்லேகலே பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு சுதந்திர வர்த்தக வலயங்களையும் முறைசார்ந்ததாக அமைத்து அதிகமானோருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுப்பதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

134.

பா 160/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— மலைநாட்டு கிராமிய புனர்வாழ்வளிப்பு ஆணைக்குழுவை மீள தாபித்தல்,— ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் நிர்க்கதி நிலைக்குள்ளான மலைநாட்டில் வாழும் மக்களுக்கு நிவாரணமளிக்கும் பொருட்டு தாபிக்கப்பட்டிருந்த மலைநாட்டு கிராமிய புனர்வாழ்வளிப்பு ஆணைக்குழு கடந்த ஆட்சிக் காலத்தின்போது செயலிழக்கச் செய்யப்பட்டிருந்த காரணத்தினால் மலைநாட்டு மக்களுக்கு நேர்ந்துள்ள அநீதிகளுக்கு நீதி வழங்குவதற்காக மலைநாட்டு கிராமிய புனர்வாழ்வளிப்பு ஆணைக்குழுவை மீள முறைசார்ந்த விதத்தில் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

135.

பா. 169/ '16

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,- புதிய விளையாட்டுத்துறைச் சட்டமொன்றை அறிமுகப்படுத்தல்,- மாவட்ட விளையாட்டுக் கழகங்களின் வாக்குளால் விளையாட்டுக் கட்டுப்பாட்டு சபைகளுக்கு உத்தியோகத்தர்கள் தெரிவு செய்து நியமிக்கப்படும் முறைக்கு பதிலாக புதியதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தி, அதன் மூலம் மேற்படி உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பில், பொது பொதுமக்களுக்கு அல்லது பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறும் வகையில் இலங்கையில் விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்துக்கும் மேம்பாட்டுக்குமென புதியதொரு சட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

136.

பா.183/ '16

கௌரவ அப்துல்லாஹ் மஹரூப்,— ஒரு மில்லியன் வேலைவாய்ப்புக் கருத்திட்டத்தை அமுல்படுத்தும் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இளைஞர்களுக்கு முன்னுரிமை அளித்தல்,— ஒரு மில்லியன் வேலைவாய்ப்புக் கருத்திட்டத்தை அமுல்படுத்தும் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் முப்பத்தைந்து தொடக்கம் நாற்பத்தைந்து வயதிற்கு இடைப்பட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும், ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் சிரேஷ்ட இரண்டாம் நிலை மட்டங்களில் பாடசாலையை விட்டு விலகிய மற்றும் க.பொ.த. (சா/த) தகைமைகளுடன் இருபது வருடங்களுக்கு மேலாக பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளோரின் உயர்கல்வித் தகைமைகளைப் பரிசீலிக்காது நிரந்தர அந்தஸ்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

137.

பா.184/ '16

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,— நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற குற்றச் செயல்கள் மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக சகல பிள்ளைகளுக்கும் 9 ஆம் தரம் வரை அவர்களது சமயங்களின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயப்படுத்தல் உகந்ததென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

138.

பா.185/'16

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற கற்கை நிலையமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கை மற்றும் பல்வேறுபட்ட நாடுகளின் பாராளுமன்ற நடைமுறைகள், பாராளுமன்ற வரலாறு மற்றும் அரசியல் முறையியல்கள் குறித்து பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள் மற்றும் ஏனைய கல்விபெறுவோர்களுக்கு கற்பதற்கான வசதிகளை வழங்கக்கூடிய வகையிலான கற்கை நிலையமொன்று பாராளுமன்றத்தினுள் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

139.

பா.191/17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கோழிப் பண்ணை உரிமையாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற *'பற்றரி கேஜ்'* முறைமையை நிறுத்துதல்,— இலங்கை பண்டைய காலந்தொட்டு உயிரினங்கள் மீது அன்பு செலுத்துகின்ற பௌத்த நாடாக விளங்கிய போதிலும், இன்றளவில் சில கோழிப் பண்ணையாளர்கள் பயன்படுத்துகின்ற *பற்றரி கேஜ்* முறைமை காரணமாக விலங்குகள் பெரும் சித்திரவதைக்குள்ளாவதனாலும், அதிக முட்டை உற்பத்தியின் மூலம் சிறிய அளவிலான கோழிப் பண்ணையாளர்களின் தொழில்கள் ஆபத்தான நிலைக்கு உள்ளாகியுள்ளதன் காரணத்தினாலும், மேற்படி மனிதாபிமானமற்ற முறைமையை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகின்றது.

140.

பா. 192/17

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் சிறப்புப் பயிற்சி பெற்ற உளநல ஆலோசகர்களை அல்லது போசகர்களை நியமித்தல்,— தற்போது பரவலாக காணக்கூடியதாக உள்ள இளைஞர் யுவதிகள், மாணவ மாணவியர்கள் தற்கொலை செய்து கொள்ளும் போக்கினை தடுப்பதற்கு அனைத்து அரச கல்வி நிறுவனங்களுக்கும் பயிற்சி பெற்ற உளநல ஆலோசகர்கள், போசகர்கள் நியமிப்பட வேண்டுமென அல்லது மேற்படி கல்வி நிறுவனங்களில் தற்போது பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு உளநல ஆலோசனை தொடர்பான சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகின்றது.

141.

பா.193/17

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— அனைத்து பல்கலைக்கழகங்களிலும் தற்போது காணப்படுகின்ற பகிடிவதையை முற்றாக நிறுத்துவதற்கு இருப்பிலுள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்தல்,— பல்கலைக்கழகங்களில் அல்லது அதற்கு வெளியே புதிய மாணவர்களுக்கு எதிர்கொள்ள நேரிட்டுள்ள பகிடிவதையை முற்றாக தடுப்பதற்கு மற்றும் 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதைகளையும் ஏனைய இயல்பிலான கொடூரச் செயல்களையும் தடை செய்வதற்கான சட்டத்தின் பிரகாரம் அவ்வாறு பகிடிவதைகளில் ஈடுபடுகின்ற சகல தரப்புகள் தொடர்பிலும் சட்டம் அமுலாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகின்றது.

142.

பா. 194/17

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— இணையத் தளங்களில் ஆபாச காணொளிகள் உலாவுவதை தடுக்கும் பொருட்டு சிறப்பு நிறுவனமொன்றை தாபித்தல்,— தற்போது அதிகளவில் இணையத் தளங்கள் ஊடாக பல்வேறு ஆபாச காணொளிக் காட்சிகள் உலாவுவதன் மூலம் ஆட்களின் அந்தரங்கத்துக்கு பாதிப்பேற்படுவதோடு குறிப்பாக பெண்கள் அதன் மூலம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதால், இவ்வாறான காணொளிக் காட்சிகளை தன் வசம் வைத்துள்ள, விநியோகிக்கின்ற மற்றும் உருவாக்குகின்ற ஆட்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு பயன்மிக்க சிறப்பு பிரிவொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகின்றது.

143.

பா. 195/ ' 17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— யுத்தத்தின்போது உயிரிழந்த மக்களை நினைவுகூர்வதற்காக நினைவுத்தூபியொன்றை அமைத்தல் மற்றும் நினைவுகூர்வதற்கான பொதுத் திகதியொன்றைக் குறித்தொதுக்குதல்,— வட மாகாணத்தில் கடந்த பல தசாப்தங்களாக காணப்பட்ட யுத்த நிலவரம் நீங்கி அமைதியானதொரு வாழ்க்கை முறைக்கு மக்கள் பிரவேசித்துள்ளதோடு, கடந்த காலப்பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலைமையின் காரணமாகவும், யுத்த நிலவரம் காரணமாகவும், படுகொலைக்கு உள்ளான அனைத்து இன, மத மற்றும் சமூகங்களைச் சேர்ந்த, சகல மொழிகளையும் பேசுகின்ற மக்களை இலங்கையர்களாக நினைவுகூர்ந்து, அம்மக்கள் தாய் நாட்டுக்காக மேற்கொண்ட தியாகங்களுக்கு மதிப்பளிப்பதற்காக, வட மாகாணத்தின் ஓமந்தைப் பிரதேசத்தில் பொருத்தமானதோர் இடத்தில் “நினைவுத்தூபியொன்றை”அமைப்பதற்கும், மேற்படி யுத்த நிலவரம் காரணமாக உயிரிழந்த சகல இன, மத மற்றும் மொழிகளைப் பேசுகின்ற மக்களை நினைவுகூர்வதற்காக பொருத்தமான திகதியொன்றை பெயரிட்டு ஒவ்வோர் ஆண்டும் அத்தினத்தைக் கொண்டாடுவதற்கும் அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகின்றது.

## 2017 செப்தெம்பர் 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

893/ ’16

கௌரவ புத்திக பத்திரண,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், பாணம கிராமத்தில் வசிக்கும் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் மிகவும் சகவாழ்வுடன் வசிக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இம்மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதில் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாணம பிரதேச மக்களின் தண்ணீர், காணி சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அவை யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி மக்களின் கலாசார தனித்துவங்கள் மற்றும் பாரம்பரிய உரிமைகளை பேணி வாழ்வதற்கு அரசாங்கம் அனுசரணை வழங்கியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், எவ்வாறு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1270/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 சனவரி 08 ஆம் திகதிக்கு முன்னர் மொணறாகலை மாவட்டத்தின் ஒவ்வொரு வலயக் கல்வி அலுவலக மட்டத்தில் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகிய ஆசிரியர்கள் இருந்தார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்படும் ஆட்களுக்கு பழிவாங்கலுடன் தொடர்புடையதாக விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அந்த ஆவணத்தின் முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1351/ '16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான மொத்தக் காணிகளின் அளவு ஒவ்வொரு நகரத்தின் அடிப்படையில் தனிதனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தக் காணிகளின் அளவில் குத்தகை அடிப்படையில் அல்லது வேறு ஏதேனுமோர் அடிப்படையில் தற்போது திணைக்களத்தின் உபயோகத்திலிருந்து நீக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு,

(i) ஏற்புடைய பரப்பளவு;

(ii) ஏற்புடைய பூகோள ஆளுகைப் பிரதேசம்;

(iii) ஏற்புடைய அடிப்படை;

(iv) திணைக்களத்தின் உபயோகத்திலிருந்து நீக்கப்பட்ட திகதி;

ஆகியவற்றுக்கு அமைய தனிதனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்க, விற்பனை செய்ய அல்லது திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்குவதற்கு தற்போது ஏதேனும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த காணிகள் யாவை;

(iii) ஏற்புடைய காணிகளை நீக்குவதற்கான அடிப்படை யாது;

(iv) குத்தகை அடிப்படையில் நீக்கப்பட்டுள்ள காணிகளின் ஒரு பர்சஸிற்கு தற்போது அறவிடப்படுகின்ற குத்தகைத் தொகை யாது;

(v) குத்தகை செலுத்துவதை புறக்கணித்துள்ள காணிகளின் எண்ணிக்கை யாது;

(vi) குத்தகை செலுத்துவதை புறக்கணித்துள்ளமை தொடர்பாக மேற்கொள்ளப் பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

1407/ '16

கௌரவ பந்துல குணவர்த்தன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 வரவு செலவுத்திட்டத்தில் 183 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், கௌரவ பிரதம அமைச்சரின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு, தாபிப்பதற்கு முன்மொழியப்பட்ட விசேட கமத்தொழில் மற்றும் மீன்பிடி ஏற்றுமதி வலயங்களில், 2016 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட வலயங்களின் எண்ணிக்கை மற்றும் அவை தாபிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பிரேரணைக்கு அமைய, தாபிக்கப்பட்ட ஒவ்வொரு வலயத்திற்காகவும் அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட மொத்த செலவினம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) இந்த கமத்தொழில் மற்றும் மீன்பிடி ஏற்றுமதி வலயங்களின் பொறுப்பை எந்த அரச நிறுவனம் ஏற்றுள்ளது என்பதையும்;

(iv) 2016 ஆம் ஆண்டில் அவ்வாறான வலயங்கள் தாபிக்கப்பட்டிருப்பின், மேற்படி ஒவ்வொரு வலயத்தினதும் ஏற்றுமதி வருவாய் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1467/ ’16

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஒய அபிவிருத்தி கருத்திட்டம் காரணமாக பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இக் கருத்திட்டத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் ஏற்புடைய பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) இக் கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நீதிமன்ற கட்டளைக்கமைய, உமா ஒய அபிவிருத்தி கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1514/ ’17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும், ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை ஆண்டு ரீதியாக தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி பயங்கரவாத சந்தேக நபர்களுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுக்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1571/ ’17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிழக்கு மாகாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகள் தொடர்பாக,

(i) அதிபர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியையும்;

(ii) தற்போதைய அதிபர்களின் பெயர்களை அவர்களின் தரத்துடனும்;

(iii) பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் பதவிக்கு அமர்த்தப்பட்டுள்ள அதிபர்களின் பெயர்களையும்;

(iv) பகிரங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்படாதுள்ள நியமனங்களைக் கொண்டிருக்கும் அதிபர்களின் பெயர்களையும் அந்த நியமனங்களை அங்கீகரித்த அலுவலரின் பெயரையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) பகிரங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரால் அன்றி தேசிய பாடசாலைகளில் உள்ள அதிபர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்குவது ஒழுங்கு முறையாகுமா என்பதையும்;

(ii) அதை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்

(iii) அவ்வாறெனில் எப்போது என்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1579/ ’17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் சீனாவின் உதவியுடன் கித்துல்கல, கலுகொஹுதென்ன பிரதேசத்தில் புரோட்லண்ட் நீர் மின் நிலையத்தை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை அறிவாரா;

(ii) இக்கருத்திட்டத்துக்காக அரசாங்கத்துக்கு சுவீகரிக்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிராமத்தின் குடியிருப்பாளர்களின் காணிகளுக்கு தகுந்தவாறு இழப்பீடு வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்டதுடன், நுவரெலியா மாவட்டத்துக்குரிய குடியிருப்பாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டபோதிலும் கேகாலை மாவட்டத்திற்குரிய குடியிருப்பாளர்களுக்கு மிகச் சிறியதொரு இழப்பீட்டுத் தொகையே வழங்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இது தொடர்பாக விசாரித்து கேகாலை மாவட்டத்துக்குரிய குடியிருப்பாளர்களுக்கும் போதியளவு இழப்பீட்டுத் தொகையை வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1590/ ’17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உத்தேச குருணாகல் – ஹபரண புகையிரதப் பாதையின் ஆரம்ப திட்டத்தை மாற்றுவதற்கு இவ்வளவு காலம் எடுத்தது ஏனென்பதையும்:

(ii) மேற்படி மாற்றத்தினூடாக பழைய திட்டம் தோல்விகரமானதென்பது புலப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதை புரிந்துக்கொள்வதற்கு இவ்வளவு காலம் எடுத்தது ஏனென்பதையும்;

(iv) மேற்படி மாற்றத்தினால் விரயமாக்கப்பட்ட பொதுப்பணம் மற்றும் அதற்கு இரையான மக்கள் மீது விடுக்கப்பட்ட அழுத்தம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி இரண்டு திட்டங்களையும் விபரமான அறிக்கைகளுடன் தனித்தனியாக சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vi) மேற்படி புகையிரத வீதி அமைக்கப்படுவதன் அடிப்படைத் தேவை யாதென்பதையும்;

(vii) இப் புகையிரத பாதை காரணமாக சொத்துக்களை இழக்கின்றவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுமா என்பதையும்;

(viii) ஆமெனில், நட்டஈட்டுத் தொகை மற்றும் நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(ix) ஆரம்ப திட்டத்தின் படி சொத்துகளை இழக்கின்ற மக்கள் குறிப்பிட்ட காணிகளில் எத்தகைய அபிவிருத்திப் பணியையும் செய்ய முடியாதுள்ளமை, காணிகளின் வர்த்தக மதிப்பீடு குறைவடைதல், கடன்பட்டு புதிய வீடுகளை நிர்மாணித்து குடியிருந்த வீடுகளின் பராமரிப்பு கைவிடப்பட்டமை போன்ற காரணங்களினால் சுமார் 10 ஆண்டு காலம் கடும் அழுத்தத்துடன் இருந்தனர் என்பதை ஏற்றுகொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1617/ ' 17

கௌரவ ஹேஷான் விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் செயற்படும் தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண சபைப் பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவை;

(ii) இப்பாடசாலைகளில் தகுதிவாய்ந்த அதிபர்கள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(iii) அப்பாடசாலைகள் யாவை;

(iv) கடந்த காலத்தில் அரசியல் நட்பின் பேரில் தகைமையற்ற பதில் அதிபர்கள் பெருமளவில் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1631/ '17

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புதுப்பிக்கத்தக்க சக்தியினை மேம்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இற்றைவரை கிடைத்துள்ள மொத்த கொடைகள் மற்றும் கடன்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கடன்/கொடை கிடைக்கப்பெற்ற ஆண்டு மற்றும் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கடன்/கொடை மூலமாக புதுப்பிக்கத்தக்க சக்தி மேம்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு பற்றி திருப்தியடைகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1638/ ' 17

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையின் கட்டமைப்புக்குள் புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்திக்காக விசேடமாக பொறுப்புகள் சாட்டப்பட்டுள்ள பிரிவொன்று இல்லையென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட விசேடமான பிரிவொன்று இல்லாமல் புதுப்பிக்கத்தக்க சக்தியை உச்ச அளவில் தேசிய மின்சார முறைமைக்கு சேர்க்கின்றபோது தோன்றக்கூடிய தொழில்நுட்ப சவால்களை வெற்றிகொள்ள முடியுமா என்பதையும்;

(iii) புதுப்பிக்கத்தக்க சக்தி சம்பந்தமாக இலங்கை மின்சார சபை காட்டும் பிற்போக்கான மனோபாவத்திற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1687/ ' 17

கௌரவ டக்ளஸ் தேவானந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின் 331 பாடசாலைகளில் அதிபர்கள் இல்லையென்பதையும்; பதிற்கடமையாற்றும் அதிபர்களாக 252 பேர் செயலாற்றுகின்றனரென்பதையும்;

(ii) இந்த பதிற்கடமையாற்றும் அதிபர்களை இலங்கை அதிபர் தரத்திற்கு உள்ளீர்க்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளனவென்பதையும்;

(iii) பட்டிருப்பு கல்வி வலயத்தின் போரதீவுப்பற்று கோட்டத்தில் 1ஏ, பீ தரத்தைச் சேர்ந்த பாடசாலைகள் இல்லையென்பதையும்;

(iv) அக்கோட்டத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்டுள்ள 331 பாடசாலைகளுக்காக அதிபர்களை நியமிக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) பதிற்கடமையாற்றும் 252 அதிபர்களின் நிலைமை என்ன;

(iii) போரதீவுப்பற்று கோட்டத்திற்கு 1ஏ, பீ தரத்தைச்சேர்ந்த பாடசாலையொன்றை வழங்க இயலுமா;

(iv) கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறைய நிவர்த்திசெய்ய மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1698/ ' 17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க காணிகளில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் குடியிருக்கின்ற ஆட்களுக்கு உரித்து உறுதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியிலான ஒரு தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதென்பதையும்;

(ii) 2016.10.27 ஆம் திகதி பிரதம அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட்ட நடுத்தர கால பொருளாதார நோக்கு பற்றிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தின் மூலம் இது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) 2015.01.08 ஆம் திகதிக்கு பின்னர் உரித்து உறுதிகள் வழங்கப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தற்சமயம் உரித்து உறுதிகளை பெற்றுக்கொடுப்பதற்காக இனங்காணப் பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை, மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிகளின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டுகளில் அரசாங்கத்தினால் வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை, மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிகளின் அடிப்படையில் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) தேசிய பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததான மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அதிக தாமதம் ஏற்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) ஆமெனின், மேற்படி வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1703/ ' 17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சட்டமும், ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வசீம் தாஜுதீனின் சில உடற் பாகங்கள் மாலம்பே, நெவில் பெர்ணாந்து வைத்தியசாலையில் அல்லது SAITM நிறுவனத்தினுள் கண்டெடுக்கப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி உடற் பாகங்களை கொழும்பு தேசிய வைத்தியசாலையிலிருந்து கொண்டுசெல்வதற்கு மற்றும் மேற்படி இடத்தில் வைத்திருப்பதற்கு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்காக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2017 செப்தெம்பர் 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

120/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையர்கள் புற்று நோய்க்கு இரையாகக்கூடிய போக்கு அதிகரித்துக் காணப்படுகின்றதென்பதையும்;

(ii) இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு இதுவரை முறைசார்ந்ததொரு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்;

(iii) இதன் காரணத்தினால் நாட்டின் மனித வளமும் அதேபோன்று பணமும் அழிவடைகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) தற்போது இலங்கையில் அதிகளவில் காணப்படுகின்ற புற்று நோய்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நோய்கள் ஏற்படுவதற்கு ஏதுவான பிரதானமான காரணங்கள் ஒவ்வொரு நோய்க்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அக் காரணங்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எந்த விதத்தில் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த 05 ஆண்டுகளில் புற்று நோயாளர்களின் சிகிச்சைகளுக்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட பணத்தொகை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) கடந்த 05 ஆண்டுகளில் புற்று நோய் ஒழிப்பு வேலைத்திட்டத்துக்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட பணத்தொகை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1112/ ’16

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சுக்குச் சொந்தமான திணைக்களங்கள், அதிகார சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நியதிச் சட்ட நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலும் கடமையாற்றுகின்ற மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) 2015 இல் தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்க்கப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) தற்போது மேற்படி நிறுவனங்களில் வெற்றிடங்கள் உள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், எதிர்காலத்தில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1204/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 ஆண்டளவில் அம்பாறை மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1374/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட பிரேரணை இலக்கம் 128 இற்கு ஏற்ப, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்யும் கம்பனிகளுக்கு, பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாடுள்ள அரசாங்க காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், மேற்படி அரசாங்க காணிகள் யாவை;

(iii) மேற்படி வரவு செலவுத்திட்ட பிரேரணைக்கு அமைவாக, காணிகளைக் கோரிய கம்பனிகள் யாவை;

(iv) மேற்படி கம்பனிகளின் விவசாய உற்பத்தித் துறைகள் யாவை;

(v) மேற்படி காணிகள் கையளிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1515/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வழக்கு தொடரப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பயங்கரவாத குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1572/ '17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பெயர்களை அவர்களின் தரங்களுடனும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட பெயர்களில், நிரந்தர,பதில் மற்றும் காப்பீட்டு (cover up) அடிப்படையில் கடமைகளை மேற்கொள்ளும் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பெயர்களையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை கல்வி நிருவாக சேவையில் பதில் நியமனத்துக்கு தகுதியுள்ள வகுப்பு-II ஐச் சேர்ந்த அலுவலர்கள் இருக்கும் போது, காப்பீட்டுக் (cover up) கடமையில் கனிஷ்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்ட விடயம் 2015.08.21 ஆந் திகதிய 1928/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கல்வி நிருவாக சேவை பிரமாணக் குறிப்புக்கு முரணானது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) இந்த ஒழுங்கீனத்தை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், எப்போது என்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

1591/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உத்தேச குருணாகல் – ஹபரணை புகையிரதப் பாதையின் ஆரம்பத் திட்டம் தயாரிக்கப்பட்டு 10 வருடங்களுக்கு பின்னர் அதனை மாற்றியமைத்து புதிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டதன் விளைவாக சொத்துக்களை இழக்கும் மக்களுக்கு பாரிய அநீதி ஏற்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இத்திட்டம் மாற்றியமைப்பட்டமைக்கு எதிராக மக்கள் எதிர்ப்பு கிளம்பியுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) நிர்மாணிப்புகளுக்காக மற்றும் நட்டஈட்டினை வழங்குவதற்காக உத்தேசிக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) இந்த பணத்தொகையை வழங்கும் நிறுவனம் மற்றும் வழங்கும் அடிப்படை யாதென்பதையும்;

(v) மேற்படி புகையிரதப் பாதை அமைக்கப்பட்ட பின்னர் குருணாகலில் இருந்து மஹவ ஊடாக ஹபரணை வரையுள்ள புகையிரதப் பாதையின் பயன் யாதென்பதையும்;

(vi) உத்தேச புகையிரதப் பாதையின் மூலம் கிடைக்கும் நன்மைகள் யாவையென்பதையும்;

(vii) ஹபரணைக்கு மாற்று புகையிரதப் பாதையொன்று இருக்கும் நிலையில் குருணாகல் ஊடாக அதிவேகப் பாதையொன்றும் அமைக்கப்படும் நிலையில் உத்தேச புகையிரதப் பாதைக்காக ஈடுபடுத்தப்படும் பெருந்தொகையான முதலீட்டுடன் ஒப்பிடுகையில், ஒப்பீட்டளவில் கிடைக்கும் நன்மைகள் பற்றி திருப்தியடைய முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1618/17

கௌரவ ஹேஷான் விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்பிரகமுவ மாகாண பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்தின்படி வெவ்வேறாக எவ்வளவு;

(iii) இவ்வாசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் துரித நடவடிக்கைகள் யாவை;

(iv) மாகாண சபைப் பாடசாலைகளுக்கான இடமாற்ற முறையியல் சப்பிரகமுவ மாகாணத்தில் உரிய முறையில் நடைபெறுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1688/ ' 17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி பேரழிவு காரணமாக கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பிரதேசத்தில் வீடுகள் அழிவடைந்த மக்களுக்கு வீடுகளை வழங்குவதற்காக சவுதி அரேபிய அரசாங்கத்தின் நிதியுதவியைக் கொண்டு நுரைச்சோலை பிரதேசத்தில் மாதிரிக் கிராமமொன்றை நிர்மாணிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் 2006.05.02 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டதென்பதையும்;

(ii) அதற்கிணங்க ஏனைய அனைத்து வசதிகளையும் கொண்டதாக 500 வீடுகளை உள்ளடக்கிய இந்த மாதிரிக் கிராமம் நிர்மாணிக்கப்பட்டதென்பதையும்;

(iii) இந்த மாதிரிக் கிராமத்தின் வீடுகள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இற்றைவரை வழங்கப்படவில்லை என்பதையும், இன்றளவில் அப்பிரதேசம் அடர்ந்த காட்டினால் மூடப்பட்ட நிலைமையைக் காணக்கூடியதாக உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்ட வீடுகளை அவை நிர்மாணிக்கப்பட்ட நோக்கத்திற்கமைவாக ஏற்புடைய மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) நடப்பு நிலைமைக்கிணங்க இந்த வீடுகளை மீண்டும் திருத்தியமைக்க வேண்டிய தேவை உள்ளமையால் அதற்கான நிதியுதவியை வழங்குவாரா;

என்பதை அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1699/ '17

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி காணிகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வசிப்பவர்களுக்கு உரிமை உறுதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேலே குறிப்பிட்ட கொள்கையை அமுலாக்குவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) 2015.01.08 ஆம் திகதிக்குப் பின்னர் உரிமை உறுதிகள் பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) தற்சமயம் உரிமை உறுதிகளை பெற்றுக்கொடுப்பதற்காக இனம் காணப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) மேலே (iv) இல் குறிப்பிடப்பட்ட காணித் துண்டுகளில் அரசாங்கத்தினால் வரைபடம் தயாரிக்கப்பபட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(vi) தேசிய பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததான மேலே கூறப்பட்ட கருத்திட்டத்தின் அமுலாக்கம் வெகுவாக தாமதப்படுத்தப் பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vii) ஆமெனின், மேற்படி வேலைத்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1701/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வலுவூட்டல் என்ற எண்ணக்கரு எவ்வாறு பொருள்கோடப்படும் என்பதையும்;

(ii) இதற்கு அமைவாக ஒரு பிரதேசத்திலிருந்து ஒரு தடவையில் 10% வீதம் குடும்பங்களை வலுவூட்டி இவர்களை சமுர்த்தி நலன்களிலிருந்து நீக்குவது எவ்வாறு என்பதையும்;

(iii) ஒருவரது நாளாந்த வருமானம் ரூபா 300/- ஆகின்றபோது குடும்பத்தில் இருவர் மாதத்தில் 30 நாட்கள் வேலை செய்தாலும் மாத வருமானம் ரூபா 18,000/- ஆகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களுக்கு அமைவாக இரண்டு பிள்ளைகள் உள்ள (பெற்றோருடன் 04 பேர் அடங்கிய) குடும்பமொன்றிற்கான மாதாந்த அத்தியவசிய செலவு ரூபா 41,000/- ஐ விட அதிகமாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இதற்கு அமைவாக சமுர்த்தி உதவியை நிறுத்தி வலுவூட்டப்படும் ஒரு குடும்பத்தின் நிரந்தர மாதாந்த வருமானம் ரூபா 41,000/- என்ற அளவில் இருக்க வேண்டுமல்லவா என்பதையும்;

(iii) ஆமெனின், வலுவூட்டப்பட்ட குடும்பம் என்பது ரூபா 41,000/- க்கு மேற்பட்ட நிரந்தர மாதாந்த வருமானத்தை கொண்டுள்ள குடும்பமாக நிர்ணயிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

1704/ ' 17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது இலங்கையில் இயங்கிவருகின்ற பட்டமளிக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை யாது என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும்,

(i) முகவரி;

(ii) பட்டமளிப்பதற்காக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதி;

(iii) அளிக்கப்படுகின்ற பட்டங்கள்;

(iv) கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை;

(v) ஒவ்வொரு பட்டப் பாடநெறிக்கும் அறவிடப்படுகின்ற பணத் தொகை;

தனித்தனியாக யாது என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

1706/ ' 16

கௌரவ விதுற விக்கிரமநாயக்க,— சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிரேஷ்ட பிரசைகள் கொடுப்பனவாக ஒரு சில குறைந்த வருமானம் பெறுவோர் மாதாந்தம் ரூபா 1900/- ஐப் பெற்றுக் கொண்டார்கள் என்பதையும்;

(ii) வேறு வருமான வழிகள் இல்லாத மற்றும் பிள்ளைகளின் உதவி ஒத்தாசைகள் இல்லாத குறைந்த வருமானம் பெறுவோரின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு இப்பணத்தொகை பெரும் உதவியாக இருந்தது என்பதையும்;

(iii) தமது வயோதிபநிலைக்கு அரசாங்கம் வழங்கும் ஒரு நன்றிக் கொடுப்பனவாக அவர்கள் இதனை மதித்தார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்கின்ற இக் காலப்பகுதியில் ஒரு சில சிரேஷ்ட பிரசைகளுக்கு மேற்படி கொடுப்பனவை வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) ஒரு பிள்ளையேனும் அரசாங்க சேவையில் ஈடுபட்டிருப்பின், அவர் திருமணம் முடித்து வேறு ஓர் இடத்தில் வசித்து வந்தாலும், இந்தக் கொடுப்பனவு அவர்களின் தந்தை அல்லது தாய்க்கு உரித்தானதாக இருந்த போதிலும், அண்மையில் அவ்வாறான ஆட்களுக்கும் இக்கொடுப்பனவைச் செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) தனியே வாழும் சிரேஷ்ட பிரசைகளுக்கு இந்தக் கொடுப்பனவை வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளமையானது மிகவும் அநீதியானதாகும் என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) மேற்படி கொடுப்பனவைச் செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ள சிரேஷ்ட பிரசைகளுக்கு மேற்படி கொடுப்பனவை மீண்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

14.

1724/ '17

கௌரவ கனக ஹேரத்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை,

(i) இலங்கையில் தெங்கு பயிரிடப்பட்டுள்ள காணியின் பரப்பளவு;

(ii) துண்டாடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள தென்னங் காணியின் பரப்பளவு;

(iii) துண்டாடப்பட்டுள்ள தென்னங் காணியின் பரப்பளவு;

ஒவ்வோராண்டு வாரியாகவும், மாவட்ட வாரியாகவும் தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தென்னங் காணிகளை துண்டாடுவதன் மூலம், நாட்டில் தெங்குச் செய்கைக் காணிகளின் அளவு குறைவடைந்து உள்நாட்டு நுகர்வுக்கு தேவையான தேங்காய் பற்றாக்குறை ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அதற்குத் தீர்வாக கடைப்பிடிக்க உத்தேசித்துள்ள முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1736/ ' 17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரண்டாம் நிலைப் பாடசாலைகள் 1000 ஐ அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்டத்தில், கிரிஉல்ல கல்வி வலயத்திற்கு உரித்தான, கெகுனகொல்ல முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு நீக்கப்பட்டது என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் கெகுனுகொல்ல, ஜும்மா பள்ளிவாசலுக்கு உரித்தான காணியில் தற்காலிக கட்டிடமொன்றில் மேற்படி ஊட்டப் பிரதேசத்தின் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

(iii) ஆரம்பப் பிரிவில் சமாந்தரமான பல வகுப்புக்களில் சுமார் 200 மாணவர்கள் கல்வி பயிலும் மேற்படி பாடசாலைக்கு போதியளவு ஆசிரியர்கள், வகுப்பறை வசதிகள், தளபாடங்கள், சிறுவர் பூங்கா, பாதுகாப்பு வேலி மற்றும் மலசலகூட வசதிகள் உள்ளிட்ட மனித மற்றும் பௌதீக வளங்கள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் நலனுக்காக மேலே குறிப்பிடப்பட்ட தேவைகள் அனைத்தையும் தாமதிக்காது பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2017 செப்தெம்பர் 21, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1087/ ' 16

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு.— (2)

(அ) (i) தரைப்படை, விமானப்படை மற்றும் கடற்படை ஆகிய முப்படைகளின் குதிரைப்படை பிரிவினுள் இருக்கின்ற குதிரைகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு படையின்படி தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி குதிரைகளை பராமரிக்க செலவிடப்படும் பணத் தொகை ஒவ்வொரு படையின்படி தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி குதிரைகளிடமிருந்து பெறப்படும் பயன்கள் ஒவ்வொரு படையின்படி தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி படைகளின் குதிரைப்படை பிரிவுக்கு மேலும் குதிரைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக செலவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு படையின்படி தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1205/ ' 16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 ஆண்டளவில் புத்தளம் மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1376/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட பிரேரணை இலக்கம் 130 இற்கு இணங்க, அதிக விளைச்சலை பெற்றுக்கொடுக்கின்ற விதைகளை அறிமுகப்படுத்தும் கம்பனிகளுக்கு பகுதியளவு வரி விலக்களிப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டதா என்பதையும்;

(ii) இவ்வாறான வரி ஊக்குவிப்பை பெற்றுக்கொண்ட நிறுவனங்களின் பெயர் பட்டியலை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 சனவரி 01 ஆம் திகதியளவில், இறக்குமதி வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த, இயந்திர சாதனங்களின் பட்டியலொன்றையும்;

(ii) 2016 சனவரி 01 ஆம் திகதிக்குப் பின்னர், இறக்குமதி வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த, இயந்திர சாதனங்களின் பட்டியலொன்றையும்;

சமர்ப்பிப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1469/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பெயர்கள் யாவை;

(iii) தற்போது நிரந்தர கிராம உத்தியோகத்தரொருவர் காணப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் அங்கு சேவையில ஈடுபட்டுள்ள கிராம உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை;

(iv) பதுளை மாவட்டத்தில் காணப்படும் கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1516/ ' 17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தை வரைவு செய்வதற்கும் எண்ணக்கரு பத்திரங்களைத் தயாரிப்பதற்கும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட ஆட்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் செலுத்தப்பட்ட பணத் தொகை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1619/ ' 17

கௌரவ ஹேஷான் விதானகே,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் துரிதமாக அபிவிருத்தி அடைந்துவரும் எம்பிலிப்பிட்டிய நகரத்தில் வர்த்தகக் காணிகளுக்கு உரித்துகளை வழங்குவதில் பிரச்சினை நிலவுகின்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், சரியான முறையில் காணி உரித்துகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நகரத்தில் காணிகள் தொடர்பில் விஹாரையொன்று உரிமை கோருவதனால், வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் கட்டிடங்களை நிர்மாணிப்பதில்லை என்பதை அறிவாரா;

(ii) இவ்விஹாரைக்கு குறிப்பிட்ட காணிகள் தொடர்பில் உண்மையிலேயே இருக்கின்ற உரித்து யாது;

(iii) பல வருட காலமாக இந்நகரத்தில் குறிப்பிட்ட வர்த்தக நிலையங்களின் ஆட்சியை அனுபவித்து வருகின்ற வர்த்தகர்களுக்கு அவற்றின் உரித்தை வழங்குவதற்கும், தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வர்த்தக சமூகத்தினருக்கு வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1680/ '17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாங்கேணி, மகிழூர், மாஞ்சோலை, உன்னிச்சை, கதிரவெளி, மண்டூர் மற்றும் மகிளவட்டுவான் பிரதேச வைத்தியசாலைகள் மருத்துவ உத்தியோகத்தர்கள் தேவைப்படும் காரணத்தினால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) கட்டிடங்கள் ஏனைய வசதிகளுடனும் பெயர்ப் பலகைகளுடனும் உள்ளன என்பதையும்;

(iii) இப் பிரதேச மக்கள் மருத்துவ சிகிச்சைகளுக்காக மோசமான போக்குவரத்து வசதிகளுடன் தூர இடங்களுக்கு பயணம் செயவதன் மூலம் கடுமையான சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்;

(iv) வறிய கிராமங்களுக்கு இலவச மருத்துவ சேவைகளை வழங்குதல் எனும் எண்ணக்கரு பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த வைத்தியசாலைகளை மீளத் திறந்து அவற்றிற்கு குறைந்தது இரண்டு மருத்துவ உத்தியோகத்தர்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) இவ்வைத்திய சாலைகள் செயற்படுவதற்காக மீளத்திறக்கப்படும் திகதியினையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

8.

1692/ '17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொரியா தேசிய கடற்றொழில் ஒத்துழைப்பு சம்மேளனத்தின் உதவியுடன் இலங்கை கடற்றொழிலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி வீடமைப்புத் திட்டம் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்படி திட்டத்தின் கீழ் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்றொழிலாளர்களுக்கு வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படுகின்றனவா என்பதையும்;

(iv) ஆமெனில், நிர்மாணிப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை, பிரதேசங்கள் மற்றும் திகதிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1700/ '17

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டகளப்பு மாவட்டத்தின் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில், ஏறாவூர் பிரதேசத்தின், புன்னைக்குடா கிராமத்தில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான ஏறத்தாழ 370 ஏக்கர் பரப்பளவான காணி நீண்டகாலமாக எவ்வித அபிவிருத்திப் பணிக்கும் பயன்படுத்தாது அல்லது எவ்வித நிர்மாணிப்புகளோ அல்லது குடியிருப்பாளரோ அற்ற காணியாக காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி காணி பிரதேச செயலாளர் அறிந்திருக்கத்தக்கதாக கைத்தொழில் பேட்டையொன்றை நிறுவுவதற்கு இனம் காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இதற்கு அமைவாக, மேற்படி காணியை கைத்தொழில் பேட்டையொன்றை நிறுவுவதற்காக இலங்கை முதலீட்டுச் சபைக்கு சட்டரீதியாக கையளிப்பதற்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி காணி, மூதலீட்டு வலயமொன்றை நிர்மாணிப்பதற்கு தேவையான ஆரம்பக் கற்கையை மேற்கொள்வதற்காக ரூபா 38 மில்லியன் செலவில் இலங்கை முதலீட்டுச் சபையின் மூலம் லங்கா ஹைட்ரோலிக் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) தற்போது மேற்படி காணியில் ஒருசிலர் பனைமரங்களைத் தறித்து அனுமதியின்றி வேலிகளை நிர்மாணித்து, நிரந்தர கட்டிடங்களை நிர்மாணிக்க ஆரம்பித்துள்ளனரா என்பதையும்;

(vi) ஏற்புடைய அதிகாரிகள் அனுமதியற்ற நிர்மாணிப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1702/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாகச் சேவை பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதாகக் கூறி 980 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) எனினும், இற்றைவரை பரீட்சைக்கு தோற்றிய ஏனைய பரிட்சார்த்திகளுக்கு பெறுபேற்று அட்டவணை கூட அனுப்பப்படவில்லையென்பதையும்; இணையதளத்தில் கூட பெற்றுக்கொள்ள வாய்ப்பில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது பற்றி ஆராய்ந்து எஞ்சிய பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, இதற்கு அமைவாக தகைமை பெற்றவர்களை வெற்றிடங்களுக்கு அமைய ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

1705/ ’17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அழகியற் கலை பல்கலைக்கழகத்தின் இசைப் பீடம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அதன் பிரயோக இசைக் கற்கைப் பிரிவின் பாடவிதானத்தை செனற்சபை அங்கீகரித்துள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

(iv) மேற்படி கற்கைப் பிரிவிலுள்ள நிரந்தர, தற்காலிக மற்றும் பயிலுனர் விரிவுரையாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) தற்காலிக/பயிலுனர் விரிவுரையாளர்கள் மற்றும் போதனாசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1713/ ’ 17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004.12.26 ஆம் திகதியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தை எதிர்நோக்கிய அம்பாந்தோட்டை நகர சபை வீடுகள் வீதியின் 3/19 ஆம் இலக்கமுடைய வீட்டில் வசித்த திரு. ரீ.என். அமீர் உள்ளிட்ட 68 பேர்களின் காணிகள் 2010.03.17 ஆந் திகதி கரையோரப் பூங்காவொன்றினை நிர்மாணிப்பதற்காக சுவீகரிக்கப்பட்டதென்பதையும்;

(ii) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக மேலே குறிப்பிட்ட குழுவினருக்கு இற்றைவரை நட்டஈடு செலுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த குழுவினருக்கு நட்டஈடு செலுத்த நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில், அத் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

1749/ ’17

கௌரவ லக்கி ஜயவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் பேணிவரப்படுகின்ற வானொலி அலைவரிசைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வானொலி அலைவரிசைகளை பேணிவருகின்ற நிறுவனங்கள் யாவை;

(iii) மேற்படி வானொலி அலைவரிசைகளின் உரிமையாளர்கள் யார் மற்றும் மேற்படி அலைவரிசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

(iv) இன்றளவில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு ஒலிபரப்பு மேற்கொள்ளப் பட்டுவராத வானொலி அலைவரிசைகள் உள்ளனவா;

(v) ஆமெனில், அந்த அலைவரிசைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற நிறுவனம் யாது;

(ii) தற்போது மேற்படி வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் முறைசார்ந்த வகையில் இடம்பெறுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(iii) சமூகப் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் ஒருசில வானொலி அலைவரிசைகள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சாரங்கள் ஒலிபரப்பப்படுவதை தடுப்பதற்காக வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக முறைசார்ந்த முறையியலொன்றை துரிதமாக தயாரிப்பாரா;

(iv) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1773/ ’17

கௌரவ விஜித ஹேரத்,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010.09.10 ஆம் திகதிய 1670/33ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கணக்காளர் சேவை பிரமாணக் குறிப்பின்படி, அலுவலர்களை விசேட தரத்திற்குப் பதவி உயர்த்துகின்றபோது பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு முரணான வகையில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) பட்டப்பின்படிப்புத் தகைமைகளைக் கொண்டிராத அலுவலர்களுக்கு விசேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக நிதி அமைச்சின் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த காலப்பகுதி யாது என்பதையும்;

(iv) பகிரங்க சேவைகள் ஆணைக்குழு அதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதா என்பதையும்:

(v) குறித்த நேர்முகப் பரீட்சைக்காக 82 அலுவலர்கள் அழைக்கப்பட்டிருந்தனரா என்பதையும்;

(vi) இவர்களில், பகிரங்க சேவைகள் ஆணைக்குழு அங்கீகரித்த காலப்பகுதிக்குரிய அலுவலர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றையும், அதன் கீழ் வராத அலுவலர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) இந்த அலுவலர்கள் விசேட தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(viii) ஆமெனின், அந்த பதவி உயர்வுகள் நடைமுறைக்கு வரும் திகதி யாது என்பதையும்;

(ix) பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிகளுக்குப் புறம்பாக பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்குமாயின், அதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய அலுவலர்கள் யாவர் என்பதையும்;

(x) இந்த அலுவலர்கள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

(xi) பதவி உயர்வு கிடைக்காததால் பாதிக்கப்பட்ட அலுவலர்கள் சார்பாக எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1776/ '17

கௌரவ ஜயந்த சமரவீர,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.03.31 ஆந் திகதி உள்ளவாறு, வெளிநாடுகளில் பணிபுரிகின்ற இலங்கையைச் சேர்ந்த பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் பயிற்றுவிக்கப்படாத ஊழியர்களில் எண்ணிக்கை, இவர்கள் பணிபுரிகின்ற நாட்டுக்குமைய, தொழில் வகைப்படுத்தல்களுக்கமைய மற்றும் ஆண் பெண் பால்நிலைக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் பயிற்றுவிக்கப்படாத ஊழியர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டத்துக்கமையவும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் இதர இனங்களுக்கமையவும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2017 செப்தெம்பர் 22, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

121/ '15

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டளவில் இலங்கையில் காணப்படும் சுற்றுலாச் சபையினால் அங்கிகரிக்கப்பட்ட ஹோட்டல்களின் எண்ணிக்கை யாது:

(ii) ஒவ்வொரு ஹோட்டலிலும் காணப்படும் அறைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திலும் வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி இரண்டு ஆண்டுகளினுள்ளும் இலங்கைக்கு அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் வருகைதந்துள்ள 10 நாடுகள் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சுற்றுலாத் துறையை கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) சுற்றுலாத் துறையை விஸ்தரிக்கின்றபோது இந்நாட்டின் சுற்றாடலுக்கும் கலாசாரத்துக்கும் ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக்கொள்வதற்கான திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்று காணப்படுகின்றதா;

(iii) ஆமெனில், குறித்த வேலைத்திட்டம் யாது;

(iv) இன்றேல், சுற்றாடல் மற்றும் கலாசாரத்தை பாதுகாப்பதற்கான திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்துவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

465/ ’16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (8)

(அ) (i) 2015 ஆம் ஆண்டினுள் சனாதிபதி அவர்கள் கலந்துகொண்ட வெளிநாட்டு பயணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திலும் கலந்துகொண்டவர்களின் பெயர், பதவி மற்றும் இந்நபர்களுக்காக அரச மற்றும் அரசுசார் நிறுவனங்களினால் ஏற்கப்பட்ட செலவுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1019/ '16

கௌரவ நாமல் ராஜபக்ஷ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு.— (5)

(அ) (i) 2015 சனவரி மாதம் முதல் இற்றைவரையிலான காலப்பகுதியில் சனாதிபதி அவர்களினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட அரச மற்றும் கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் ஏனைய நிர்மாணிப்புகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நிர்மாணிப்புகளில், 2015 சனவரி மாதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணிப்புகளின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1216/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அழிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அழிவடைந்துள்ள மேற்படி சொத்துகள் பற்றி அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சொத்துகளின் மொத்த பெறுமதி யாதென்பதையும்;

(v) அழிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி (i) - (vi) வரை விசாரிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1378/ '16

கௌரவ பந்துல குணவர்த்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட பிரேரணை இலக்கம் 132 இற்கு அமைய, பொலன்னறுவை, கிளிநொச்சி, இரத்தினபுரி (எம்பிலிபிட்டி) மாவட்டங்களில் மூன்று பாரிய களஞ்சியங்களை நிர்மாணிக்க மற்றும் மன்னார் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் களஞ்சியத்தின் வேலைகளை பூர்த்தி செய்ய ரூபா 1000 மில்லியன் ஒதுக்கப்பட்டதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) மன்னார் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற களஞ்சியத்தின் ஆரம்ப செலவின மதிப்பீட்டையும் மற்றும் இதுவரையான அதன் முன்னேற்ற மீளாய்வு அறிக்கையையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) கிளிநொச்சி, எம்பிலிபிட்டிய மற்றும் பொலன்னறுவையில் புதிய மூன்று களஞ்சியத் தொகுதிகளை நிர்மாணிக்கின்ற நடவடிக்கைகளின் முன்னேற்றம் யாது என்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட பிரேரணை இலக்கம் 132 இற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1000 மில்லியன் தொகை செலவிடப்பட்ட முறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1621/ '17

கௌரவ ஹேஷான் விதானகே,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த சீனி நுகர்வுத் தேவைப்பாடு எவ்வளவு;

(ii) 2011 - 2014 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவு ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(iii) இலங்கையில் பிரதானமாக சீனி உற்பத்திக்கென இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை;

(iv) 2011 - 2013 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு தொழிற்சாலையிலும் உற்பத்தி செய்யப்பட்ட சீனியின் அளவு ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேலே (i) இல் குறிப்படப்பட்ட சீனியின் அளவை இந்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாதா;

(vi) நுகர்வுத் தேவைக்கான சீனியின் அளவை இறக்குமதி செய்யாமல் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்காக ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1643/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இற்றைவரை,

(i) மத்திய அரசினால் ஊவா மாகாணத்திற்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) ஊவா மாகாண சபையினால் மீண்டெழும் செலவினமாக ஒதுக்கப்பட்ட பணத் தொகையானது பெற்றுக்கொடுக்கப்பட்ட மொத்தப் பணத்தொகையின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iii) மீண்டெழும் செலவினத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) மூலதனச் செலவினமாக ஒதுக்கப்பட்ட பணத்தொகையானது பெற்றுக்கொடுக்கப்பட்ட மொத்தப் பணத்தொகையின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(v) மூலதனச் செலவினத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1708/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை விமானப் படையின் Fly Past வைபவம் காரணமாக இரத்மலானை விமான நிலையத்தின் நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுகின்றது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) மேலும், கட்டுநாயக்க விமான நிலையத்தின் கிழக்குப் பகுதியில் விமானப் பயணங்களுக்கும் தடை ஏற்படுகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி வைபவம் காரணமாக, வெளிநாடு செல்கின்ற மற்றும் இலங்கைக்கு வருகின்ற விமாணப் பயணிகளும் பெரும்பாலும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த வைபவத்திற்கு அரசாங்கம் செலவிட்டுள்ள பணத்தொகை யாது என்பதையும்;

(ii) மேற்படி பணத்தொகை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள முறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1726/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டு திரைப்படங்களுக்கு விதிக்கப்பட்ட வரியின் மூலம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஈட்டப்பட்ட வருமானம் வருட வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகங்களுக்கு விதிக்கப்பட்ட வரியின் மூலம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஈட்டப்பட்ட வருமானம் வருட வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கை இயக்குனர் ஒருவரினால் வெளிநாடொன்றில் உருவாக்கப்பட்டு இந் நாட்டுக்கு கொண்டு வரப்படும் திரைப்படங்கள் அல்லது தொலைக்காட்சி நாடகங்களுக்கும் வரி அறவிடப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1727/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹாபொல புலமைப்பரிசில்களை பெறுகின்ற மாணவர்கள் கல்வி கற்கின்ற கல்வி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) சில பல்கலைக்கழகங்களில் 01 ஆம் ஆண்டுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட பின்னர் மஹாபொல புலமைப்பரிசில்களின் கொடுப்பனவுகள் 03 மாதங்கள் தாமதமாகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1750/ '17

கௌரவ லக்கி ஜயவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் பேணிவரப்படுகின்ற தொலைக்காட்சி அலைவரிசைகளின் எண்ணிக்கை யாது;

(ii) ஒவ்வொரு தொலைக்காட்சி அலைவரிசையையும் பேணிவருகின்ற நிறுவனம் தனித்தனியாக யாது;

(iii) ஒவ்வொரு தொலைக்காட்சி அலைவரிசையினதும் உரிமையாளர்கள் யார் மற்றும் மேற்படி அலைவரிசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பு மேற்கொள்ளப்பட்டுவராத தொலைக்காட்சி அலைவரிசைகள் உள்ளனவா;

(ii) ஆமெனில் அந்த அலைவரிசைகள் யாவை;

(iii) தொலைக்காட்சி அலைவரிசைகள் எவரால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன;

(iv) மேற்படி ஒழுங்குமுறைப்படுத்தல் முறைப்படி அமுலாக்கப்படுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(v) ஒருசில அலைவரிசைகள் ஊடாக தீயகருத்துடனும் அவமதிப்பு ஏற்படக்கூடிய வகையிலும் மேற்கொள்ளப்படுகின்ற பாரதூரமான சமூகப் பாதிப்பினைத் தடுப்பதற்காக தொலைக்காட்சி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்து வதற்கான துரிதமான முறைசார்ந்த முறையிலொன்றை தயாரிப்பாரா;

(vi) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

1774/ '17

கௌரவ விஜித ஹேரத்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் இருக்கின்ற "சவ்சிறிபாய" கட்டடத்தின் உரிமை தொடர்பான சட்ட ரீதியான நிலைமை யாது என்பதையும்;

(ii) நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்கு "சவ்சிறிபாய" கட்டடத்திலிருந்து வெளியேறுவதற்கு நேரிட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், அது தொடர்பில் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iv) "சவ்சிறிபாய" கட்டடத்தை வேறு அமைச்சு ஒன்றுக்கு ஒப்படைப்பதற்கான திட்டம் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1777/ '17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "மெரயின் டிரைவ்" (Marine Drive) வீதி தெஹிவளைக்கும் வெள்ளவத்தைக்கும் இடையிலான எல்லையில் முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வீதியை மொரட்டுவை வரை நீட்டிப்பதற்கான திட்டமேதும் உண்டா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி வீதியை நீட்டிக்கின்றபோது கல்கிஸ்ஸ புனித தோமஸ் கல்லூரிக்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்தின் ஒரு பகுதி சுவீகரிக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அதன் அளவு எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி சுவீகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1787/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலகட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் மத்திய அமைச்சு மற்றும் வட மாகாணசபையின் கீழ் இயங்கிக்கொண்டிருந்த தமிழ் மொழிமூல முஸ்லிம் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் அவை அமைந்திருந்த இடங்கள் யாவை;

(iii) அப்பாடசாலைகள் உள்ளடங்குகின்ற கல்வி வலயங்கள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு பாடசாலையும் அரசாங்கப் பாடசாலையாக பிரகடனஞ் செய்யப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கங்கள் மற்றும் திகதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1797/ '17

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1996 ஆம் ஆண்டு பொலீஸ் உபசேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள், 2006 ஆம் ஆண்டு கடந்த அரசாங்கத்தினால் நிரந்தர சேவையில் உள்ளீர்த்துக்கொள்ளப்பட்டனரா என்பதையும்;

(ii) ஆமெனில், நிரந்தர சேவையில் உள்ளீர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அவ்வாறு நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் களுக்கு 1996 ஆம் ஆண்டு தொடக்கம் உரிய முறையில் சேவைச் சிறப்புரிமைகள் உரித்தாகின்றதா என்பதையும்;

(iv) இன்றேல், அந்த உத்தியோகத்தர்கள் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட திகதிக்கும், நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட திகதிக்கும் இடையிலான 10 வருட காலப்பகுதியைப் புறக்கணிப்பதன் மூலம் அந்த உத்தியோகத்தர்களுக்கு பாரிய அநீதி ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 ஒக்தோபர் 03, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

124/ ' 15

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நகர்ப்புறங்களில் பெரும் எண்ணிக்கையான பிச்சைக்காரர்கள் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இவர்களில் சிலர் பல்வேறு சட்டவிரோத செயல்களில் தொடர்புபட்டுள்ளனர் என்பதையும்;

(iii) சிலர் பிச்சைக்கார வேடம் தரித்த மோசடிக்காரர்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் இருக்கும் பிச்சைக்காரர்கள் பற்றிய தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்; ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி தொகை மதிப்பீட்டிற்கு அமைவாக இலங்கையில் இருக்கும் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இவ்வெண்ணிக்கை பெண்கள், ஆண்கள் மற்றும் சிறுவர் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) பிச்சைக்காரர்கள் பற்றி தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லையெனில் தொகை மதிப்பீட்டை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) பிச்சைக்காரர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள வழிமுறைகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கையில் உள்ள பிச்சைக்காரர்களுக்கான புனர்வாழ்வளிப்பு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனர்வாழ்வளிப்பு பணிகளுக்கு வருடமொன்றுக்கு அரசாங்கம் செலவிடும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1217/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அழிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அழிவடைந்துள்ள மேற்படி சொத்துகள் பற்றி அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சொத்துக்களின் மொத்த பெறுமதி யாதென்பதையும்;

(v) அழிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி (i) - (vi) வரை விசாரிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1294/ '16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) சட்ட ரீதியிலான உரிமையின்றி மாத்தறை மாவட்டத்தில் இற்றைவரை அரச காணிகளில் வசிக்கும் அல்லது பயிர் செய்கை மேற்கொள்ளும் ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கையில் எத்தனைபேருக்கு காணி உறுதிகள் அல்லது உரிமப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மாத்தறை மாவட்டத்தில் அரச காணிகளுக்கு வழங்கப்பட்டுள்ள உறுதிகள் அல்லது உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) மேலே (v) இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1385/ ’16

கௌரவ பந்துல குணவர்தன,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 145 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் மீனவ மக்களின் பாதுகாப்பினை நோக்கமாகக் கொண்டு, கடலில் ஏற்படும் விபத்துக்களுக்கு ரூபா ஒரு மில்லியன் ஆயுட் காப்புறுதித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த காப்புறுதிக் காப்பீட்டை பெற்றுக்கொடுக்கும் நிறுவனம் மற்றும் அதன் பொருட்டு செலுத்தப்படும் காப்புறுதித் தவணைத் தொகைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி காப்புறுதித் திட்டத்தின் மூலம் இழப்பீடு செய்யப்பட்ட அளவு யாதென்பதையும்;

(iv) குறித்த காப்புறுதித் திட்டத்தின் பிரகாரம் ஆயுட் காப்புறுதிக் காப்பீட்டை பெற்ற மீனவர்களின் பெயர்ப் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1470/ ’16

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் ஆரம்ப நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட திகதி தொடக்கம் இறுதி பணிப்பாளர் சபை வரை அதன் பணிப்பாளர் சபையிலிருந்த ஆட்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் பெற்றுள்ள சம்பளங்கள் மற்றும் ஏனைய அனுகூலங்கள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி ஆரம்பம் தொடக்கம் அடைந்துள்ள நட்டமானது வருடாந்தம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியானது கடன் பெற்றுள்ள மற்றும் கடன் செலுத்தவுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் அக்கடன் தொகைகள் யாவை என்பதையும்;

(vi) மிஹின் லங்கா விமான சேவையின் எதிர்காலம் தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1623/ '17

கௌரவ ஹேஷான் வித்தானகே,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) செவனகல சீனித் தொழிற்சாலை கடந்த 10 ஆண்டுகளில் பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் வருட வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது மேற்படி தொழிற்சாலையில் கடமையாற்றுகின்ற நிரந்தர மற்றும் அமய பணியாட்டொகுதியினர் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தொழிற்சாலையின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய கடந்த சில ஆண்டுகளில் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தொழிற்சாலையிலிருந்து இதை விட அதிகமான உற்பத்தியை அடையப்பெறுவதற்காக தகைமைமிக்க உரிய முகாமைத்துவமொன்றின் தேவையை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ள உத்தேசித்துள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1709/' 17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தேயிலை – உர மானியம் வழங்கப்பட்டுள்ள பிரதேசங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) நாட்டில் சகல சிறிய தேயிலை பயிர்ச் செய்கையாளர்களுக்கும் தேயிலை - உர மானியம் வழங்கத் தேவையான பணத்தொகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் தேயிலை – உர மானியத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் தேயிலை – உர மானியம் வழங்கப்பட்டுள்ள மற்றும் இதுவரை வழங்கப்படாதுள்ள சிறிய தேயிலைக் காணிச் சொந்தக்காரர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(ii) இலங்கையிலுள்ள தேயிலை – உர மானியம் பெறுவதற்கு தகுதிபெற்றுள்ள சிறிய தேயிலை காணிச் சொந்தக்காரர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இவர்களில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தேயிலை – உர மானியம் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1725/ '17

கௌரவ கனக ஹேரத்,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2016ஆம் ஆண்டு வரை,

(i) இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவின் அளவு;

(ii) அதற்கென செலுத்தப்பட்ட பணத்தொகை;

(iii) இலங்கையில் தலா கோதுமை மா நுகர்வு;

ஒவ்வோராண்டு வாரியாக, தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இந்நாட்டுக்கு கோதுமை மா இறக்குமதி செய்யப்படுவதை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அரசாங்கம் இன்றளவில் கோதுமை மா இறக்குமதியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1751/ '17

கௌரவ லக்கி ஜயவர்தன,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு முழுவதிலும் தற்போது நடாத்தப்பட்டு வருகின்ற சினிமாக் கொட்டகைகள் யாவை;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் வெவ்வேறாக யாவை;

(iii) இச்சினிமா கொட்டகைகளின் உரிமையாளர்கள் மற்றும் அவை ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) நாடு முழுவதிலும் அமைந்துள்ள சினிமாக் கொட்டகைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அது எவ்வாறு;

(iii) இச்சினிமா கொட்டகைகளை ஒழுங்குமுறைப்படுத்துவது யார்;

(iv) மிகக்குறைந்த வசதிகளுடனும் பலவீனமான செயற்பாட்டுடனும் கூடியதாக நடாத்தப்பட்டு வரும் சினிமாக் கொட்டகைகள் காணப்படுகின்றன என்பதை அறிவாரா;

(v) ஆமெனில், சினிமாக் கொட்டகைகளை முறைசார்ந்ததாக நடாத்திச் செல்வதற்காக, சினிமாக் கொட்டகைகளை ஒழுங்குமுறைப் படுத்தப்படுவதற்கு முறைசார்ந்த முறையியலொன்றை துரிதமாக அமைப்பாரா;

(vi) ஆமெனில் , அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1788/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலகட்டத்தில் வடக்கு மாகாணம் மன்னார் மாவட்டத்தில் மத்திய அமைச்சு மற்றும் மாகாணசபையின்கீழ் இயங்கிக்கொண்டிருந்த தமிழ் மொழிமூல முஸ்லிம் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் அவை அமைந்திருந்த இடங்கள் யாவை;

(iii) அப்பாடசாலைகள் உள்ளடங்குகின்ற கல்வி வலயங்கள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு பாடசாலையும் அரசாங்கப் பாடசாலையாக பிரகடனஞ் செய்யப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கங்கள் மற்றும் திகதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1798/ '17

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சராசரியாக வருடாந்தம் இடம்பெறும் குற்றச் செயல்களில் உள்ளடங்கும் சம்பவங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) குற்றவியல் வழக்குகளின் போது நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்படுபவர்களின் சதவீதம் என்னவென்பதையும்;

(iii) அந்தப் பெறுமானம் ஆசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது விகிதாசாரப்படி அதிக பெறுமானத்தைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது சம்பந்தமாக அரசு பிரயோகிக்கும் வழிமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1812/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை - பெலிஅத்த புகையிரத வீதியின் சமிக்ஞை முறைமையை பொருத்துவதற்காக செலவாகும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை மேற்கொள்ளும் கம்பனி யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனின், அதற்காக முன்வந்த கம்பனிகள் மற்றும் முன்வைக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்திற்கான நிதியைப் பெற்றுக்கொள்ளும் முறை யாது என்பதையும்;

(vi) மேற்படி சமிக்ஞைகளைப் பொருத்துவதற்காக புகையிரதத் திணைக்களத்தால் விலைகள் முன்வைக்கப்பட்டிருந்தனவா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1815/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தசாசன அமைச்சு மற்றும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் விஹாரைகளுக்கு நிதி வழங்கும் செயற்பாடொன்று உள்ளதென்பதையும்;

(ii) அவ்வாறு நிதி வழங்குகையில் தெரிவு செய்யப்பட்ட விஹாரைகளுக்கு மாத்திரம் நிதி வழங்கப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வாறு விஹாரைகளுக்கு நிதி வழங்கும் செயற்பாடொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக இச் சபையில் தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1865/ '17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீதொட்டமுல்லைக்கு மேலதிகமாக, உள்ளூராட்சி மன்றங்களினால் அகற்றப்பட்டு தற்போது உருவாகியுள்ள குப்பை மேடுகள் யாவை என்பதையும்;

(ii) அவை உரித்தான உள்ளூராட்சி மன்றங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது மேற்படி குப்பை மேடுகளில் காணப்படுகின்ற குப்பைகளின் அளவு யாது என்பதையும்;

(iv) இவற்றில் தற்போது ஆபத்தான நிலையில் காணப்படுகின்ற குப்பை மேடுகள் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வாறான குப்பை மேடுகளுக்கு மென்மேலும் குப்பைகளை அகற்றி அவை வளர்ச்சியடைவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்காக உள்ளூராட்சி அமைச்சின் கீழ் ஏதேனுமொரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(v) தற்போது ஏதேனும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பின், அதன் முன்னேற்றம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1869/ '17

கௌரவ நாமல் ராஜபக்ஷ,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.02.26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிதிக் குற்றவியல் புலனாய்வுப் பிரிவில் (F.C.I.D) சேவையில் ஈடுபட்டுள்ள மொத்த பதவியணி யாதென்பதையும்;

(ii) அதிலுள்ள பதவிநிலை தரத்திற்கான பதவிகள் யாவையென்பதையும்;

(iii) அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர்கள், முகவரிகள், கொடுப்பனவுகள் மற்றும் மேலதிகமாக செலுத்தப்படும் விசேட கொடுப்பனவுகள் உள்ளிட்ட மொத்த சம்பளத்தை தனித்தனியாகக் கொண்ட ஆவணமொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015.02.26 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரை விசாரணை நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு விஜயங்களில் பங்கேற்கச் செய்யப்பட்ட மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, அவர்கள் விஜயங்களை மேற்கொண்ட வெளிநாடுகளின் எண்ணிக்கை, வெளிநாடுகள் மற்றும் அவ்விஜயங்களுக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதற்காக பங்கேற்ற உத்தியோகத்தர்களின் பெயர்கள், முகவரி, விஜயம் மேற்கொள்ளப்பட்ட வெளிநாடு மற்றும் மேற்படி விஜயங்களுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக உள்ளடங்கிய ஆவணமொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# 2017 ஒக்தோபர் 04, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

135/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரூபா 400 கோடி வற் வரித் தொகையை மோசடி செய்தமை தொடர்பாக தவறாளிகளாகிய ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் ஒவ்வொரு ஆளுக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகை இவர்களால் செலுத்தப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வற் வரி மோசடியுடன் தொடர்புடைய பலர் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) உண்ணாட்டு இறைவரித் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அலுவலர்கள் இம் மோசடியுடன் தொடர்புபட்டிருக்கின்றார்கள் என்பதையும்;

(iii) சிலர் ஏற்கனவே நாட்டை விட்டு தப்பியோடியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) வற் வரி மோசடியுடன் தொடர்புடைய அனைத்து ஆட்கள் தொடர்பாகவும் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் அந்தஸ்துகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1219/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அழிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அழிவடைந்துள்ள மேற்படி சொத்துகள் பற்றி அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சொத்துகளின் மொத்த பெறுமதி யாதென்பதையும்;

(v) அழிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி (i) - (vi) வரை விசாரிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1386/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 144 இன் கீழ், இலங்கையின் வருடாந்த மீன் ஏற்றுமதியின் பெறுமதி சுமார் டொலர் 150 மில்லியன் என குறிப்பிடப்பட்டுள்ளதால், 1977 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இலங்கையின் வருடாந்த மீன் ஏற்றுமதியின் அளவு மற்றும் ஏற்றுமதிப் பெறுமதியை காட்டும் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) ஐரோப்பிய சந்தைக்கான மீன் ஏற்றுமதி தடை செய்யப்படுவதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தடையை நீக்குவதற்கு அப்போதைய மீன்பிடி அமைச்சர் கௌரவ ராஜித சேனாரத்னவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) ஐரோப்பிய சந்தைக்கான மீன் ஏற்றுமதித் தடையை நீக்குவதற்கு இலங்கை கடைப்பிடித்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) அதன் பிரகாரம் மீன் ஏற்றுமதித் துறையில் ஏற்பட்ட பிரதான மாற்றங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1471/ ’16

கௌரவ சமிந்த விஜேசிறி,— நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 இல் தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் இதுவரை பதுளை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தியுள்ள நீர் வழங்கல் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு நீர் வழங்கல் கருத்திட்டத்தினதும் பெயர், பயன் பெறுவோர்களின் எண்ணிக்கை செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) பதுளை மாவட்ட மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு எடுக்க எதிர்பார்க்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1624/ ’17

கௌரவ ஹேஷான் விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வருமானத்திற்கு பெரும் சக்தியாகவுள்ள இரத்தினக்கல் கைத்தொழில் பிரதானமாக மேற்கொள்ளப்படுகின்ற இரத்தினபுரி மாவட்டத்தில் மரபுவழியிலான இரத்தினக்கல் கைத்தொழிலாளர்கள் தற்போது அக்கைத்தெழிலை இழந்துவருகின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிலில் பாரிய அளவில் ஈடுபட்டுள்ள சில வியாபாரிகளுக்கு மத்தியில் மரபுவழியிலான இரத்தினக்கல் கைத்தொழிலாளர்கள் கூலியாட்களாகியுள்ள நிலைமை உருவாகியுள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தற்போது பெக்கோ இயந்திரங்களை பயன்படுத்தி அகழ்வுகளை மேற்கொள்ள பாரிய அளவிலான சுரங்கக் கைத்தொழிலுக்கு உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், உரிமப்பத்திரம் பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) பாரம்பரிய சுரங்கக் கைத்தொழிலுக்கு பெக்கோ இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதன் மூலம் மரபுவழியிலான சுரங்க தொழிலாளர்களுக்கு அநீதியும் அதேபோன்று, பாரிய சுற்றாடல் சேதமும் ஏற்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) இந்த நிலைமையை தடுப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1710/ ' 17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் தெங்குச் செய்கையாளருக்கு ஒரு மரத்திற்கு ரூபா 52/- வீதம், 8 மரங்கள் தொடக்கம் 5 ஏக்கர் வரை "கப்ருக்க புரவர" எனும் பெயரில் மானியம் வழங்கப்பட்டது என்பதையும்; மேற்படி மானியம் தற்போது கிடைப்பதில்லை என்பதையும் அறிவாரா;

(ii) மானியம் கிடைக்காத தெங்குச் செய்கையாளர்கள், மேற்படி மானியத்தைக் கோரி 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் இரத்தினபுரி தெங்குப் பயிர்ச் செய்கை சபையின் தலைமை அலுவலகத்திற்கு விண்ணப்பங்களைக் கையளித்துள்ள போதிலும், இதுவரை அதற்கு எவ்விதப் பதிலும் கிடைக்கவில்லை என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இது தொடர்பாக ஆராய்ந்து தெங்குச் செய்கையாளருக்கு முன்னரைப் போன்று மேற்படி மானியத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1754/ '17

கௌரவ லக்கி ஜயவர்தன,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உடுநுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கடலாதெணிய, லங்காதிலக்க மற்றும் அம்பெக்க எனும் வழிபாட்டுத்தலங்கள் உலக பிரசித்தி பெற்றுள்ள மிக முக்கியமான புராதன இடங்களென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) மேற்படி இடங்களை பார்வையிட நாள்தோறும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனரென்பதை அறிவாரா;

(iii) மேற்படி இடங்களில் பொது வசதிகள் இல்லாமையின் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி இடங்களில் குறைபாடாக உள்ள பொது வசதிகளை துரிதமாக பெற்றுக்கொடுக்க தங்களது அமைச்சின் கீழ் துரிதமாக வேலைத் திட்டமொன்றை தயாரிப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1799/ '17

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணிப் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கத்துடன் "பிம் சவிய" என்ற பெயரில் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறையில் இருக்கிறதா என்பதையும்;

(ii) அது தற்போது இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், "பிம் சவிய" நிகழ்ச்சித்திட்டம் நடைமுறையிலிருக்கும் மாவட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்பொழுது மேற்படி "பிம் சவிய" நிகழ்ச்சித்திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கான முன்மொழிவொன்று முன்வைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அந்த நிகழ்ச்சித்திட்டத்தை துரிதப்படுத்துவதற்காக வெளிநாட்டு உதவிகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது ஒரு வெளிநாட்டு உதவியா அல்லது ஒரு கடனா என்பதையும்;

(iv) அந்த உதவியின் நிதி ரீதியான பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(v) "பிம் சவிய" நிகழ்ச்சித்திட்டத்துக்காக மதிப்பிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2017 ஒக்தோபர் 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1187/ ' 16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மன்னார் மாவட்டத்தில்,

(i) 1983 ஆம் ஆண்டளவில் செய்கைபண்ணப்பட்ட மொத்த விவசாய நிலங்களின் அளவு யாது;

(ii) 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வொரு பயிருக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தநிலைமை முற்றுப்பெறும்வரை செய்கைபண்ணப்பட்ட மொத்த நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தநிலைமை முற்றுப்பெற்ற பின்னர் இற்றைவரை செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி அனைத்தினதும் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1330/ '16

கௌரவ புத்திக பத்திறண,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா ரான்ஸ்போமர் (LTL) கம்பனியின் உப கம்பனியான LTL புரோஜெக்ட்ஸ் கம்பனி தாபிக்கப்பட்ட திகதி யாது;

(ii) LTL கம்பனிக்கு இதன் 100% உரிமை உள்ளதா;

(iii) இதன் தற்போதைய உரிமையாளர்கள் யாவர்;

(iv) தற்போது LTL கம்பனிக்கு LTL புரொஜெக்ட்ஸ் கம்பனியின் பங்குகள் உரித்துடையதாகக் காணப்படுகின்றதா;

(v) LTL கம்பனிக்கு உரித்தான LTL புரொஜெக்ட்ஸ் கம்பனியின் பங்குகளை பராதீனப்படுத்துவதற்கு அல்லது உரிமை மாற்றம் செய்வதற்கான உரிமையை வழங்கியவர்கள் யார்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) LTL கம்பனிக்கு உரித்தான LTL புரொஜெக்ட்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட உப கம்பனியானது 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடங்கவில்லை என்பதையும், இதன் காரணமாக இக்கம்பனியின் இலாபப் பங்குகள் அரசாங்கத்துக்கு கிடைக்கப் பெறுவதில்லை என்பதையும் அவர் அறிவாரா;

(ii) இது தொடர்பில் விசாரணை நடத்தி, 2006ஆம் ஆண்டு முதல் இதுவரை அரசாங்கம் இழந்த இலாபப் பங்குப் பணத்தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1404/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் 175 ஆம் இலக்க முன்மொழிவின் படி, யானை மனித மோதலுக்கு இலக்குகளுடனான ஒரு தீர்வை வழங்குவதற்காக 3 வருடங்களில் பயன்படுத்தப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 4000 மில்லியன் நிதி ஏற்பாட்டில் 2016 ஆம் ஆண்டினுள் பயன்படுத்தப்பட்ட நிதித் தொகை மற்றும் அவ்வாறு செலவு செய்யப்பட்ட நிதியின் விளைதிறன் யாது என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) குறிப்பிட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவை செயற்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சு அல்லது நிறுவனம் யாது;

(ii) 1977 தொடக்கம் இன்று வரை யானை மனித மோதல் காரணமாக அறிக்கையிடப்பட்டுள்ள மரணங்களின் எண்ணிக்கை மற்றும் சொத்துச் சேதங்கள் ஒவ்வொரு வருடத்தின்படி யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் யானை மனித மோதல் காரணமாக மரணமடைந்த தரப்பினருக்கு அரசாங்கத்தினால் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டதா;

(iv) ஆமெனில், அவ்விழப்பீட்டுத் தொகை ஒவ்வொரு வருடத்தின்படி யாது;

(v) குறிப்பிட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ள யானை-மனித மோதலுக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இலக்குகளுடனான தீர்வைப் பற்றி விளக்கமளிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1473/ ’16

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது நாட்டில் நடைமுறையிலிருக்கும் நாட்டின் அபிவிருத்திக்கு விசேட பங்களிப்பு வழங்கும் பிரதேச ஊடகவியலாளர் அமைப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு பிரதேச ஊடகவியலாளர் அமைப்பினதும் அவற்றில் பதவி வகிப்போரினதும் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இவர்களது வாழ்க்கைத் மட்டத்தை உயர்வதற்கும் அதேபோன்று தொழில் வாழ்க்கையின் மேம்பாட்டுக்காகவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1497/ ’16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சினிமா மண்டபங்கள் டிஜிட்டல்மயமாக்கப்படுவதன் அவசியத்தை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், சினிமா மண்டபங்களை டிஜிட்டல்மயமாக்குவதற்கு அரசாங்கம் தலையீடு செய்யாமல் இருப்பது ஏன்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1499/ ’16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் 23 ஆம் பிரிவுக்கமைய 12 வயதுக்கு குறைந்த முஸ்லிம் சிறுமிகளை திருமணம் முடித்துக் கொடுக்கும் போது காதி நீதிபதிகளின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதன் பிரகாரம், 12 வயதுக்கு குறைந்த முஸ்லிம் சிறுமிகளை திருமணம் முடித்துக் கொடுக்கும்போது, காதி நீதிபதிகளினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை மேற்படி சட்டத்தின் பிரகாரம் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை மற்றும் அது தொடர்பான விபரங்கள் ஒவ்வொரு மாவட்டத்துக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1504/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கமத்தெழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் 2017 ஆம் ஆண்டில் இற்றைவரையிலும் சந்தையில் நெற் செய்கைக்காகவும் வேறு பெருந்தோட்டச் செய்கைக்காகவும் பயன்படுத்துகின்ற பல்வேறு உர வகைகளின் விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டின் முற்பகுதியில் காணப்பட்ட உரத்தின் விலையுடன் ஒப்பிடுகையில், தற்போது உரத்தின் விலை அதிகரித்துள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சந்தையில் ரூபா 1300/- ஆக இருந்த 50 கிலோ கிறாம் உரப் பையொன்றின் விலை தற்போது ரூபா 2900/- வரை அதிகரித்துள்ளதா என்பதையும்;

(iv) உரத்தின் விலையை கட்டுப்படுத்தாதுவிடின் அல்லது சந்தை விலைக்கேற்ப உர மானியம் அதிகரிக்கப்படாவிடின், பெருந்தோட்டச் செய்கை உள்ளிட்ட கமத்தொழிலை சார்ந்து வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை பாரிய வீழ்ச்சிக்கு உள்ளாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், அதற்காக முன்மொழியப்படும் தீர்வுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1508/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மொத்த பங்கு விலைச் சுட்டெண்ணின் பெறுமதி யாதென்பதையும்;

(ii) 2014.12.31 மற்றும் 2015.12.31 ஆம் திகதிக்கு ஒப்பீட்டளவில், 2016.12.31 ஆம் திகதிக்கு மொத்த பங்கு விலைச் சுட்டெண்ணின் பெறுமதி எத்தனை சதவீதத்தினால் மாற்றமடைந்துள்ளதென்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டில் தேறிய வெளிநாட்டு கொள்வனவுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1625/ '17

கௌரவ ஹேஷான் விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டு பாடசாலை முறைமையினுள் பிரசித்திபெற்ற பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்க்க முயற்சிப்பதன் மூலம் அதிக அளவிலான கிராம பாடசாலைகள் மூடப்படும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஐம்பது பிள்ளைகளுக்குக் குறைவாகவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேலே (ii) இல் குறிபிட்டுள்ள எண்ணிக்கை, மாவட்ட வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின், எம்பிலிபிட்டிய கல்வி வலையத்தில் கொடகவெல கோட்டத்தில் அமைந்துள்ள கோம்பிட்டி வித்தியாலயம் தற்போது மூடப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலை மூடப்படுதல் தொடர்பாக மாகாண கல்வித் திணைக்களம் அல்லது தொடர்புடைய நிறுவனங்கள் விழிப்புணர்வூட்டப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், தன்னிச்சைப்படி பாடசாலையை மூடிவிட்டு அதிலிருந்த பொருட்களையும் தான்தோன்றித்தனமாக பகிர்ந்தளித்தமை தொடர்பாக பாடசாலை அதிபர் உட்பட கோட்ட மற்றும் வலய கல்விப் பணிப்பாளர்கள் பொறுப்புக்கூற வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) இது தொடர்பாக எடுக்கப்டும் எதிர்கால நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1728/ ’17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹபொல நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(ii) இவர்கள் யாரால் நியமிக்கப்படுகின்றார்கள் என்பதையும்;

(iii) 2010 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையில் இந்நிதியத்திற்கு கிடைத்த பணத் தொகைகள் மற்றும் நிதி பெற்றுக்கொடுக்கப்பட்ட மூலங்கள் ஆண்டு அடிப்படையில் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) 2010 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையில் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் மீண்டுவரும் செலவினம் ஆண்டு அடிப்படையில் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) 2005 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை மஹபொல நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஊடாக புலமைப் பரிசில் செலுத்துவதற்கும் மீண்டுவரும் செயற்பாடுகள் அல்லாத செயற்பாடுகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், ஒவ்வொரு ஆண்டு மற்றும் செயற்பாடு அடிப்படையில் தனத்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1743/ ’17

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறைச்சாலை காவலாளி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டு நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், 2016.10.19 ஆம் திகதி முதல் 2016.10.27 ஆம் திகதி வரை நடைபெற்ற நேர்முகப் பரீட்சை மற்றும் 2016.11.03 ஆம் திகதி முதல் 2016.11.12 ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதென்பதையும் சம்பந்தப்பட்ட உடன்படிக்கையில் 2016.11.24 ஆம் திகதி கையொப்பமிடுமாறு தகைமை பெற்றவர்களுக்கு சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டு மீண்டும் அது ஒத்திவைக்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட நியமனங்கள் இற்றைவரை வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நியமனம் வழங்குவதில் சிக்கல்மிகு நிலை உள்ளபோது நியமனம் பெறுபவர் களை அசௌகரியப்படுத்தும் வகையில் இவர்களுக்கு உடன்படிக்கைக் கடிதம் வழங்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) தகைமைகளை பூர்த்திசெய்துள்ள நியமனப்பெறுனர்களுக்கு நியமனங்களை வழங்காததன் மூலம் இவர்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், நியமனங்களை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

1744/ ’17

கௌரவ விஜித ஹேரத்,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு முதலீடுகளின் அளவு;

(ii) மேற்படி ஆண்டுகளில் மீள அகற்றிக்கொள்ளப்பட்டுள்ள, ஏற்கனவே கிடைக்கப்பெற்றிருந்த வெளிநாட்டு முதலீடுகளின் அளவு;

ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1752/ ’17

கௌரவ லக்கி ஜயவர்தன,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களத்துக்குச் சொந்தமான புகையிரதப் பெட்டிகள் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், புகையிரதப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ள காலம், அடிப்படை, வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள், கவனத்திற் கொள்ளப்பட்ட அளவுகோல்கள், இப்பெட்டிகள் இணைக்கப்பட்ட புகையிரதங்கள் மற்றும் பெட்டிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நிபந்தனைகளின் படி, புகையிரதப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களிலிருந்து புகையிரத திணைக்களத்துக்கு அறவிடப்பட வேண்டிய சகல பணத்தொகைகளும் இன்றளவில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) நிலுவைத் தொகைகள் அறவிடப்படவேண்டிய நிறுவனங்கள் யாவை;

(iii) ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை வெவ்வேறாக யாது ;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) புகையிரதப் பெட்டிகளை வழங்கியதால் இதுவரை புகையிரத திணைக்களத்துக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மொத்த நட்டம் எவ்வளவு;

(iii) இந்நட்டத்தை புகையிரத திணைக்களத்துக்கு துரிதமாக அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வாரா ;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

14.

1778/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் புதிதாக தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களை தாபிக்கும்போது கருத்திற்கொள்ளப்படும் விடயங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1811/ '17

கௌரவ கனக ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தமிழ் மொழி மூல பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இன்றளவில் பாடசாலைகளில் காணப்படும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தமிழ் மொழி மூலம் க.பொ.த (உயர் தரம்) சித்தியடைந்தவர்களுக்கு பயிற்சியை வழங்கி தமிழ் மொழிமூல ஆசிரியர்களாக ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்காதிருப்பது ஏன் என்பதையும்:

(ii) இன்றளவில் இலங்கையிலுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வெளிநாடுகளிலிருந்து ஆசிரியர்களை அழைத்துவர திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், அதன் ஊடாக தமிழ் மொழி மூலம் உயர்கல்வி கற்ற பிரசைகளுக்கு அநீதி ஏற்படும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2017 ஒக்தோபர் 17, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1220/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அழிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அழிவடைந்துள்ள மேற்படி சொத்துகள் பற்றி அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சொத்துகளின் மொத்த பெறுமதி யாதென்பதையும்;

(v) அழிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி (i) - (vi) வரை விசாரிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1331/ ' 16

கௌரவ புத்திக பத்திறண,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) LTL Holdings (Pvt.) Ltd கம்பனிக்குச் சொந்தமான உபகம்பனிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) மேற்படி உபகம்பனிகள் தாபிக்கப்படும் முறையியல் யாது;

(iii) மேற்படி ஒவ்வொரு கம்பனியினாலும் மேற்கொள்ளப்படும் பணிகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட கம்பனிகளின் வருமானத்திலிருந்து இலங்கை மின்சார சபைக்கு கிடைக்கும் இலாபப் பங்கின் சதவீதம், ஒவ்வொரு கம்பனியின் அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(ii) இந்த இலாபப் பங்கு சரியானது அல்ல என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iii) ஆமெனில், அதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1406/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுதிட்டத்தின் 185 ஆம் இலக்க பிரேரணைக்கு அமைவாக, இலவச Wi-Fi வசதிகள் வழங்கப்பட்டுள்ள அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் அப்பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் இந்த வசதியினை அனுபவிக்க ஆரம்பித்த திகதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) அரச பல்கலைக்கழக முறைமையினுள் மேற்படி டிஜிட்டல்மயப்படுத்தல் வசதிகளை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் உறப்பட்ட மொத்த செலவு யாதென்பதையும்;

(iii) மேற்படி செலவு எந்த அமைச்சினால் அல்லது நிறுவனத்தினால் செலவினமாக ஏற்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) அரச பல்கலைக்கழக முறைமையினுள் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மடிக்கணனி வழங்குதல் சம்பந்தமாக அரசாங்கத்திற்கு திட்டவட்டமான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1477/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்குச் சொந்தமான திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) 2015 இல் தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள பணியாளர் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் ஆட்சேர்ப்புக்குரிய பதவிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய பின்பற்றப்பட்ட முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1729/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கல்வி நடவடிக்கைகளுக்காக இலங்கையர் களுக்கு சனாதிபதி நிதியத்தின் மூலம் முழுமையான அல்லது பகுதியளவு புலமைப் பரிசில் வழங்கும் வேலைத்திட்டமொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி வேலைத்திட்டத்திற்கு அமைவாக இதற்காக தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படும் அடிப்படை மற்றும் முறையியல் யாதென்பதையும்;

(iii) க.பொ.த. (உயர் தரம்) அதிகூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் மாணவர் களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் முறையியலொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(iv) பட்டப்பின் படிப்பு கல்விக்காக பட்டதாரிகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் முறையியலொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(v) மேற்படி (iii) மற்றும் (iv) தவிர வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப் பரிசில்களை பெற்றுக்கொடுக்கும் முறையியலொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனின், மேற்படி முறையியல் யாதென்பதையும்;

(vii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை மேற்படி (iii) மற்றும் (iv) இல் குறிப்பிடப்பட்ட முறையியல்களுக்கு புறம்பாக, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு புலமைப்பரிசில்களை பெற்றுக்கொண்டவர்களின் பெயர், நிதித் தொகை, நிறுவனம் மற்றும் வெளிநாடெனில், அந்நாட்டின் பெயர் ஆண்டுவாரியாக தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1730/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உள்நாட்டலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் மூலம் பிரேரிக்கப்பட்டவாறு வாழ்க்கையில் தனது அந்திம காலத்தை கழிக்கும் கலைஞர்களுக்காக பங்களிப்பு ஓய்வூதிய முறையொன்று தற்சமயம் அமுல்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்கு பங்களிப்புச் செய்துள்ள கலைஞர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் இதற்கென ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு வருடத்திற்கு ஏற்ப தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1735/ ' 17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்விக்காக இலங்கை மாணவர்கள் சார்பில் ஒரு வருடத்திற்குச் செலவாகும் பணத்தொகைக்கு இலங்கையின் வெளிநாட்டு நாணய ஒதுக்கத்தினால் ஏற்க நேரிடுகின்ற சுமை எவ்வளவு என்பதையும்;

(ii) தனிப்பட்ட வெளிநாட்டு சுற்றுப்பயணங்களுக்காக வெளிநாடு செல்லும் ஆட்களுக்காக இலங்கையின் நிதி ஒதுக்கத்தினால் வருடாந்தம் ஏற்க நேரிடுகின்ற சுமை எவ்வளவு என்பதையும்;

(iii) இலங்கையிலிருந்து அனுப்பப்படுகின்ற வர்த்தகப் பண்டங்கள் அல்லது பணிகளுக்காக இலங்கைக்கு அறவிடப்பட வேண்டியதான வெளிநாட்டு நிதியில் எவ்வளவு பணத்தொகை கிடைக்காதுள்ளது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1753/ '17

கௌரவ லக்கி ஜயவர்தன,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நாடு பூராவும் செயற்பட்டு வரும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவற்றில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை;

(iv) மேலே (iii)இல் குறிப்பிடப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களை தற்போது பேணிவருகின்ற ஆட்கள் யாவர்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை;

(ii) அவற்றின் உரிமையாளர்கள் யாவர்;

(iii) எரிபொருள் நிரப்பும் நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல் உரிய முறையில் நடைபெறுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) ஆமெனில், இந்த எரிபொருள் நிரப்பும் நிலையங்களை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு முறைசார்ந்த முறையியலொன்றை தயார் செய்வாரா;

(v) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1779/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாணசபையின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் இயங்கும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி முன்பள்ளிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்படி ஒவ்வொரு முன்பள்ளிக்கும் பெற்றுக் கொடுக்கப்பட்ட உதவித் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மாவட்டத்தின் முன்பள்ளிகளை முன்னேற்றுவதற்கும் ஒழுங்குமுறைப் படுத்துவதற்கும் மாகாணசபை மேற்கொண்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1789/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலகட்டத்தில் வடக்கு மாகாணம் முல்லைத்தீவு மாவட்டத்தில் மத்திய அமைச்சு மற்றும் மாகாணசபையின்கீழ் இயங்கிக்கொண்டிருந்த தமிழ் மொழிமூல முஸ்லிம் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் அவை அமைந்திருந்த இடங்கள் யாவை;

(iii) அப்பாடசாலைகள் உள்ளடங்குகின்ற கல்வி வலயங்கள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு பாடசாலையும் அரசாங்கப் பாடசாலையாக பிரகடனஞ் செய்யப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கங்கள் மற்றும் திகதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1852/ '17

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினால் முறைசார்ந்த ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று அமுல்படுத்தப்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) புதிதாக கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பரீட்சைகள் திணைக்களத்தினால் போட்டிப் பரீட்சையொன்று நடத்தப்பட்டு பெறுபேறுகளை வெளியிடுவதற்கு அண்மித்தருந்த நிலையில், ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் மூலம், போட்டிப் பரீட்சைக்கு தோற்றியிருந்த விண்ணப்பதாரிகளுக்கு பெரும் அநீதி இழைக்கப்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) புதிய ஆட்சேர்ப்புகள் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுமாயின், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

1854/ '17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் மாநகர திட்டத்தின் (Megapolis plan) கீழ் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோக்கியுள்ள 03 ஆண்டுகள் வரையில் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவிற்காக திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்கனவே ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

(iii) ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

(iv) இதற்கென அரச மற்றும் தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனின், அவை தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக கடன் தொகைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனின், கடன் பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள் மற்றும் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

1873/ '17

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை திட்டமிடல் சேவையின் சிறப்பு, I, II மற்றும் III ஆந் தரங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை (Cadre) மற்றும் இன்றளவில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இலங்கை திட்டமிடல் சேவையில்,

(i) சிறப்புத் தரத்தைச் சேர்ந்த பதவிகள் யாவை;

(ii) இன்றளவில் அப்பதவிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் சேவைகள் யாவை;

(iii) தரம் 1 இற்குரிய பதவிகள் யாவை;

(iv) இன்றளவில் அப்பதவிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் சேவைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1949/ '17

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதேச அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மலைநாட்டுப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட மலைநாட்டுக் கிராமிய புனர்வாழ்வளிப்புத் திணைக்களம் கடந்த அரசாங்கத்தினால் ஒழிக்கப்பட்டமை காரணமாக மலைநாட்டுப் பிரதேச மக்களுக்கு அநீதி நேர்ந்துள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஆ) (i) மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் மலைநாட்டுப் பிரதேசத்திற்கு உரித்தான அபிவிருத்தி நன்மைகள் யாவை;

(ii) மேற்படி அதிகாரசபைக்கு ஒதுக்கிய பணத்தொகை எவ்வளவு;

(iii) மேற்படி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அமுலாக்கப்பட்ட கருத்திட்டங்கள் யாவை ;

(iv) மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமைத்துவம் மற்றும் தாபனப் பொறுப்பினை வகிக்கின்ற ஆட்கள் யார் ;

(v) மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபை மூலமாக மலைநாட்டுப் பிரதேசத்தின் வறிய கிராமங்களின் மக்களுக்கு வழங்கிய தொழில்கள் மற்றும் தொழில்களின் எண்ணிக்கை யாது;

(vi) மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபையினால் வறிய கிராமங்ளைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு, மற்றும் கருத்திட்டங்களின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மலைநாட்டுக் கிராமிய புனர்வாழ்வளிப்புத் திணைக்களத்தை மீண்டும் ஆரம்பிக்க கருதியுள்ளாரா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது ;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

15.

1951/ '17

கௌரவ கனக ஹேரத்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் சிறிய அளவிலான இறப்பர் கைத்தொழிலில் தங்கிவாழ்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டில் மேற்படி குடும்பங்களின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டை விட எவ்வளவால் குறைவடைந்துள்ளதென்பதையும்;

(iii) இறப்பர் செய்கை மேற்கொள்ளாமையினால் தொழில்வாய்ப்புகளை இழந்துள்ள ஆட்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) கைவிடப்பட்டுள்ள இறப்பர் செய்கையை மீண்டும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 ஒக்தோபர் 19, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1221/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அழிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அழிவடைந்துள்ள மேற்படி சொத்துகள் பற்றி அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சொத்துக்களின் மொத்த பெறுமதி யாதென்பதையும்;

(v) அழிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி (i) - (vi) வரை விசாரிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1332/ '16

கௌரவ புத்திக பத்திறண,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மின்சார சபையின் கீழ் லங்கா ட்ரான்ஸ்போமர்ஸ் எனும் பெயரில் நிறுவனமொன்று காணப்பட்டதா;

(ii) மேற்படி நிறுவனத்தின் பெயர் மாற்றப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், இதன் தற்போதைய பெயர் யாது;

(iv) வ/ப எல்ரீஎல் ஹோல்டிங்ஸ் ( தனியார்) கம்பனிக்குச் சொந்தமான பங்குகள் பகிரப்பட்டுள்ள விதம் யாது;

(v) ESOT (நம்பிக்கைப் பொறுப்பு) பங்குதாரர்களிடம் காணப்படும் பங்குகளை நிருவகிப்பது யார்;

(vi) இதன் பங்குதாரர்களின் பெயர்கள் மற்றும் அவர்களிடம் காணப்படும் பங்குகளின் எண்ணிக்கை பற்றிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா;

(vii) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம், இது தாபிக்கப்பட்டு எவ்வளவு காலப்பகுதியில் அவர்களது பங்குகள் குறித்தும் அவர்கள் பங்குதாரர்கள் என்பது பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ESOT கம்பனியின் ஆரம்ப பங்குதாரர்கள் யார், அவர்களுக்கு உரித்தானதாயிருந்த பங்குகளின் அளவு யாது;

(ii) மேற்படி பங்குதாரர்களில் இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் காணப்படுகின்றார்களா;

(iii) ஆமெனில், அவர்களுக்கு பிணைப்பு பற்றிய முரண்பாடு இருப்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) COPE அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வ/ப எல்ரீஎல் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியினால் ரூபா 232 மில்லியன் இலாபப்பங்கு இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா;

(ii) இது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

1408/ ' 16

கௌரவ பந்துல குணவர்தன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்டத்தின் 182 ஆம் இலக்க பிரேரணைக்கமைவாக, ஆரம்பக் கைத்தொழில் பேரவையொன்று (Primary Industry Council) தாபிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி மற்றும் இடம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வரவுசெலவுதிட்டப் பிரேரணையிலுள்ள ஆரம்பக் கைத்தொழில் பேரவையொன்றை தாபிப்பதன் நோக்கம் மற்றும் அதற்கான வேலைத்திட்டத்தைப் பற்றி சுருக்கமாக தெளிபடுத்துவாரா என்பதையும்;

(iv) இந்த பேரவையுடன் தொடர்புடைய நிபுணர்களின் பெயர் பட்டியலை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி பிரேரணையில் குறிப்பிடப்படுகின்ற இலங்கையில் தற்போது இயங்கும் நிலையிலுள்ள ஆரம்பக் கைத்தொழில்கள் பற்றிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vi) 2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட இலங்கையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பக் கைத்தொழில்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1542/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பண்டாரவளை உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் பதுளை மாவட்ட மக்களுக்கு, உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமையை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் காரணமாக பயிர்ச்செய்கைச் சேதம் ஏற்பட்டுள்ள மக்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1583/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை, ருவன்புர சுனாமி வீடமைப்புத் தொகுதியில் மயுரபுர, ருவன்புர, 35 ஆம் இலக்க வீடு திரு. எஸ்.எம். சிஜாவுதீனுக்கு வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

(iii) இவர் இவ்வீட்டில் எவ்வளவு காலம் குடியிருந்தார் என்பதையும்;

(iv) தற்போது மேற்படி வீட்டில் குடியிருப்பவர் யாரென்பதையும்;

(v) மேற்படி ஆளிடமிருந்து இவ்வீடு பலவந்தமாக பறிக்கப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(vi) 2010 திசெம்பர் மாதத்தில் இது சம்பந்தமாக அம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1745/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பரக்கடுவை, சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த தேயிலைச் சக்தி அங்கத்தவர் இலக்கம் 109131 ஐ கொண்ட கே.பீ. சிறிசேன என்பவர் 2016 ஆம் ஆண்டு திடீரென மரணித்துள்ளார் என்பதையும்;

(ii) இவருக்குக் கிடைக்க வேண்டிய தேயிலைச் சக்தி காப்புறுதி அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களும் மரணித்தவரின் மனைவியாகிய திருமதி பீ.எம். லுசிடா என்பவர் (பின் உரித்தாளி) 2016.09.30 ஆம் திகதி இரத்தினபுரி சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கத்தின் பிராந்திய அமைப்பிற்கு ஒப்படைத்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டு தற்போது சுமார் 06 மாதங்களாகியுள்ள போதிலும் இதுவரை மேற்படி அனுகூலத் தொகை கிடைக்கப்பெறவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வனுகூலத் தொகையைத் துரிதமாக இவருக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1755/ ’17

கௌரவ லக்கி ஜயவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேட்டுக் காணிகளில்லாத ஆட்களுக்கு தமது வயல் காணியில் 10 பர்சஸ் அளவை நிரப்பி வீடொன்றை அமைத்துக்கொள்ள அனுமதி வழங்குதல் நீண்ட காலமாக நடைமுறையிலிருந்தென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) தற்போது மேட்டுக் காணிகளில்லாத ஆட்களுக்கு தமது வயல் காணியில் 10 பர்சஸ் அளவை நிரப்பி வீடொன்றை அமைத்துக்கொள்ள வழங்கப்பட்டிருந்த வாய்ப்பு இழக்கச் செய்யப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆகையால் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் காணியில்லாத பெரும் தொகையான மக்கள் நிர்க்கதி நிலைமைக்கு உள்ளாகியுள்ளனரென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வயல் காணியில் 10 பர்சஸ் அளவை நிரப்புவதற்காக இன்றளவில் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துள்ள ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆட்களுக்கு மிகத் துரிதமாக மேற்படி10 பர்சஸ் வயல் காணியை நிரப்பிக்கொள்ள வாய்ப்பளிப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1780/ ’17

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சபையின் கீழ் இயங்கிவரும், புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைகள், மத்திய மருந்துச்சாலைகள் மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி ஒவ்வோர் இடத்தினதும் பெயர் யாது;

(iii) மேற்படி ஒவ்வொரு சுகாதார நிலையத்திலும் சேவையிலீடுபட்டுள்ள மொத்த ஊழியர் எண்ணிக்கை தனித்தனியாக யாது;

(iv) மேற்படி சுகாதார நிலையங்களில் ஊழியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றனவா;

(v) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவை;

(vi) மேற்படி சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதற்கும் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1790/ ’17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலகட்டத்தில் வடக்கு மாகாணம் வவுனியா மாவட்டத்தில் மத்திய அமைச்சு மற்றும் மாகாணசபையின் கீழ் இயங்கிக்கொண்டிருந்த தமிழ் மொழிமூல முஸ்லிம் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் அவை அமைந்திருந்த இடங்கள் யாவை;

(iii) அப்பாடசாலைகள் உள்ளடங்குகின்ற கல்வி வலயங்கள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு பாடசாலையும் அரசாங்கப் பாடசாலையாக பிரகடனம் செய்யப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கங்கள் மற்றும் திகதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1853/ ’17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் மாநகர திட்டத்தின் (Megapolis plan) கீழ் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோக்கியுள்ள 03 ஆண்டுகள் வரையில் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவிற்காக திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்கனவே ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

(iii) ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

(iv) இதற்கென அரச மற்றும் தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனின், அவை தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக கடன் தொகைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனின், கடன் பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள் மற்றும் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

1870/ ’17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் 2017.04.30 ஆம் திகதி வரை சனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) விஜயங்கள் மேற்கொள்ளப்பட்ட நாடுகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு விஜயத்துக்காகவும் ஏற்கப்பட்ட செலவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) சனாதிபதியுடன் ஒவ்வொரு விஜயத்தின்போதும் பங்கேற்ற அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) சனாதிபதியுடன் வெளிநாட்டு விஜயங்களில் பங்கேற்ற ஏனைய ஆட்களின் பதவிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1952/ ’17

கௌரவ கனக ஹேரத்,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கேகாலை மாவட்டத்தில்,

(i) அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளின் அளவு;

(ii) குடியிருப்பதற்காக பகிர்ந்தளிக்க இணங்காணப்பட்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளின் அளவு;

(iii) குடியிருப்பதற்காக காணிகளை கோரியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுவாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கோரிக்கை விடுத்துள்ள குடும்பங்களுக்கு இனங்காணப்பட்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

1958/ ’17

கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2017 மே மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் யூன் மாதம் 05 ஆம் திகதி வரை ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில்,

(i) உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை;

(ii) சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை;

(iii) மண்சரிவால் மாத்திரம் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை;

(iv) வெள்ளப்பெருக்கு காரணமாக முழுமையாகவும், பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின்படி தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1961/ '17

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 மே மாதம் இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக முழுமையாக சேதமடைந்த 630 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்த 4,608 வீடுகளும் பதிவாகி உள்ளனவென்பதை அறிவாரா;

(ii) சேதமடைந்த வீடுகளை மீண்டும் நிர்மாணிக்க பொருத்தமான காணிகள் இனங்காணப்பட்டுள்ளனவா;

(iii) இதன் பொருட்டு தோட்டக் கம்பெனிகளுக்குச் சொந்தமான காணிகள் சுவீகரிக்கப்படுமா;

(iv) இந்த காணிகளை துரிதமாக சுவீகரிக்க தற்போது நிலவுகின்ற சட்டதிட்டங்களை திருத்தியமைப்பாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சேதமடைந்த வீடுகளுக்காக நட்டஈட்டுத் தொகையினை வழங்க அரசாங்கம் திட்டவட்டமான கால எல்லையொன்றினை தீர்மானித்துள்ளதா;

(ii) அனர்த்தத்திற்கு இலக்காகிய அனைத்து வீடுகளுக்காகவும் நட்டஈட்டுத் தொகை வழங்கப்படுமா;

(iii) வீடுகள் சேதமடைந்தமைக்காக நட்டஈட்டுத் தொகையினை வழங்கும்போது கவனத்திற் கொள்ளப்படுகின்ற அளவுகோல்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1962/ '17

கௌரவ மொஹொமட் நவவி,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடுகளின் கீழ் புத்தளம் மாவட்டத்தின் தங்கொட்டுவ பிரதேச செயலகத்திற்கு கிடைத்த மொத்த நிதி ஏற்பாடுகளின் அளவு வருடவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(ii) அந்த நிதி எற்பாடுகள் எந்த விதத்தில் கிடைத்தன;

(iii) அந்த நிதி ஏற்பாடுகளைப் பிரயோகித்து இன்றளவில் நிறைவுசெய்துள்ள மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்கள் உள்ளனவா;

(iv) இக்காலப்பகுதிக்குள் ஏதேனும் நிறுவனங்கள் அல்லது அமைப்புகளுக்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருப்பின், மேற்படி பணத்தொகை மற்றும் பயனுகரி நிறுவனத்தின் அல்லது அமைப்பின் பெயர் மற்றும் முகவரி ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாவை;

(v) இக்காலஎல்லைக்குள் இடையறாதுவந்த பணத்தொகையேதும் இருப்பின் அப்பணத்தொகையையும் அவ்வாறு ஏற்பட்ட விதத்தையும் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 ஒக்தோபர் 20, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1222/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அழிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அழிவடைந்துள்ள மேற்படி சொத்துகள் பற்றி அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சொத்துகளின் மொத்த பெறுமதி யாதென்பதையும்;

(v) அழிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி (i) - (vi) வரை விசாரிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1334/ ' 16

கௌரவ புத்திக பத்திறண,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வகைப்படுத்தாத குப்பைகளை சேகரிக்காதிருப்பதற்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் எடுத்துள்ள முடிவை பற்றி மக்களை விழிப்புணர்வூட்டத் தேவையான நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்,

(iii) குப்பைகளை வகைப்படுத்தி சேகரிக்கத் தேவையான வசதிகள் மக்களுக்குப்

பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்,

(v) வகைப்படுத்தப்பட்ட குப்பைகளை சேகரிப்பதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குப்பைகளை வகைப்படுத்தித் தராத ஆட்களுக்கெதிராக எடுக்கபடும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) வகைப்படுத்தப்பட்ட குப்பைகள் மீள்சுழற்சி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எந்த இடத்தில் என்பதையும்;

(iv) அதற்காக முதலீடு செய்யப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) மீள்சுழற்சி செய்யப்பட்ட குப்பைகளை எத்தகைய பணிகளுக்கு பயன்படுத்தலாம் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1409/ ’16

கௌரவ பந்துல குணவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட பிரேரணை 181 இற்கேற்ப தங்கத்தை இறக்குமதி செய்வதற்காக 50 உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய உரிமப்பத்திரங்களை பெற்றுக்கொண்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்களினால் செலுத்தப்பட்ட உரிமப்பத்திரக் கட்டணங்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) 1977 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை உலக சந்தையில் தங்கத்தின் விலையிலான போக்குகளைப் பற்றிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பைதையும்;

(iv) வரி இன்றி இலங்கைக்கு தங்கத்தை இறக்குமதி செய்கின்ற ஆட்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) இலங்கை தங்கத்தை இறக்குமதி செய்யும் பிரதான வழங்குனர்கள் மற்றும் நாடுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1474/ ’16

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை,

(i) நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் பதுளை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு அபிவிருத்திக் கருத்திட்டத்தினதும் பெயர், செலவிடப்பட்ட பணத்தொகை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட கம்பனியின் பெயர் அந்தக் கம்பனிக்கு வழங்கப்பட்ட பணத்தொகை மற்றும் திறந்துவைக்கப்பட்ட திகதி மற்றும் அந்த திறந்து வைத்தலுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அமைச்சினால் பதுளை மாவடத்தில் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1746/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாராளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்ட அலுவலகம் ஒன்றைப் பேணிவருதவற்காக எடுக்கப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதையும்;

(ii) ஏற்படக்கூடிய வரவுசெலவுத்திட்டக் குறைதல்கள் தொடர்பாக கேட்டறிந்துகொள்வதற்கான நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் வாக்குறுதிகளின் செயற்படுதன்மையின் முன்னேற்றம் தொடர்பாக பாராளுமன்றத்தினால் எவ்வாறு அறிந்துகொள்ள முடியும் என்பதையும்;

(iv) 2017 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தின் நலன்புரி தொடர்பான பிரேரணைகள் நிறைவேற்றப்படும் நாளேட்டுக் குறிப்பொன்றை (கலண்டர்) பெற்றுத்தருவாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் நிறைவேற்றப்படாத முன்மொழிவுகள் யாவை என்பதையும்;

(ii) அந்த முன்மொழிவுகள் நிறைவேற்றப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1756/ '17

கௌரவ லக்கி ஜயவர்தன,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிகழ்காலத்தில் காட்டுப் பன்றிகளினால் மனித உயிர்களுக்கு சேதம் ஏற்படுகின்றதென்பதையும்;

(ii) தற்போது காட்டு யானை, முதலை, கரடி, சிறுத்தை மற்றும் காட்டெருமை ஆகிய மிருகங்களினால் ஏற்படுகின்ற உயிரிழப்பின்போது ஆண், பெண் பால்நிலை மற்றும் வயது பேதமின்றி ரூபா 200,000/- இழப்பீட்டுத் தொகையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) எனினும், காட்டுப் பன்றிகளால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு அத்தகைய இழப்பீடு வழங்கும் முறையியலொன்று இல்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அத்தகைய இழப்புகளுக்கு உள்ளாகி மிக நிர்க்கதியான நிலையில் உள்ளவர்களுக்கு இழப்பீடு வழங்கும் முறையியலொன்று துரிதமாக நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக துரிதமாக இழப்பீட்டு முறையொன்றை செயற்படுத்துவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1791/ '17

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990.12.31 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த காலப்பகுதியில் வட மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் மத்திய அமைச்சு மற்றும் மாகாண சபையின் கீழ் இயங்கிவந்த தமிழ் மொழிமூல முஸ்லிம் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் அவை அமைந்திருந்த இடங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளை உள்ளடக்கிய கல்வி வலயங்கள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு பாடசாலையும் அரச பாடசாலையாக பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கத்தை மற்றும் திகதியை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1813/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி காணிகளை குத்தகைக்கு பெற்ற நிறுவனம், குத்தகைக்கு பெற்ற திகதி, குத்தகைக் காலம் மற்றும் குத்தகைத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி காணிகளுக்கு நிலுவை குத்தகைத் தொகைகளை செலுத்த வேண்டியுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) ஒவ்வொரு நிறுவனத்தினாலும் செலுத்த வேண்டியுள்ள நிலுவைக் குத்தகைத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1855/ '17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் மாநகர திட்டத்தின் (Megapolis Plan) கீழ் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோக்கியுள்ள 03 ஆண்டுகள் வரையில் கடுவல பிரதேச செயலாளர் பிரிவிற்காக திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்கனவே ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

(iii) ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

(iv) இதற்கென அரச மற்றும் தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனின், அவை தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக கடன் தொகைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனின், கடன் பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள் மற்றும் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1871/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.08 ஆம் திகதி தொடக்கம் 2017.04.30 ஆம் திகதி வரை பிரதம அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) விஜயங்கள் மேற்கொள்ளப்பட்ட நாடுகள் யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு விஜயத்துக்காகவும் ஏற்கப்பட்ட செலவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) பிரதம அமைச்சருடன் ஒவ்வொரு விஜயத்தின் போதும் பங்கேற்ற அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) பிரதம அமைச்சருடன் வெளிநாட்டு விஜயங்களில் பங்கேற்ற ஏனைய ஆட்களின் பதவிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1875/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாணத்தில் குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு நிலவும் கிராமங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) நீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கு நீர் பவுசர்களை வழங்கும் வேலைத்திட்டமொன்று உங்கள் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், இதுவரை வழங்கப்பட்டுள்ள வழங்கப்பட்டுள்ள நீர் பவுசர்களின் எண்ணிக்கை மற்றும் அவை வழங்கப்பட்ட கிராமங்கள் யாவை என்பதையும்;

(v) நீர்ப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ள ஏனைய கிராமங்களுக்கு நீர் பவுசர்களை வழங்க அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

12.

1959/ '17

கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 மே மாதம் 26 ஆம் திகதியிலிருந்து யூன் மாதம் 05 ஆம் திகதி வரை ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு ஆபத்து காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் தாம் குடியிருக்கும் வீடுகளிலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) ஏற்புடைய வீட்டு உரிமையாளர்களுக்கு அதற்கு பதிலாக காணிகளை வழங்குவதற்கும் வீடொன்றை நிர்மாணிப்பதற்கும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், ஒருவருக்கு வழங்கப்படும் காணியின் அளவும் வீட்டை நிர்மாணிப்பதற்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையும் எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1963/ '17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டு தொடக்கம், சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கு இணைக்கப்பட்டு வெலிஓய கல்வி வலயத்தில் ஆசிரியர் உதவியாளர்களாக 29 பேர் கடமையாற்றுகின்றனர் என்பதையும்;

(ii) யுத்த மோதல்கள் இடம்பெற்ற காலத்திலிருந்து இவர்கள் பலத்த கஷ்டங்களுக்கு மத்தியில் கடமையில் ஈடுபட்ட போதிலும் இற்றைவரை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்க்கப்படவில்லை என்பதையும்;

(iii) மேற்படி பிரசேத்தில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்களை அமைச்சரவை அங்கீகாரத்துடன் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) மேற்படி அங்கீகாரத்தின் கீழ் வட மாகாண சபை ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய ஆசிரியர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுத்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி ஆசிரியர் உதவியாளர்களின் தொழில்களை பாதுகாக்க எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1977/ ’17

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் திரியாயவில் அமைந்துள்ள வரலாற்று ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கிரிஹண்டுசேய பௌத்த விகாரையை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) கிரிஹண்டுசேய விகாரை நிலப்பரப்பில் அமைந்துள்ள தபஸ்சு - பல்லுக்க எனும் இரு சகோதரர்கள் தொடர்பாக குறிப்பிடப்படுகின்ற வரலாற்று ரீதியான கல்வெட்டானது எதுவித மறைப்புமின்றி மழையினாலும் வெயிலினாலும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி கல்வெட்டு மேற்கொண்டும் அழிவடைவதைத் தடுப்பதற்காக தொல்பொருளியல் திணைக்களத்தினால் எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) கிரிஹண்டுசேய புனித பூமியை முறைசார்ந்த புனித நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1983/ ’17

கௌரவ பியல் நிசாந்த த சில்வா,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேருவளை பிரதேச சபைக்கு சொந்தமான அளுத்கம பொது விளையாட்டு மைதானம் மேற்படி சபையினால் பராமரிக்கப்படுகின்றதென்பதையும்;

(ii) இற்றைக்கு ஓர் ஆண்டுக்கு முன்னர் அவ் விளையாட்டு மைதானம் மறுசீரமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அபிவிருத்திப் பணிகளுக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டுத் தொகை மற்றும் ஆண்டு யாதென்பதையும்;

(ii) விளையாட்டு மைதான அபிவிருத்தியின் போது உரிய கேள்விப்பத்திர நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் ஒப்பந்ததாரர்கள் யாவர் என்பதையும்;

(v) கருத்திட்டத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முழுத் தொகையும் அக் கருத்திட்டத்துக்கு பயன்படுத்தப்பட்டதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி மைதானத்தை விழா/விளையாட்டுப் போட்டி/சமூகப் பணிக்காக ஒதுக்கிக்கொள்கின்றபோது பேருவளை பிரதேச சபையிடம் அனுமதி பெறுவதற்கு அப்பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரின் சிபார்சு தேவைப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) பிரதேசத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இம்மைதானத்தில் விளையாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

(iv) ஆமெனில், அதற்கு அடிப்படையாயமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

* 1.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— இலங்கையில் துரிதமாக அதிகரித்து வருகின்ற குற்றங்களைத் தடுத்தல் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய தாமதங்களைத் தவிர்த்தல் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

இலங்கையில் அதிகரித்து வருகின்ற குற்றங்களை தடுத்தல் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய தாமதங்களை தவிர்த்தல் என்பன இந்நாட்டு மக்களின் முதன்மையான தேவையாக மாறியுள்ளதாலும்,

அது தொடர்பாக அதிக கவனம் செலுத்தி தீர்வு காண்பதற்கான பொறுப்பு இப் பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாலும்,

பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து தகுந்த விதப்புரைகளை சமர்ப்பிக்கும் பொருட்டு பாராளுமன்ற தெரிகுழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

(அ) கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றங்களின் இயல்பு, அவ்வாறு குற்றங்கள் இடம்பெறுவதற்கு ஏதுவாயமைந்த விடயங்கள், குற்றச் செயல்களைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தேவையான சட்ட ஏற்பாடுகள் மற்றும்/அல்லது திருத்தங்கள்,

(ஆ) குடியியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் ஏற்படக்கூடிய தாமதங்களை தவிர்க்கும் பொருட்டு பின்பற்ற வேண்டிய பொருத்தமான நடைமுறைகள் மற்றும் புதிதாக விதிக்கப்பட வேண்டிய மற்றும்/அல்லது திருத்தங்களுக்குட்பட வேண்டிய சட்ட விதிகள் யாவை என்பதை விதந்துரைத்தல், மற்றும்

(இ) மேற்படி விடயங்களுக்கு இடைநேர்விளைவான மற்றும் குறித்த சந்தர்ப்பங்களின் போது அவசியமானதெனவும் பொருத்தமானதெனவும் குழு கருதுகின்றதும் குழுவினால் பரிசீலனை செய்யப்படுகின்ற விடயங்களுக்கு தாக்கம் செலுத்துகின்றதுமான வேறு விடயங்கள்,

2. (அ) மேற்படி குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும், மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 95 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழு இருபத்தொரு (21) உறுப்பினர்களை விஞ்சாத எண்ணிக்கையை கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை தீர்மானிப்பதற்கு;

(ஆ) ஆட்கள், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை வரவழைப்பதற்கு, பாராளுமன்றத்தின் அல்லது அத்தகைய குழு முன்னிலையில் தோன்றுமாறு எந்தவொரு ஆளுக்கும் கட்டளையிடுவதற்கு, அத்தகைய ஆட்கள் வசம் அல்லது கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற ஏதேனும் கடிதம், புத்தகம், அறிக்கை அல்லது ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுவதற்கு;

(இ) சாட்சியாளர்களை வாய்மொழி மூல விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலம் உண்மைத்தன்மையினை விசாரித்தறிவதற்கு அல்லது வேறு விதத்தில் உறுதி செய்து கொள்வதற்கு, குழுவின் தவிசாளர் அல்லது குறித்த பணிக்காக விசேடமாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஆளொருவரால் உறுதிப்பிரமாணம்/ சத்தியப்பிரமாணம் பெறப்பட்ட சாட்சியாளர்களை விசாரிப்பதற்கு;

(ஈ) குழுவுக்கு உதவி புரிவதற்கென ஏற்புடைய துறைகளின் வல்லுநர்களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெறுவதற்கு; மற்றும்

(உ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு, அத்துடன் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தொடர்ந்து கூட்டங்களை நடாத்திச் செல்வதற்கு;

தத்துவமுடையதாதல் வேண்டும்.

4. குழுவானது, தனது முதலாவது கூட்டம் நடத்தப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றத்தினால் தொடர்ந்தும் வழங்கப்படும் வேறு எந்தவொரு காலகட்டத்தினுள்ளும் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பா. 166/ ’15

2.

கௌரவ தினேஷ் குணவர்தன
கௌரவ காமினி லொக்குகே
கௌரவ பந்துல குணவர்தன
கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே
கௌரவ செஹான் சேமசிங்க
கௌரவ ஜானக வக்கும்புர
கௌரவ விஜித பேருகொட
கௌரவ கஞ்சன விஜேசேகர
கௌரவ நாமல் ராஜபக்ஷ
கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல
கௌரவ மனுஷ நாணாயக்கார
கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து
கௌரவ ஜயந்த சமரவீர
கௌரவ டி.வீ. சானக
கௌரவ திளும் அமுணுகம
கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண
கௌரவ பிரசன்ன ரணவீர
கௌரவ சிசிர ஜயகொடி
கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்
கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா
கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன
கௌரவ விமலவீர திசாநாயக்க
கௌரவ பியல் நிசாந்த த சில்வா
கௌரவ லொஹான் ரத்வத்தே
கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சனத் நிசாந்த பெரேரா

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

கௌரவ கனக ஹேரத்

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ குமார வெல்கம

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ சாலிந்த திசாநாயக்க

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நிதியமைச்சர் கௌரவ ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையின்மை,— அரசியலமைப்பின் 148 வது உறுப்புரைக்கிணங்க, பாராளுமன்றமானது பகிரங்க நிதிகளின் மீது பூரண கட்டுப்பாடு உடையதாகவிருத்தல் வேண்டுமென்பதனாலும்;

அரச நிதி முகாமைத்துவத்தின் பிரதானமான கருவியாக அமைவது வருடாந்த வரவு செலவுத் திட்டமாகுமென்பதனாலும்;

ஒதுக்கீட்டுச் சட்டமென்ற வகையில் இந்த உயர்சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய நிதிப் பெறுமதிகளை மிகவும் விபரமாகவும், வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும், உச்ச அளவிலான நம்பிக்கையை பாதுகாக்கும் வகையிலும், உண்மையாகவும் சமர்ப்பிக்கவேண்டியது நிதியமைச்சரின் பிரதானமான கடமையும் பொறுப்புமாகுமென்பதனாலும்;

நிதியமைச்சர் கௌரவ ரவி கருணாநாயக்க பாராளுமன்றத்தையும் பொதுமக்களையும் தவறாக வழிநடத்துகின்ற மோசடியான தவறாக எடுத்துக்காட்டுகின்ற வரவு செலவுத் திட்டமொன்றை இத்தடவை (2016) இந்த உயர்சபைக்குச் சமர்ப்பித்துள்ளதனாலும்;

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவம் (பொறுப்புகள்) சட்டத்தின் 13 ஆம் வாசகத்தின்படி நிதி அமைச்சரால் இவ்வுயர்சபைக்கு 2015 ஏப்பிரல் 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையின் 85 ஆம் பக்கத்தில் "சாதாரண கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய துறைகளுக்கான முழுமொத்த முதலீடு ரூபா 164 பில்லியனாக இருப்பதுடன், இது 2013 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ரூபா 157 பில்லியன் முதலீட்டை விட ரூபா 7 பில்லியன் அதிகரிப்பாகும்" என்பதனாலும்;

"சாதாரண கல்விக்காக 2014 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட அரச முதலீடு ரூபா 117 பில்லியனாக இருப்பதுடன், இது 2013 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ரூபா 108 பில்லியன் முதலீட்டை விட 8% அதிகரிப்பாகும்" என்பதனாலும்;

2016 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ii ஆம் தொகுதியில் 218 மற்றும் 219 ஆம் பக்கங்களின்படி 2015 ஆம் ஆண்டில் சாதாரண கல்விக்கான மூலதனச் செலவினம் ரூபா 17.8 பில்லியனில் இருந்து 2016 ஆம் ஆண்டில் ரூபா 18.3 பில்லியன் வரை சுமார் ரூபா 0.5 பில்லியனால் மிகச் சிறிதளவு அதிகரித்துள்ளதனாலும்;

இலங்கை வரவு செலவுத்திட்ட வரலாற்றில் அசாதாரணமான மற்றும் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் 2016 ஆம் ஆண்டில் சாதாரண கல்விக்கான மீண்டுவரும் செலவினம் 278% ஆல் (2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 44 பில்லியனிலிருந்து ரூபா 167 பில்லியன் வரை ரூபா 123 பில்லியனால்) ரொக்கட் வேகத்தில் அசாதாரணமான விதத்தில் அதிகரித்துள்ளதனாலும்;

இவ்வாறு அசாதாரணமான மற்றும் வியத்தகு விதத்தில் மீண்டுவரும் செலவினம் அதிகரிப்பதற்கு, சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் எந்தவொரு வரவுசெலவுத் திட்டத்திலும் குறிப்பிடப்படாதிருந்த “அரசாங்க முதலீடுகளை பேணிவருவதற்கான செலவு - காணி மற்றும் கட்டிடங்கள்” என ரூபா 121,352 மில்லியன் அல்லது ரூபா 121 பில்லியன் கணக்குக் குறிப்பொன்று காணப்படுகின்றமையே பிரதான காரணமாவதனாலும்;

இது மீண்டுவரும் செலவினமாக காட்டப்பட்டுள்ள போதிலும் உண்மையிலேயே 2016 ஆம் ஆண்டில் செலவிடப்படும் பணத் தொகையல்ல என்பதனாலும்;

2016 ஆம் ஆண்டில் கல்விக்காக செலவிடப்படாத ரூபா 1210 கோடிக்கும் அதிகமான பணத் தொகை மீண்டுவரும் செலவாக குறிப்பிடப்பட்டுள்ளதன் மூலம் கல்வி அமைச்சின் செலவினத் தலைப்பு போலியான விதத்தில் “பெரிதாகக் காட்டப்பட்டு” இவ்வுயரிய சபைக்கு பொய்யான தகவல்கள் மற்றும் தரவுகளை சமர்ப்பித்துள்ளதன் மூலம் சபையின் நம்பிக்கையை முற்றாக இழந்துள்ளதனாலும்;

தொடர்ந்தும் நிதி அமைச்சர் அப்பதவியில் பணியாற்றுகின்ற இயலுமை பற்றிய நம்பிக்கையை இழந்துள்ளாரென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.